முகப்பு :

திருவேற்காடு,
அருள்மிகு தேவி கருமாரியம்மன்
திருக்கோயில், கோபுரத் தோற்றம்

# திருக்கோயில்

மாலை: 22 | சித்தார்த்தி ஆண்டு-மார்கழித் திங்கள்-டிசம்பர்-1979 | மணி: 3

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் '' சந்தாதாரர் '' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் [PINCODE] எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

திருச்செந்தூர் ஜெயந்திநாதர் விடுதித் திறப்பு விழாச் சிறப்புரை
—மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்.

வைணவத் திவ்விய தேசங்கள்
—டாக்டர் திரு ந. சுப்புரெட்டியார், எம்.ஏ., பிஎச்.டி.

இந்தியத் தத்துவ ஞானம்
பேராசிரியர் திரு கி. இலட்சுமணன், எம்.ஏ.

உடையவரும் வடுக நம்பியும்
—திரு இராஜகோபால் இராமாநுசதாசன்

வைணவத் திவ்விய தேசங்களும், பெருமாள்—தாயார் திருப்பெயர்களும்.
—ஆசிரியர்

ஆறாறு தத்துவங்கள்
—ஆசிரியர்

தசரதன் பெற்ற சாபம்
—திரு ம.அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.

தமிழ்ச் சமர்த்தர்
—திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம். ஓ. எல்

மதுர கவிகள்
—மகாவித்துவான் பி.ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

பேதையும் மேதையுமான சீதை
திரு புரிசை சு.முருகேச முதலியார்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

# திருச்செந்தூர் ஜெயந்திநாதர் விடுதித் திறப்புவிழாச் சிறப்புரை

அறநிலைய அமைச்சர்

மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள்

தமிழகத்திலே மிகப் புகழ்பெற்ற திருக்கோயில்களில், குறிப்பாக முருகன் கோயில்களில், பழநி திருச்செந்தூர் திருத்தணி என எண்ணிடப்பட்டு, வரிசைப்படுத்தப்பட்ட கோயில்களில், திருச்செந்தூர் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கின்ற ஒரு ஆலயமாகும். இந்த ஆலயத்திற்குப் பல்வேறு வரலாற்றுச் சிறப்புகள் உண்டு. பழம் பெருமை பேசுகின்ற புராதனக் கலைகள் உண்டு. ஐதீகங்கள் உண்டு. என்றாலும் சூரபத்மனை எதிர்த்துப் போராடி முருகன் வென்று, வெற்றி காணக்கூடிய இடமாக இந்தத் திருத்தலம், நம்மாலே கொண்டாடப்பட்டு வருகிறது. வெற்றி பெற்ற பெருமான் என்ற பெயரினாலேதான், பக்தர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்டிருக்கின்ற விடுதிக்குக்கூட, ஜெயந்திநாதர் விடுதி என்று பெயரிட்டிருக்கிறார்கள். அதிலே 36 அறைகளைக் கொண்டதாய், கீழ்த் தளத்திலே அமைக்கப் பெற்றிருக்கின்ற அந்தக் கட்டிடம் இன்றைக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து மேலும் இரண்டுக்கு, இன்னும் 72 அறைகள் அதிலே அமைக்கப்பட இருக்கின்றன. இதற்காக 8 லட்சத்துக்கு மேல் செலவு செய்து, இந்த அறைகள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட வசதிகளை இந்தத் திருக்கோயிலுக்கு வருகிற பக்தர்களுக்கு, பெருமக்களுக்கு, குடும்பத்தோடு வருகிறவர்களுக்குச் செய்துதர வேண்டிய பெறுப்பும் கடமையும், ஆலய நிர்வாகிகளுக்கும் அரசுக்கும் இருக்கிறது என்பதை, ஆணையர் அவர்கள் தமது தலைமை உரையிலே இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

இதைப் போன்ற ஆலயப் பிரச்சினைகளைப் பற்றித் தமிழகத்திலே சமீப காலத்தில் பெரும் அளவிலே பேசப்பட்டு வருகிற ஒரு நிலையை, நாம் உருவாக்கியிருக்கிறோம். அதிலும் 76-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு பெரிய பிரச்சினையாக, தமிழகத்தில் ஆலய நிர்வாகம் பற்றிய கருத்துக்கள் பலவாறாகப் பல்வேறு துறைகளினாலே, பல்வேறு இடங்களிலே தெரிவிக்கப்படுகின்றன. அதற்குக் காரணம் அதற்கும் முன்னாலேயே ஒரு எட்டாண்டு, ஒன்பது ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள், அறங்காவலர்களை நியமித்து அந்த அறங்காவலர்கள் எந்த வகையிலே அந்த அறநிலையங்களுடைய நிர்வாகத்தை நடத்தினார்கள் என்பதைப் பற்றிப் பொதுமக்களும் பக்தர்களும் அதைத் தெரிந்து கொண்டிருக்கிற ஆய்வுக்குழு ஏற்பட்ட காலத்தில், பல்வேறு தவறுகள், அங்கு தெரிந்தே செய்யப்பட்ட ஊழல்கள், நடைபெறுகின்ற சில தில்லுமுல்லுகளைத் தமிழக மக்களாலே உணர முடிகிறது. அதையொட்டி அறங்காவலர் உறுப்பினர்கள் குழு கலைக்கப்பட்டு, அதிகாரிகளுடைய பொறுப்பிலே ஆலயங்கள் அன்றைக்கு ஒப்படைக்கப்பட்டன. இன்றைக்கு 77ஆம் ஆண்டுக்குப் பிறகு மக்களாலே தேர்ந்தெடுக்கப்பெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைத்ததற்குப் பிறகு, இந்த அறங்காவலர்கள் மீண்டும் நியமிக்கப்பட்டாக வேண்டும்; அதிகாரிகள் கையிலேயே அல்லது ஒரு அதிகாரியிடத்திலேயே, பல்வேறு ஆலயங்களுடைய பொறுப்புக்களை ஒப்படைத்த காரணத்தினால் நிர்வாகங்கள் சரியாக நடைபெற முடியவில்லை என்ற நிலை காரணமாக, உடனடியாகவும் அவசரமாகவும் அவசியமாகவும் அறங்காவலர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. அந்தக் காரணத்தினாலேயே இந்தத் துறையைத் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், ஓராண்டு காலம் தன்னிடத்திலே வைத்திருந்தார்கள் என்பதை, நான் தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக ஆலயங்கள் நன்றாக வாழ்ந்து விளங்கி, வளர வேண்டும் என்று விரும்புகிற பெரு மதிப்பிற்குரிய பொதுமக்களுக்கு, பக்தர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குப் பொறுப்பிலே இருக்கின்ற அரசு, அதில் அமர்ந்திருக்கின்ற அமைச்சர்கள், எந்த லட்சியங்களை அல்லது எந்தக் கொள்கைகளைத் தங்களுடைய இன்னல்களுக்கிடையே முக்கியமாகக் கொண்டிருக்கிறார்கள், உள்ளங்களில் தேக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்ப்பதைவிட, அரசுப் பொறுப்பிலே ஒருவர் வந்ததற்குப் பிறகு அவர்கள் தங்க

ளுடைய சொந்தக் கருத்துக்களை ஒரு இடத்திலே எடுத்து வைத்துவிட்டு, எந்த மக்களுக்காக அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்களோ, அந்த மக்களுடைய தேவைகளை முன்நிறுத்தி, முன்னிலையில் வைத்து, அவர்களுக்குப் பணியாற்ற வேண்டியகடமைக்கு, கண்டிப்பான கடமைக்குக் கட்டளையிட்டுக் கீழ்ப் படிந்திருக்கிறார்கள் என்ற உண்மையைத் தெளிவாக நான் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் துறையை ஓராண்டு காலம் தன்னுடைய கையிலே வைத்துக் கொண்டிருந்ததற்குள்ள அடிப்படைக் காரணங்கள், இந்த அறநிலையங்களிலே, அறக்கட்டளைகளிலே, ஆலயங்களிலே கடந்த காலங்களில் மிகப் பெரிய தவறுகள் நிகழ்ந்து ஆலயச் சொத்துக்கள், அறக்கட்டளைச் சொத்துக்கள் துர்விநியோகப் படுத்தப்பட்டு, தவறாகப் பயன்படுத்தப்பட்டு, அதிலே கிடைக்கவேண்டிய வருமானங்கள் முறையாக ஆலயங்களுக்கு வந்து சேராமல் தடுக்கப்பட்டு, தனியாரால் அபகரிக்கப்பட்டு, அதிலேயிருந்து லாபம் பெறுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதை எப்படியாவது போக்கியாகவேண்டும் என்ற காரணத்தினாலேதான், முதலமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பை அந்தத் துறையைத் தன்னிடத்திலே வைத்திருந்தார்கள். ஒரு முதலமைச்சர் ஒரு துறையைத் தன்னகத்தே வைத்திருந்தார் என்றால், அந்த அரசாங்கத்தில் அல்லது அமைச்சரவையில் அதற்கு ஒரு முக்கிய அந்தஸ்தும் பெருமையும் கிடைக்கிறது என்பதைச் சாதாரணமாக அரசியல் தெரிந்தவர்கள், நிர்வாகம் தெரிந்தவர்கள் உணர்ந்து கொள்ள முடியும். ஆகவே ஓராண்டுக் காலத்திலே அவர்கள் பல்வேறு கோப்புகளை நடவடிக்கை எடுத்துப் பல்வேறு ஆலயங்களிலே நடைபெற்ற சம்பவங்களையெல்லாம் கவனித்துப் பார்த்து, இதில் மிகப் பெரிய சிக்கல்கள் உருவாக்கப்பட்டிருக்கின்ற ஒரு துறை என்பதை உணர்ந்து, அவர்களுக்கு இருந்த அதிக வேலைப்பளுவின் காரணமாக இதை, அதிக துறைகளை ஏற்றுக்கொள்ளாத ஒரு அமைச்சரிடத்திலே தரவேண்டும் என்று எண்ணி, அவர்கள் என்னிடத்திலே இந்தப் பொறுப்பை ஒப்படைத்தார்கள்.

இந்தத் துறையை நான் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு காரணங்களில், பல்வேறு இடங்களில், இந்த அறநிலையங்களுக்கிடையே இதுவரை நடைபெற்று வந்திருக்கிற நடைமுறைகளை நிர்வாகங்களை ஆழ்ந்து பரிசீலித்துக் கவனித்துப் பார்த்து, நான் சில உண்மைகளை இந்த நாட்டிற்குத் தெரிவிப்பதில், யாரும் என்னைத் தவறாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்ற நல்லுணர்வோடு, பக்தி உள்ளம் படைத்த பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற உணர்விலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய அறங்காவலர் ஒருவர் பேசிய பொழுது, இலஞ்சிப் பகுதியிலே வாழ்ந்த பெருமக்கள், மரியாதைக்குரிய பெரியவர்கள் ''நீங்கள் ஒரு விபரத்தினைக் கொண்டு பெரியாருக்கு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறீர்கள்; இன்றைக்கு அறங்காவலர்களாகப் பக்திமான்களை நியமித்திருக்கிறீர்கள், இது எப்படி சரியாகும்'' என்கிற கருத்தை இங்கே தெரிவித்தார்கள். அந்தக் கருத்து தெரிவிக்கப் பட்டுவிட்ட காரணத்தினாலே அதற்கு விளக்கம் கொடுக்கவேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலிலே தந்தை பெரியார் கூறிய ஒரு உண்மையை இந்த நாட்டு மக்கள் தெரிந்திருப்பார்கள் என நினைக்கிறேன். தந்தை பெரியார் அவர்களைப் பாராட்டுகின்ற காரணத்தினாலேயே ஏதோ இந்த நாட்டிலேயே வாழ முடியாத அஃறிணைப் பொருள்களாக மனிதர்கள் கருதப்படுவார்கள் என்ற ஒரு எண்ணம், சாதாரண முறையிலே இந்த நாட்டிலே பழக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். 'பெரியார்' யார்? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், எங்களைப்போன்ற அவருடைய தொண்டர்களைக் கேட்காதீர்கள். உத்தமர் காந்தியடிகள் இன்றைக்கு இல்லை. அதனாலே அவரிடத்திலே கேட்க முடியாது. மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இன்றைக்கு இல்லை, அதனாலே அவரிடத்திலே கேட்க முடியாது. பெருந்தலைவர் காமராஜர் இன்றைக்கு இல்லை, அதனாலே அவர்களிடத்திலே கேட்க முடியாது. அவர்கள் எல்லாம் அரசியல் வாதிகள். அதனாலே அவர்களிடத்திலேயிருந்து கேட்கக் கூடிய கேள்விகளுக்கு நம்பிக்கை பிறக்காது என்று நீங்கள் எண்ணிவிடுவீர்களானால், இந்த நாட்டிலே மதங்கள் மூலமாக ஆத்மீகத்தை வளர்க்கின்ற பெரியவர்கள், அடிகளார்கள், மதத் தலைவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களை நாம் இன்றைக்கு மதித்துக் கொண்டிருக்கிறோம், வணங்கிக் கொண்டிருக்கிறோம். அத்தகைய மதத் தலைவர்களை அழைத்து, தயவு செய்து கேளுங்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளாரிடத்திலே போய், தந்தை பெரியார் யார் என்று கேளுங்கள். அல்லது கோவையிலே பேரூரிலே வாழுகின்ற சாந்தலிங்க அடிகளாரிடத்திலே போய், தந்தை பெரியார் யார் என்று கேளுங்கள். அவர்கள் எல்லாம்கூட கொஞ்சம் தமிழுணர்வு படைத்தவர்கள், கொஞ்சம் நல்லுணர்வு படைத்தவர்கள், மக்கள் திருந்தவேண்டும் என்கின்ற உணர்வுக்கு ஆட்பட்டவர்கள் என்று எண்ணுவீர்களேயானால், திருவாவடுதுறை ஆதீனத்தைப் போய்க் கேளுங்கள், தருமபுரம் ஆதீனத்தைப் போய்க் கேளுங்கள், இன்னும் சரியாகச் சொல்லப்போனால், நம்முடைய மதிப்பிற்குரிய சங்கராச்சார்ய சுவாமிகளைப் போய்க் கேளுங்கள். இன்னும் சொல்லப் போனால் அகோபில ஜீயரைப் போய்க் கேளுங்கள். அவர்கள் தந்தை பெரியாரைப் பற்றி என்ன சொல்லுகிறார்கள்? என்பதைத் தயவு செய்து, இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கிற இந்தப் பெரியோர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தந்தை பெரியார் இந்தக் கோயில்

களிலிருந்து, ஆலயங்களிலிருந்து, சுவாமிகளிலிருந்து ஏதோ அருள் பெற்றவர்கள் எல்லாம் துன்பம் விளைவித்து விட்டார்கள், கேடு விளைவித்து விட்டார்கள், கொடுமை விளைவித்து விட்டார்கள், அதனாலேயே அவர்களையெல்லாம் ஒழியுங்கள் என்றா சொன்னார்கள்? தயவு செய்து தமிழ்ப் பெருமக்கள் இதை மனதிலே தங்க வைத்துக் கொள்ளவேண்டும். தந்தை பெரியாரைப் போன்றோர் கோபம் அனைத்தும், இந்த நாட்டு மக்களை நாலாந்தர மக்களாக, ஐந்தாந்தர மக்களாக, அடிமைகளாக, தாழ்த்தப்பட்டவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக, தெருவிலே நடமாடமுடியாதவர்களாக, பக்கத்திலே வர முடியாதவர்களாக, கோவிலுக்குள்ளே நுழைய முடியாதவர்களாக, மனித சாதியையே பிரித்து வைத்த கொடுமையை ஆண்டவன் பெயரால் செய்து வைத்திருக்கிறார்களே என்பதுதான். இது அடுக்குமா? நியாயமா? என்று பேசினாரே தந்தை பெரியார், அதைத்தான் புத்தரும் கேட்டார், உத்தமர் காந்தியடிகளும் கேட்டார். அதற்குப் பின்னால் இராமகிருஷ்ணரும் கேட்டார். அவருக்குப் பின்னும் அவருடைய சிஷ்யர் விவேகானந்தரும் கேட்டார். தந்தை பெரியார் இதைத் தவிர வேறு ஒன்றும் கேட்டுவிடவில்லை. இந்தக் கேள்வியைத் தவறு என்று சொன்னால் இன்றைக்கு இங்கே உட்கார்ந்திருக்கிற பெருமக்களில் பலபேர் இந்த எல்லைக்குள் வந்திருக்க முடியாது என்பதைத் தயவு செய்து மனதில் கைவைத்துப் பாருங்கள். இங்கே அறங்காவலர்களிலே ஒருவர் பேசினார், இதை விளக்கப்படுத்தியெல்லாம் பேசுவதற்கு நான் உண்மையிலேயே கூச்சப்படுகிறேன், வெட்கப்கிறேன். வருத்தப்படுகிறேன். அவர் தாழ்த்தப்பட்ட குடிமகனைச் சார்ந்தவர். அவருக்கு என்ன குறை? இங்கே பார்க்கிறீர்கள். தந்தை பெரியார் தோன்றவில்லையானால் இன்றைக்கு அறங்காவலராக இந்த எல்லைக்குள்ளே நிற்க முடியாது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்தக் கட்சிக்காரர்களை நீங்கள் அறங்காவலர்களாகப் போடலாமா என்று கேட்கின்ற பெரியவர்களுடைய காலிலே விழுந்து கேட்கிறேன். உங்களுடைய சுட்டு விரலை அசைத்திருந்தால், தமிழகத்தில் இந்தக் கொடுமையை ஒழித்திருக்க முடியும். ஆண்டவன் சந்நிதிக்கு முன்னாலே அனைவரும் சமம் என்பது, உலகம் முழுவதும் வழங்கிக் கொண்டிருக்கின்ற வழக்கு. சாதி பேதமில்லை, வர்க்கபேதமில்லை ஏழை பணக்காரன் என்ற பேதமில்லை. மனிதன் என்றால் அவன் கிறித்தவன், மனிதன் என்றால் அவன் இஸ்லாமியன், மனிதன் என்றால் அவன் புத்தன், பௌத்த மதத்தைச் சார்ந்தவன். மனிதன் என்றால் அவன் சைன மதத்தைச் சார்ந்தவன். ஆனால் மனிதன் என்றால் அவன் இந்து மதத்தைச் சார்ந்தவன் என்று நம்மாலே சொல்ல முடிகிறதா? மார்தட்டிச் சொல்ல முடிகிறதா? உலகத்திலே புத்த மதம் வளர்கிறது. கிறித்தவ மதம் வளர்கிறது, இஸ்லாமிய மதம் வளர்கிறது, நம்முடைய மதம் சாய்ந்து கொண்டிருக்கிறது. தேய்ந்து கொண்டிருக்கிறது என்றால் என்ன காரணம்? சிந்தித்தீர்களா? அதைத்தான் தந்தை பெரியார் சொல்லுகிறார்? வேறு ஒன்றையும் தெரிவிக்க வில்லை. இது ஆண்டவன் சொன்னான் என்று சொன்னால், இது ஆண்டவனுடைய கட்டளை என்று சொல்வார்கள், அவனவன் தலைவிதி என்று சொல்வார்கள், அப்படி ஆண்டவன் விதித்த தலைவிதியானால், நான் அந்த ஆண்டவனை மறுப்பேன். நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்! என்றுதான் சொன்னாரே தவிர, ஆண்டவன்மீது அவருக்கென்ன தனிப்பட்ட கோபமா! இதைத் தந்தை பெரியார் மட்டும் சொல்லவில்லை. தார்மீக வள்ளலார் சொன்னார். அதற்கு முன்னாலே திருமூலர் சொன்னார். அதற்கு முன்னாலேயிருந்த நாயன்மார்கள் எல்லோரும் சொன்னார்கள். நந்தனை உள்ளே வரக்கூடாது என்று சொன்னவர்கள், மறுப்பவர்கள் எல்லாம் நமது சைவப் பெரியார்கள் அல்லவா? எதிர்த்தவர்கள் சைவப் பெரியார்கள் அல்லவா? ஏன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே பெரியோர்கள் ''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்'' என்று சொன்னாரே, மனித சமுதாயத்திலே ஒருவன் பிச்சை எடுத்து வாழுகின்ற தகுதியைப் பெற்றிருக்கிறான், அவனை அதற்குத்தான் ஆண்டவன் படைத்தான் என்று யாராவது கூறினால், அங்ஙனம் படைத்த ஆண்டவனே எனக்குத் தேவையில்லை என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னாரே, அவரை நாம் வெறுக்கிறோமா! நீங்கள் தந்தை பெரியாரை முழுவதும் சரியாகக் கண்டு கொள்ளவில்லை. தந்தை பெரியார், யாரோ நாத்திகர்களுக்காக வாதாடினார் என்று எண்ணாதீர்கள், அவர் நாத்திகர்களுக்கும் வாதாடினார், ஆத்திகர்களுக்கும் வாதாடினார். மனித சமுதாயத்திற்காகப் போராடினார். நான் இன்னும் ஒரு கருத்தைச் சொல்கிறேன். பல்வேறு நேரங்களில் பல்வேறு விழாக்களிலே சொல்லிக் கொண்டிருக்கிறேன். மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் சந்நிதியிலே ஆடி வீதியிலே திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களை வைத்துக் கொண்டு பேசினேன், சொன்னேன். திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்திலே திருப்புகழ் விழாவிலே அருணகிரிநாதர் விழாவிலே கேட்டேன், நான் அந்தப் பெரியவர்களிடத்தில் கேட்கிறேன், தந்தை பெரியார் அறுபதாண்டுக் காலம் தமிழகத்திலே பணியாற்றினார், உழைத்தார், அவருடைய குடும்பத்திற்காக உழைக்கவில்லை. இன்றைக்கு நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, அறங்காவலர்களாக யாரையோ போடவேண்டுமென்று, அவர்கள் எல்லாம் இருந்த காலத்திலே இந்த ஆலயங்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்ட சரித்திரங்கள், வரலாறுகள், கணக்குகள் எங்களிடத்திலே இருக்கின்றன. அதற்காக இன்றைக்குத் தீவிர நடவடிக்கை எடுக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. அதற்காக ஒரு டெபுடி கலெக்டர் அந்தஸ்தில் ஒரு அதிகாரியை நியமிக்க இருக்கிறோம். அவர் ஒவ்வொரு அறக்கட்டளைகளிலும், கோயில்களிலேயும், ஒதுக்கப்பட்ட அறக்கட்டளைகள் முறையாக நடத்தப்பட்டதா? முறையாகக் குத்தகைக்கு விடப்பட்டதா? எதிர்த்து வழக்கைப் போட்டுக்

கொண்டிருக்கின்ற பெரியவர்கள், சீமான்கள், அதற்கு உரிய பணத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார்களா? என்பதைப் பரிசீலிக்கப் போகிறார்கள். நான் இந்தத் திருநெல்வேலி மாவட்டத்திலே சொல்கிறேன், பிள்ளையன் கட்டளை என்று ஒரு மிகப் பெரிய அறக் கட்டளை இருக்கிறது. இன்றைக்கு யார் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறீர்கள்? இங்கேயிருக்கிற அறங்காவலர்கள் அல்ல. நான் அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்வதற்காக அல்லது அடையாளம் காட்டுவதற்காகப் பக்தர்கள் என்னை மன்னிக்க வேண்டும். நிலவு போம் காலத்திலிருந்து இரவு வரை ஆண்டவனை வணங்கிக் கொண்டிருக்கின்ற பக்த கோடிகள்தான் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே 60 ஆண்டுக்காலம் தந்தை பெரியார் இந்த நாட்டிலே பணியாற்றினார். சில கருத்துக்களை எடுத்துவைத்தார். அந்தக் கருத்துக்களுக்கு அப்பொழுது யார் சொந்தக்காரர்களோ, யார் அதைப் புகுத்தினார்களோ அவர்களை எதிர்த்தார். எல்லோரையும் எதிர்க்கவில்லை. இவைகள் எல்லாம் ஆண்டவன் கட்டளை, கர்மத்தின்படி நடைபெற வேண்டிய சாத்திரத்தினுடைய கட்டளை; இதில் நீங்கள் பூராவும் பாவம் என்று சொல்லுகிற போது, அந்தப் பாவத்தை நான் செய்வேன் என்று பெரியார் சொன்னார். கடுமையாகப் பேசினார், கடுமையாக விமர்சித்தார். நான் கேட்கிறேன், வடக்கு மாநிலங்களிலே இன்றைக்கு ஆலயங்கள் அழிக்கப்பட்டுச் சிதைந்து போய்ச் சின்னாபின்னமாகிக் கிடக்கின்றதே, முஸ்லீம்களுடைய படையெடுப்பா? அல்லது வேறு சில கலாச்சாரங்களுடைய படையெடுப்பா? தமிழகத்திலே 60 ஆண்டுக்காலம் இவ்வளவு பெரும் படையை வைத்துக்கொண்டு ஒரு இயக்கத்தை நடத்திய பெரியார், இந்தத் திருச்செந்தூர் ஆலயத்தினுடைய ஒரு கல்லுக்குச் சேதாரம் விளைவித்தாரா? திருத்தணியிலே ஒரு கல்லைத் தொட்டிருப்பாரா? மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் மண்டபத்திலிருந்து ஒரு கல்லைப் பெயர்த்து எடுக்கச் சொன்னாரா? தஞ்சைப் பெரியகோயில் இன்றைக்கு வானுயர்ந்து, தமிழனுடைய பெருமையை உலகத்திற்குச் சொல்லிக் கொண்டிருக்கிறதே அதற்கு ஊறு விளைவித்தாரா? தயவு செய்து எண்ணிப் பாருங்கள். பிள்ளையாரை உடைக்கச் சொன்னார். கோயிலிலே இருக்கிற பிள்ளையாரைத் தொடாதே! அது பக்தர்கள் வணங்குகிற பிள்ளையார். என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு நான் எதிர்க்கின்ற எதிர்ப்பு என்பதற்காக நீ ஒரு பிள்ளையாரைப் போலச் செய்து கொண்டுபோய் உடை என்றார். என், நாம்கூடத்தான் விநாயகர் சதுர்த்திக்குப் பிள்ளையாரைச் செய்து தண்ணீரிலே கொண்டுபோய்ப் போடுகிறோம். பக்தர்கள், தயவு செய்து எண்ணிப் பாருங்கள். ஒரு மிகப் பெரிய சமுதாயம்தான் இந்தத் தவறுகளுக்குக் காரணம் என்று அவர் நம்பினார். அதை எதிர்த்தார். திருநெல்வேலி மாவட்ட்த்திலே தெரியும். நான் பெயரைச் சொன்னால் தவறு என்று நீங்கள் எடுத்துக் கொள்ள மாட்டீர்கள். மிகப் பெரிய விடுதலை வீரர். வ.வே.சு.ஐயர். ஆற்றல் மிக்க தமிழறிஞர். அப்படிப்பட்ட பெரும்புகழ்பெற்ற ஆற்றல்வாய்ந்த அறிஞர், விடுதலை வீரர், அவர் நடத்தினார் காங்கிரசினுடைய பணத்திலே குருகுலம். அதிலே பிராமணருக்கு என்று ஒரு இடம், பிராமணர் அல்லாதார்களுக்கு ஒரு இடம் என்று வைத்ததனால் அல்லவா, வம்பே வந்தது. இதைத்தான் பெரியார் கேட்டார். இன்றைக்குப் பெரியார் 60 ஆண்டுக்காலம் நாட்டிலே செய்த பணியின் விளைவாக நமது ஆலயங்களுக்கோ, வேறு நம்முடைய கலாச்சாரங்களுக்கோ, சின்னங்களுக்கோ ஒரு சிறு துரும்பு அளவாவது நஷ்டம் ஏற்பட்டதா? தீங்கு ஏற்பட்டதா? நினைத்தால் அவராலே செய்திருக்க முடியாது என்று கருதுகிறீர்களா? அவரிடத்திலே எப்படிப்பட்டவர் இருந்தார்கள்? எனக்கு முட்டாள்தான்வேண்டும் என்று கேட்டபொழுது நான் முட்டாள்தான் என்று சொன்ன ஆயிரக்கணக்கான தொண்டர்கள், உயிரைத் தியாகம் செய்யத் தயாரான தொண்டர்களை அல்லவா அவர் வைத்திருந்தார். தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். ஏதோ தந்தை பெரியார் இந்த நாட்டிலே நம்மையெல்லாம் மனிதர்களாக ஆக்கினார். அதை மறந்துவிட வேண்டாம். அவரைப் போல் விடுதலை இயக்கத்திலே பாடுபட்ட தேசத் தலைவர்களை அந்த வரிசையிலே வைத்துப்பார்த்தால் அவருக்கு ஈடு இணையானவர்கள் இந்தியாவில் இலர் என்று தெரியலாம். வைசியர்கள் தெருவில் நடக்கக்கூடாது என்று சொன்னார்கள். அந்தச் சமுதாயத்தில் அதற்குத் தமிழ்நாட்டிலேயிருந்து கிடைத்த தலைவன் தேசிய காங்கிரஸ் இயக்கத்திலே தந்தை பெரியாரும் அவருடைய துணைவியும் அவருடைய சகோதரியும் அல்லவா? அந்தத் தெருவிலே நடப்பதற்கும்தான் இயக்கம் நடத்தினார். ஆகவே தந்தை பெரியாரைப்பற்றி நாம் ஏதோ தவறாக எண்ணிக்கொண்டு, அந்தக் கொள்கையையும் புரிந்து கொள்ளாமல், நம்முடைய கொள்கையையும் புரிந்து கொள்ளாமல், இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கக் கூடாது என்பதற்காகத்தான், பணிவோடு இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற ஒரு அவசியம் ஏற்பட்ட காரணத்தினாலேயே இந்த இடத்திலே நான் விளக்கித் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டிலே இதற்கு முன்னாலே ஆலயங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பை விட அதிக அளவிலே பாதுகாப்பு ஏற்படுத்தப்படவிருக்கிறது என்பதை நான் உளத் தூய்மையோடு சொல்கிறேன். நான் ஆண்டவனை உள்ளேபோய் வணங்குகிறேனா இல்லையா என்பது அல்ல, இருக்கிற இடத்திலே ஆண்டவனை வணங்குகிறவர்கள் நாங்கள். பெற்றெடுத்த அன்னையை, தந்தையை, கல்வி கற்றுக்கொடுத்த குருவை, உதவி செய்த நண்பனை, தோழனை, உயிர் தந்தவர்களை, உற்றார் உறவினரை, நல்லவர்களை, நாம் என்றைக்கும் ஏற்றித் தொழுது வணங்குவதுதான் நம்முடைய நாடு தமிழ்ச் சமுதாயத்தினுடைய பண்பாக ஆற்றலை வணங்குவதாக நமக்குச் சொல்லித் தந்திருக்

கிறார்கள். அப்படிப்பட்ட ஆண்டவனை வணங்குகிறவர்கள் நாங்கள் என்பதைத் தயவு செய்து நீங்கள் மனதிலே எண்ணிக் கொள்ளுங்கள். இன்றைக்கு இரண்டரை ஆண்டுக்கால ஆட்சியிலே, முன்னாலே நின்றவர்கள் இந்தத் தவறைச் செய்தார்கள் என்று ஏதோ ஒரு பெரிய அளவிலே இன்றைக்குப் பிரச்சாரம் செய்யப்பட்டுக்கொண்டு வருகிறது. நான் அதைத்தான் முதலிலே நடைபெற்ற கூட்டத்திலே சொன்னேன். அதற்கு முன்னாலே இதையெல்லாம் யாருமே கவனிக்காமல் இருந்தார்கள்.அன்றைக்குஇருந்தவர்கள்,என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதை நாளாவட்டத்தில் நாங்கள் தெரிவிக்க இருக்கிறோம். யாரும் தனிப்பட்டவர்களைக் குற்றம் சாட்டுவதற்கு அல்ல.

பக்தர்கள் என்றால் யார்? நான்என்னை விடச் சிறந்த பக்தன் இல்லையென்று என்னாலேயும் சொல்லிக் கொள்ளமுடியும். நான் எல்லா ஆலயங்களுக்கும் செல்வது உண்டு. ஆனால் என்னுடைய தாயை நான் முதலிலே வணங்குகிறேன். ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்று எனக்கு நீங்கள்தானே சொல்லித் தந்தீர்கள். இளங்கோவடிகள் ''ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்'' என்றுதானே சொல்லித் தந்தார். ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்றுதானே வள்ளுவர் ஆரம்பிக்கிறார். ஆகவே எந்தக் கடவுளை யார் வணங்குவது என்பது அவரவருடைய உணர்வைப் பொறுத்தது, கேள்வியைப் பொறுத்தது, உணர்ச்சிகளைப் பொறுத்தது, கருத்துக்களைப்பொறுத்தது. இன்றைக்கு நான் அமைச்சராக இருக்கிறேன். முருகன் கோயிலுக்கு மாத்திரம் அல்ல. மாரியம்மன் கோயிலுக்கும், முருகனைப்பெற்ற சிவன் கோயிலுக்கும், முருகனுடைய தாயார் மீனாட்சியம்மன் கோயிலுக்கும், இதற்கு நேர் மாறான வைணவக் கோயிலுக்கும், திருவரங்க நாதருக்கும், அதற்குப் பிறகு கள்ளழகர் கோயிலுக்கும் செல்கின்றேன். பக்தியைவிடச் சத்தியம் பெரிது. நாணயம் பெரிது. அன்பு இருக்கிறதா இன்றைக்கு, என்பதுதான் எங்களுடைய கேள்வி. ஒரு புறத்திலே பக்தி பக்தி, பக்தி என்று பக்திமான் வேஷம் போட்டுக்கொண்டு, இன்னொரு புறத்திலே ஊரைச் சுருட்டி உலையிலே போடுகிற அந்த வேலை, பக்தியின் பெயராலேயும் நடக்கக்கூடாது, அரசியலின் பெயராலேயும் நடக்கக்கூடாது. அதுதான் புரட்சித் தலைவருடைய லட்சியம். வேறு எதுவும்அல்ல. ஏதோ அரசியல் வாதிகளாக இருந்து, அவர்கள் அதைச் செய்துவிட்டார்கள், இதைச் செய்துவிட்டார்கள், அது ஏதோ மகா பெரிய குற்றம், கிரிமினல் குற்றம். இது ஆஷாடபூதியாக இருந்து வேஷம் அணிந்துகொண்டு பக்தர்களைப்போல் வேஷம் போட்டு, இவர்கள் செய்தால் அதெல்லாம் குற்றம் இல்லையென்றால், அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

அறநிலைய ஆணையரின் அனுமதியைப் பெறாமல் கட்டளைச் சொத்துக்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. ஐந்தைந்து ஆண்டுகளாகத் தள்ளிக் கொண்டே வருகிறார்கள், திடீரென்று 20 ஆண்டுகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் பல இலட்சக்கணக்கிற் பெறுமானமுள்ள சொத்துக்கள், மதுரை நகரத்தில் நாலு திரைப்பட அரங்குகள், அறக்கட்டளைச் சொத்துக்களை மறைத்தே காட்டப்பட்டிருக்கின்றன. அதற்கெல்லாம் வாடகை எவ்வளவு என்றால் 200 ரூபாய், 300 ரூபாய் தான். இன்றைக்கு அந்தச் சொத்தினுடைய மதிப்பு பல லட்சம். அவைகளையெல்லாம் ஐந்தைந்து ஆண்டுகளாகக் குத்தகைக்குக் கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். 67ஆம் ஆண்டிலே திடீரென்று 20 ஆண்டுகளுக்குக் குத்தகை விட்டிருக்கிறார்கள். 20 ஆண்டிலும் ஒரு ஐந்தாண்டுக்கு ஒருமுறை பரிசீலனை கூடக் கிடையாது. 300 ரூபாய். நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. இதற்குக் காரணம் யார் என்று சொல்ல விரும்பவில்லை. இவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே மதத்தைக் காப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கின்ற மடாதிபதிகள், அறங்காவலர்கள், அறக்கட்டளைக்குத் தலைவர்கள். இன்றைக்குத் திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிற அம்பாசமுத்திரம் போனால் கண்ணீர் விட்டுக் கதறுகிறார்கள். அறக்கட்டளையின் பெயராலே சொத்துக்களை அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள். கோயில் காரியம் நடைபெறவில்லை என்கிறார்கள். நாங்கள் எந்தக் கோயிலிலும், தவறான காரியங்கள் நடைபெறக் கூடாது என்பதற்காக இரவு பகலாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் உண்மையிலேயே அறத்தைக் காப்பவர்களா? அறம் என்றால் தர்மம், நீதி, நியாயம். பக்தி என்பது வேறு, தர்மம் என்பது வேறு. பக்தி என்பது மனிதன் அவனாகவே உருவாக்கிக் கொள்ளும் ஒரு நம்பிக்கை. மனிதனுக்குப் பக்தி எப்பொழுது வந்தது? இந்த மனிதன் தன்சுய நினைவாக, சுயஅறிவாகச் சிந்தித்துத் தவறுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத நேரத்திலே பக்தி வந்தது. சின்னப்பிள்ளைகளை நாம் பயமுறுத்துகிறோம் தெரியுமா? பூச்சாண்டி வந்துவிடுவான் தூங்கு, என்கிறோம். அஞ்சுகண்ணன் வந்து விடுவான் போய்ப் படுத்துக் கொள் என்கிறோம். அப்படியே மனிதன் குழந்தையாய் இருந்த காலத்திலே வந்தது பக்தி. இவனுக்கு அறிவுக்கு எட்டாத விவகாரங்களையெல்லாம் பார்த்துப் பயந்தான், அஞ்சினான், எது, ஏன் காரணம் தெரியவில்லை. மழை எப்படி வந்தது தெரியவில்லை. இந்த பூகம்பம் ஏற்படுகிறதே தெரியவில்லை. இவைகளெல்லாம் நம்மைக் கட்டுவிக்கிறது, ஆட்டுவிக்கிறது என்று நம்பினான், நம்பினதில் தப்பில்லை. இவைகள் நடப்பதற்கு மனம் தான், இது செய்கிற தவறுதான் காரணம். ஆகவே தவறைச் செய்யாதே! நீ தனியாக இருந்து கொண்டு செய்கிறாய் என்று எண்ணிக்கொண்டு செய்யாதே! என்னை ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கிறான், இருட்டறைக்குள்ளே நாலு சுவர்களுக்குள்ளேதான் ஒரு பெண்ணைக் கற்பழிக்கிறோம் என்று எண்ணிக்கொண்டிருக்காதே, என்னை ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கிறான், உனக்குத் தண்டனை கிடைக்கும், வழியிலே வருகிற மாது, கத்தியைக்காட்டிக் கள்ளத்தனம் செய்து தாலி

யைப் பறித்துக்கொள்கிறோம் என்றுஎண்ணாதே! உனக்கு மேலே தண்டனை கிடைக்கும். இன்னொருவன் இருக்கிறான். இன்று மனிதனைநல் வழிப்படுத்துவதற்குச் சமயங்கள் மார்க்கங்கள் ,பக்திகள் தோன்றியிருக்கின்றன். சரி. எனக்குப் பக்தி இருந்தால்தான் நல்வழி, நல்வழியிலே நான் நடப்பேன் என்று நம்புகிறவர்கள் பக்திமான்களாக இருப்பதில்தவறில்லை. எனக்கு இது இல்லாமலே நான் ஒழுங்காக இருப்பேன். முடிந்தால் நன்மையைச் செய்வேன். முடியவில்லையானால் மற்றவர்களுக்குத் தீமை செய்ய நினைக்கமாட்டேன். முடிந்தால் ஒருவனுக்கு உதவி செய்வேன். முடியவில்லையானால் மற்றவர்கள் உதவுவதைத் தடுக்கமாட்டேன். முடிந்தால் என் கையிலே இருப்பதைப் பிறருக்குக் கொடுப்பேன். முடியவில்லையானால் யாராவது கொடுப்பதைத் தெரியாமல் எடுத்துக்கொண்டு வர மாட்டேன். என்னால் முடிந்ததை இந்தச் சமுதாயத்திற்குச் செய்வேன். முடியவில்லையானால் ஒரு மனிதனுக்கு உபகாரம் செய்வேன். இங்கே நம்முடைய காலஞ் சென்ற சின்னப்பா தேவர் அவர்கள் இந்தச் சுற்று மண்டபத்தைப், பிராகார மண்டபத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர் உழைத்தார், சம்பாதித்தார், இந்த மக்களுக்கு நன்மை கிடைக்கவேண்டும், இந்த முருகக் கடவுளை அவர் நம்புகிறவர் அதனாலே இங்கேயும் செய்தார். பழனிக்கும் செய்தார். மருதமலைக்கும் செய்தார். இப்படிப் பலபேர் நம்முடைய நாட்டிலே பழம் பெருமையாக, வாழையடிவாழையாகச் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் ஒரு பக்கத்திலே இருக்கிறார்கள். இவ்வாறு, பணத்தைக் கொடுத்து இப்படியெல்லாம் மண்டபம் கட்டி வைக்க ஒருவர் ரூபாயைத் தர,ஒருவன் அதை ஒரு இடத்திலே காண்ட்ராக்ட் விட்டான். அதிலே லட்சரூபாய் காண்ட்ராக்டிலே 25,000 ரூபாயை எப்படி சிமிண்டிலே கலப்படம் செய்து மோசடி செய்வது, என்போரும் பக்தர்களாகத்தான் இருக்கிறார்கள். என்ன செய்வது? லட்ச ரூபாயைத் தேவர் தந்தார். அல்லது லட்ச ரூபாயைச் சிவந்திஆதித்தன் தந்தார். நம்மாலே முடிந்த அளவு நம்முடைய திறமையான உழைப்பைத் தருவோம் என்று யாராவது வருகிறார்களா? வருகிறவர்கள் யாராவது எண்ணி அப்படி உழைக்கிறார்களா? வருகிறார்களா? ஆண்டவனுக்காகத்தானே செய்கிறோம், என்று பெற்ற அன்னையைக் கூட விரட்டி விடுகிறோம் சில நேரத்திலே. அப்படிப் பட்டவர்களும்கூட ஆத்திரமடைகிறார்கள் எதற்கு? அன்றைக்குச் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் பெறுவதற்கு. பக்தி என்பது அவரவர்களுடைய நம்பிக்கைக்கு உரிய ஒன்று. சில நேரங்களில் நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக, நாம் தேர்ந்தெடுத்துக் கொள்கிற ஒரு முறையை ஒட்டி, வழிவழியாக நாம் பாதுகாத்து வருகிறோம். அதிலே யாருக்கும் அபிப்பிராய பேதம் இல்லை. இவன் கோயிலுக்குப் போகிறானா? இவன் முட்டாள். இவன் கோயிலுக்குப் போகாதவனா? இவன் அவனை விட முட்டாள் என்று சொல்லுகிற தத்துவம், இந்த நாட்டிலே இனிமேல் நடக்காத ஒன்று. அவரவர்கள் விபரம் தெரிந்து தேவையான வழியைத் தெரிந்து கொள்ளுகிற முறைகளைத் தவிர, இது ஒன்றும் நம்முடைய முன்னோர்கள் நமக்கு இதுதான் வழி என்று, நெறி என்று தந்து விட்டுச் செல்லவில்லை. என்னுடைய தகப்பனார் இந்துவாக இருந்தால் நான் ஒரு கிறித்தவனாக மாறுகிறேன். என்னுடைய தகப்பனார் இந்துவாக இருந்தால் நான் முஸ்லீமாக மாறுகிறேன். ஆகவே இவைகள் எல்லாம் வாழ்க்கை முறைகள். ஆனால் அறக்கட்டளை என்பதும், அறங்காவலர்கள் என்பதும் பக்தி உள்ளவர்களுக்குத் தான் சொந்தம் என்று யாராவது எண்ணினால் அந்த இலக்கணத்தைத் தயவு செய்து மாற்றிக் கொள்ளவேண்டும். நல்லவர்களாக இருக்க வேண்டும். உண்மையிலேயே சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும். ஆண்டவனை நினைக்கிறார்களோ நினைக்கவில்லையோ, ஒரு தெய்வ சக்திக்கு, இயற்கை சக்திக்கு பயப்படுபவர்களாக இருக்கவேண்டும். தீமை செய்யத் துணியாதவர்களாக இருக்க வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு ஏதோ முடிந்ததைச் செய்வோம் என்று எண்ணுகிறவர்களாக இருக்கவேண்டும். அந்தக் கருத்திலே தான், இன்றைக்கு நாங்கள் அறங்காவலர்களை நியமிக்கிறோம். அதைத்தான் அங்கேயும் சொன்னேன். இலஞ்சியிலே வாழ்கிற பெருமக்களாக இருந்தாலும் சரி, இங்கேகூட பல பேர் என்னுடைய மரியாதைக்குரியவர்கள் எல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள். 50பேரை அறங்காவலர்களாகப் போடமுடியவில்லை, 5 பேரைத்தான் போட முடியும் என்றுதானே பலபேர் முடிவெடுத்திருக்கிறார்கள். ஆதலால் அன்றைக்கும் நான் கேட்டுக் கொள்கிறேன். அரசின் சார்பிலே, முதல்வரின் சார்பிலே, அறங்காவலர்கள் எல்லோரும் இந்த 5 பேர் மட்டுமல்ல. இந்த ஆலயத்திற்கு வருகிற அத்தனை பக்தர்களும் அறங்காவலர்கள், நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எந்த இடத்திலே எப்பொழுது தவறு யார் கண்ணிலே பட்டாலும், யார் காதிலே கேட்டாலும், உடனடியாகத் தெரிவியுங்கள். கடுமையான நடவடிக்கையை எங்கள் அரசாங்கம் எடுக்கும். அதிலே தயவு தாட்சண்யமே கிடையாது. ஆனால் ஒரு கருத்தை, ஒரு தவறான கருத்தை மாற்றிக் கொள்ளவேண்டும், ஏதோ ஒரு பத்தாண்டுக் காலத்திற்குள்ளேதான் இந்த ஆலயங்களிலே ஊழல்கள் நடைபெற்றது, அதற்கு முன்னாலே அத்தனைபேரும் சற்புத்திரர்களாக இருந்தார்கள் என்ற ஒரு எண்ணத்தைத் தயவு செய்து மாற்றிக்கொள்ளுங்கள். 10 லட்சம் சொந்தக்காரர் சொத்து வைத்திருக்கிறார் என்று கொண்டுவந்து போட்டால், இதைப் பயன்படுத்தி, இன்னொரு 5 இலட்சத்தைச் சேர்க்கத்தான் பாடுபட்டிருக்கிறாரே தவிர, மாணிக்கவாசகரைப்போல், அரசன் கொடுத்த பணத்தில் ஆலயம் கட்டுவித்தவர்கள் இங்கே யாருமே கிடையாது. அதைத்தான் எப்படி ஆலயத்தின் சொத்தைக் கொள்ளையடிப்பது என்று எண்ணிப்பார்க்கிறார்கள். நாங்கள் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இல்லாதவர்கள் எல்லாம், ஏழைகள் எல்லாம் அயோக்கியன் என்ற இலக்கணத்தை, இனிமேல் இந்த நாட்டிலே நான் ஏற்றுக் கொள்ள

முடியாது. பணம் இருந்தால், வசதி இருந்தால் அவர்கள் எல்லாம் யோக்கியர்கள், இல்லாத வர்கள் எல்லாம் அயோக்கியர்கள், ஏழைகள் எல்லாம் அயோக்கியர்கள் என்ற இலக்கணத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியானால் இந்த நாடே குற்றவாளிக் கூண்டாகி விடும். அதனால்தான் சொல்கிறோம். அதனாலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறவர்கள் எல்லாம் உள்ளே வரக்கூடாது என்பது இலக்கணம் அல்ல. இன்றைக்குப் பார்த்தால் எங்களுடைய அமைப்பாளர்கள், எங்களுடைய முக்கியஸ்தர்கள் பலபேர் பெரிய பக்தர்களாக இருக்கிறார்கள், எனக்கு வந்து ஒருவரை அறிமுகப்படுத்துகிறார்கள். அவர் யார்? இவர்தான் அ.தி.மு.க. அமைப்பாளர். பெரிய விபூதிப்பட்டை, அதைவிடப் பெரிய குங்குமப் பொட்டு, அதிலே ஒரு சந்தனப் பொட்டு. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளர், இதை இன்றைக்கு நான் மறுப்பதில்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற இலட்சியத்தை இந்த நாட்டு மக்கள் கடைப்பிடிக்க நாம் பாடுபடுவோம் என்று. அதை அண்ணாவா சொன்னார்! திருமூலர் சொன்னார், சித்தர்களின் தலைவர் சொன்னார், அதை நம்முடைய குன்றக்குடி அடிகளார் அவர்கள் பெரியார் விழாவிலே நினைவூட்டினார்கள். இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே சித்தர்களின் தலைவர் திருமூலர் சொன்னார்''ஒன்றேகுலம், ஒருவனே தேவன்''என்று. அதை இந்த நாட்டிலே பரப்புகின்ற முயற்சியில் நாம் தோற்றுவிட்டோம். அதைப் பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்த அறிஞர் அண்ணா அவர்கள் தான், நாட்டிலே பரப்பினார்கள் என்று சொன்னார். இன்றைக்கும் சங்கராச்சாரியாரை நாம் ஏன் பாராட்டுகிறோம்? போற்றுகிறோம். அவர்கள் வாழ்க்கையிலே அனைத்தையும் துறந்துவிட்டுத் துறவியாக வாழ்கிறார். நீங்கள் அப்படிப்பட்ட துறவை யாரிடத்திலாவது பார்த்திருக்கிறீர்களா? துறவு மனப்பான்மையை மனிதன் ஏற்றுக்கொண்டால் அவனை இந்த நாடு புகழும், அவர் எங்கே வாழ்கிறார்? எங்கே படுக்கிறார்? எப்படி அலைகிறார்? அவரும் ஒரு பக்குவத்திற்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, மகான்களாக அவர் வருகிறார் என்றால், அவரைப் பார்த்து நாம் அந்த அளவுக்கு நம்மாலே துறக்க முடியுமா? ஆயிரத்தில் ஒரு பங்காவது அந்த எண்ணம் நம் உள்ளத்திலே வர வேண்டுமே அதற்காகத்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்கு ஏதோ பெரியாரின் சீடராக இருக்கவேண்டும் அல்லது கதர்ச் சட்டை போட்டவராக இருக்கவேண்டும் என்று எண்ணாதீர்கள். எந்தச் சட்டை போட்டவராக இருந்தாலும் சரி, உள்ளம் தூய்மையாக இருக்கவேண்டும். சட்டை வெள்ளையாக இருந்தால், சட்டை கலராக இருந்தால், சட்டை கைத்தறியாக இருந்தால், சட்டை கறுப்பாக இருந்தால் அதை வைத்து ஆளை எடைபோட்டு விடாதீர்கள். நீதிமன்றத்திலே நீதியைத் தரும் நீதிபதியே கறுப்பங்கியைத் தான் அணிந்து கொண்டு வருகிறார். கறுப்பைக்கண்டு ஏன் நாம் பயப்படவேண்டும்? அது மாத்திரமல்ல. நம்முடைய நாடே கறுப்புத் தான். அந்தப் பேதம் நமக்கு ஏன்? இன்னும் சொல்லப்போனால் கறுப்புதான் அழகு என்று இலக்கணமே இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இராமபிரானே கறுப்புத்தான். இன்னும் சொல்லப்போனால் உலக அழகி கிளியோபாத்திராவே கறுப்புத்தான். ஏன் கறுப்பைக் கண்டு உலகில் உள்ளோர் அஞ்சி நடுங்கவேண்டும்? தயவு செய்து நான் இங்கே இருக்கிற பெருமக்களுக்கும், பெரியவர்களுக்கும் பணிவோடு புரிய வைத்துக் கொள்கிறேன். நாங்கள் தெளிவாக இருக்கிறோம். தெளிவாக இருக்கிறோம் என்பது மாத்திரமல்ல, தூய்மையாகவும் இருக்கிறோம். தூய்மையாக என்பது மாத்திரமல்ல, இந்த நாட்டிற்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற நல்ல உணர்வோடு இருக்கிறோம். ஒரு காசு, சல்லிக்காசு இந்த நாட்டிலேயிருந்து மக்களுடைய பணமாக இருந்தாலும் சரி, ஆண்டவனுடைய உண்டியல் பணமாக இருந்தாலும் சரி, தொடக்கூடாது என்ற உறுதியோடு இருக்கிறோம். லட்சக்கணக்கிலே, கோடி கணக்கிலே சம்பாதித்துவிட்டு, அதை அள்ளிக் கொடுத்துவிட்ட முதலமைச்சர் இன்றைக்கு ஆட்சியிலே இருக்கிறார். தயவு செய்து நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஆகவே அறங்காவலர்களாக யார் வருகிறார்கள் என்பது அல்ல பிரச்சனை, இவர்களுக்குக் கோட்டை நெல் விதைக்கின்ற நிலம் இருக்கிறதா என்பது அல்ல பிரச்சனை, இவர்களுக்கு எத்தனைமாடிபங்களாக்கள் இருக்கிறது என்பது அல்ல பிரச்சனை, மிராசுதாரர்களைக் கொண்டுவந்து, உடனே இங்கே இருக்கிற சொத்துக்களை எத்தனைஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனை பேர்களுடைய பட்டியலைப் பார்த்தால், நிலத்தை விற்கச் சொல்லலாம்! அதனாலே பெரியவர்கள் தயவு செய்து, இந்த அறங்காவலர்கள் நியமனத்தில் இந்த அரசு மிகத் தெளிவாக இருக்கிறது, சரி. அப்படியே தவறு நடந்தால் தூக்கி எறியப்படுவார்கள். தூக்கி எறியப்படுவதோடு நிறுத்திவிட மாட்டோம். குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுவார்கள். அதை மாத்திரம் நான் அரசு சார்பிலே உத்தரவாதம் அளிக்க முடியும்.

இன்றைக்கு அறக்கட்டளைகள், ஆலயங்களுக்கெல்லாம் வருகிற வருமானத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். இந்த ஆலயத்திலே இருக்கிற ஊழியர்கள் சிலபேர் கொஞ்ச காலத்திற்கு முன்னாலே இங்கே போராட்டம் எல்லாம் நடத்தினார்கள், உங்களுக்கெல்லாம் தெரியும். அவர்கள் தேர்ந்தெடுத்த சின்னம் கூட கறுப்புத்தான். கறுப்பைத்தான் அணிந்து இருந்தார்கள். நான் அவர்களுக்கெல்லாம் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டு மக்கள் அனைவருக்குமே தெரிவித்துக் கொள்கிறேன். நான் அறநிலையத்துறைஆணையருக்கு ஒரு ஆலோசனையாக இதை நினைக்கிறேன். இந்த ஆலயத்தினுடைய வரவு செலவு, திறந்த புத்தகமாக, இந்த நாட்டு மக்களுக்கு

—தொடர்ச்சி 42-ம் பக்கம்

# வைணவத் திவ்விய தேசங்கள்

திரு. டாக்டர் ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

(வடநாடு)

**சிங்கவேள் குன்றுடை ஈசன்:**

வைணவ சமயத்தின் கொடுமுடியாகத் திகழ்வது சரணாகதி தத்துவம். இதனைப் பிரபத்தி எனவும் வழங்குவர். பிரபத்தியாவது பகவானை உபாயமாகப் பற்றுதல்.

''சரணம் ஆகும்தன தாள் அடைந்
தார்க்கு எலாம்
மரணம் ஆரல்வை குந்தம்
கொடுக்கும் பிரான்''
—திருவாய் 9.10:5

என்பது நம்மாழ்வார் திருவாக்கு. இறைவனிடம் சரண் புகுந்துவிட்டாலும், இரயில் நிலையத்தில் வண்டி வரும் வரையில் காத்திருக்குமாப்போல, மரணம் ஏற்படும் வரையில் (அதாவது, பிராரப்தகர்மம் முடியும் வரை) காத்திருக்க வேண்டியதுதான். பிராரப்தத்தை அனுபவித்தே கழிக்க வேண்டும். இறைவன் சஞ்சித கர்மத்தைத் தீயினில் தூசாகும்படி செய்து, என்பது இத் திருவாய் மொழியின் கருத்தாகும். சாதி வேற்றுமை கருதாது எல்லோரும் எளிதாகப் பின்பற்றக்கூடிய வழி இப் பிரபத்தி.

''பிரபத்திக்குத் தேசநியமமும் கால நியமமும், பிரகார நியமமும், அதிகாரி நியமும் பல நியமும் இல்லை'' 2

என்பது ஸ்ரீவசனபூஷண சூத்திரம். நியமம் என்பது வரையறை. தேச நியமமாவது, தூய விடங்களில் செய்யவேண்டும், மற்றைய விடங்களில் செய்யலாகாதென்பது. காலநியமமாவது வேனிற் காலம் முதலான காலங்களிலே செய்ய வேண்டும், மற்றைய காலங்களிலே செய்யலாகாது என்பது. பிரகார நியமமாவது, நீராடல் கால் கழுவுதல் என்பன முதலானவற்றை முன்னதாகக் கொண்டு செய்யவேண்டும், வேறு வகையில் செய்யவொண்ணாது என்பது. அதிகாரி நியமமாவது, முதல் மூன்று வருணத்தவர்கள் அல்லாதவர்களாக இருக்கலாகாது என்பது. பல (பயன்) நியமமாவது, இம்மை மறுமைப் பலன்களில் இன்னபலத்திற்கு இது சாதனம், மற்றைய பலன்களுக்கு இது சாதனம் அன்று என்பது.

''விஷய நியமமே உள்ளது'' (3)

என்றுகூறிய பிள்ளை உலக ஆசிரியர் ''குண பூர்த்தி யுள்ள இடமே விஷயமாகை'' என்று விளக்குவார். விஷயநியமம் என்பது 'இன்ன விஷயத்திலே செய்ய வேண்டும் என்ற நியமமே இந்தப் பிரபத்திக்கு உள்ளது' என்றபடி 'குண. பூர்த்தியுள்ள இடமே விஷயமாகை' 4 என்பது பரத்துவம் வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளிலும் சௌலப்பியம் முதலிய குணங்கள் நிறைந்துள்ள இடமே விஷயமாகை என்றபடி.

''இங்குச் சொன்ன சௌலப்பியத்திற்கு எல்லைநிலம் அர்ச்சாவதாரம்'' 5 என்பது முமுட்சுப்படி. இதனை விளக்கும் முறையில் பொய்கையாழ்வாரும் ''தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே ''6 என்று விளக்குவர்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்டவண்ணம் சிங்கவேழ்குன்றம் திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றோம். சிங்கவேள்குன்றம் என்ற இத்திருத்தலம் ஆந்திர மாநிலத்தில் உள்ளது. சென்னை-பம்பாய் இரயில் பாதையிலுள்ள கடப்பையிலிருந்து பேருந்து வசதியுண்டு. நந்தியால் ,கர்நூல் என்ற இடங்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. கடப்பையிலிருந்து ஆர்லகட்டா வரையில் பேருந்தில் போகவேண்டும். அங்கிருந்து சற்றேறக்குறைய 15 கி.மீ. தொலைவிலுள்ளது சிங்கவேள்குன்றம். பேருந்து வசதி உண்டு. அடிக்கடி இல்லை. திருப்பதியிலிருந்து பேருந்து மூலமாகவே இத்திருத்தலத்தை வந்தடைகின்றோம். ஆர்லாகட்டாவிலிருந்து பேருந்தில் வருங்கால் கமலையருகில் வந்து விடுகின்றோம். அச்சத்தை விளைவிக்கும் அடவி தென்படுகின்றது. சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகள் வாழும் இடம்போல் காட்சியளிக்கின்றது மலையிலுள்ள அடவி. முட் புதர்களும் முள்மரங்களும் நெருங்கிக் கிடக்கும் காட்சி எம்மருங்கும் காணப்பெறுகின்றது.

---

2. ஸ்ரீவசனபூஷணம்—24
(புருஷோத்தமநாயுடு பதிப்பு)
3. ஸ்ரீவசனபூஷணம்—25
4. ஷை—37
5. முமுட்சுப்படி—139
6. முதல் திருவுருவம்—44

பேருந்தில் வந்து கொண்டிருக்கும் பொழுது இத்திருத்தலத்தின் பெயரில் ஆழங்கால் படுகின்றோம். இத்திருப்பதி இப்பொழுது 'அகோபிலம்' என்று வழங்கப் பெறுகின்றது. இது புராணப் புகழுடன் ஏற்பட்ட பெயர். வடநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று இது. ஆழ்வார் பாசுரத்தில் இது சிங்கவேள் குன்றம் என்று குறிப்பிடப்பெறுகின்றது. சிங்கவேள் குன்றம் என்றும் வழங்குவதுண்டு. இப்படி வழங்கும்போது சிங்கம்-நரசிம்ம வடிவாய், வேள்-யாவராலும் விரும்பப் பெறுகின்ற கட்டழகுடையவரான பெருமாள், குன்றம்-திருமலை எனப்பொருள்படும். சிங்கவேள்குன்றம் என்னும்போது நரசிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஏழு குன்றங்களையுடைய தலம் எனப் பொருள்படும். பர்வதம் அல்லது நல்ல மலைத்தொடரில்தான் இக்குன்றம் அமைந்துள்ளது. தொடரின் தலைப் பகுதி ஏழுமலையான் திருக்கோயில் கொண்டுள்ள திருமலை; உடற்பகுதி அகோபிலம்; வால் (கால்) பகுதி சீசைலம் என்ற திருத்தலம்.

சிங்கவேள்குன்றம் கருடாத்ரி, வேதாத்ரி, வீரக்ஷேத்திரம், அகோபலம் ,அகோபிலம் என்ற திருப்பெயர்களாலும் வழங்கப்பெறுகின்றது. பிறப்பிலேயே விஷ்ணு சித்தனாகப் பிறந்த கருடன், பல்லாண்டுகள் பரமபத நாதனை நோக்கித்தவம் செய்து தனக்கு 'கருடவாகனன்' என்ற பெயர் வழங்க வேண்டும் என்றும், தான் தவம் புரிந்த மலை 'கருடாத்ரி' (அத்ரி-மலை) என்ற பெயர் பெறவேண்டும் என்றும் இரண்டு வரங்களைப் பெற்றதால் கருடாத்ரி என்ற பெயர் பெற்றது. சோமுகன் என்ற ஓர் அசுரன் நான்முகனிடமிருந்து நான்கு மறைகளையும் அபகரித்துச் சென்றான். திருமால் அவ்வசுரனைக் கொன்று மறைகளை மீட்டார். பின்னர் நான்மறைகளும் இந்த மலையில் நீண்டகாலம் திருமாலை நோக்கித் தவம் புரிந்து தமக்கு ஒருகாலத்திலும் ஒருவராலும் ஒரு விதத்திலும் ஆபத்து நேரிடாது என்ற வரத்தைப் பெற்றன. இனி இத்திருமலையும் 'வேதாத்ரி' என்ற பெயரால் வழங்கப்பெறும் என்றவரத்தையும் ஈந்தார். எம்பெருமான் தூணில் நரசிங்கமாக அவதரித்து அப் பொன் பெயரோன் மார்பினைத் தம் வள்ளுகிரால் வகிர்ந்து தம் வீரத்தினை வெளிப்படுத்தினதால் வீரக்ஷேத்திரம் என்றும் அகோபலம் என்றும் தாமே உகந்து இப்பெயர்களை இடுகின்றார். அகோபிலம் என்பது புராணப் புகழால் ஏற்பட்ட பெயராகும்.

மலை அடிவாரம் 'கீழ் அகோபிலம்' என்றும், அடிவாரத்திலிருந்து சுமார் எட்டுக்கிலோமீட்டர் தொலைவிலும், கடல் மட்டத்திற்கு 3000 அடி உயரத்திலும் உள்ள மலை உச்சிப் பகுதி 'மேல் அகோபிலம்' என்றும் வழங்கப் பெறுகின்றன. கீழ் அகோபிலத்தினருகில் எந்தச் சிற்றூரும் இல்லை. திருத்தலப் பயணிகட்குப் பால், தயிர், மோர் முதலியன வழங்குவதற்காக ஒரு சில மலைவாசிகள் அடிவாரத்திலுள்ள திருக்கோயிலின் வெளிப்பகுதிகளில் தங்கியுள்ளனர். சில ஆண்டுகளாகத் திருமலை-திருப்பதி தேவஸ்தானம் கட்டியுள்ள பல அறைகளுடன் கூடிய விடுதி வசதி, திருத்தலப் பயணிகட்குக் கிடைக்கின்றது. நல்ல வசதிகளுடன் கூடிய உணவு விடுதிகளில் இல்லை.

வண்டியில் போகும்போதே இத் திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ள திருமங்கையாழ்வாரின் பாடல்களில் ஆழங்கால் படுகின்றோம். சித்து, அசித்து, ஈசுவரன் மூன்றும் வைணவசமயத் தத்துவங்கள். சித்து என்பது உயிர். அசித்து மக்கள், விலங்கு முதலியவற்றின் உடம்பு முதலிய உலகப்பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான பிரகிருதி. இதனை மூலப் பகுதி என்றும் வழங்குவர். ஈசுவரன், இறைவன். இவை மூன்றும் தனித்தனி இயல்புடைய வேறு பொருள்கள்; என்றும் அழிவில்லாதவை. ஆயினும் எக்காலத்தும் இவை மூன்றும் சேர்ந்தே உள்ளன. ஆழ்வாரின் ஒவ்வொரு பாசுரத்திலும் இம்மூன்று தத்துவங்களும் நன்கு பொருந்திஅமைந்திருப்பதனைக் காணலாம்.

அங்கண்ஞாலம் அஞ்சஅங்கு
ஓர்ஆள்அரியாய் அவுணன்
பொங்குஆகம் வள்கிரால்
போழ்ந்த புனிதன்இடம்
பைங்கண்ஆனைக் கொம்புகொண்டு
பத்திமையால் அடிக்கீழ்
செங்கண்ஆளி இட்டுஇறைஞ்சும்
சிங்கவேழ் குன்றமே

[ஞாலம்-பூமி; அரி-சிங்கம்; அவுணன்-அரக்கன்; உகிர்-நாகம், ஆளி-சிங்கம்].

என்பது பாசுரம். ஆழ்வார் பாசுரங்கள் ஒவ்வொன்றின் முன்னடிகளில் நரசிம்மாவதார வரலாறும், பின்னடிகளில் சிங்கவேழ் குன்றத்தின் நிலைமையும் வருணிக்கப்பெற்று வைணவதத்துவங்கள் குழைந்து பெய்யப் பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம்.

முதலில் ஆழ்வார் காட்டும் மலையின் சூழலில் ஆழங்கால்படுவோம். அடர்ந்த காடுகள் நெருங்கி இருப்பது இத்திருமலை. ஆழ்வார் அச்சந்தரும் ஒரு நிலையைக் காட்டுகின்றார். நாம் வண்டியில் செல்லுங்கால் இத்தகைய ஒரு சூழ்நிலையைக் காணத்தான் செய்கின்றோம். ''வண்டினம் முரலும் சோலை, மயிலினம் ஆலும் சோலை, கொண்டல்மீது அணவும் சோலை, குயிலினம் கூவுஞ்சோலை''8 என்று தொண்டரடிப் பொடிகள் காட்டும் அரங்கநகர்ச் சூழ்நிலை இங்குஇல்லை. பிறகு என்னதான் அங்கிருந்தது?

''ஒய்ந்தமாவும் உடைந்தகுன்றும்
அன்றியும் நின்றழலால்
தேய்ந்தவேயும் அல்லது இல்லாச்
சிங்கவேழ் குன்றமே'' (9)

[ஓய்ந்த-களைத்துப்போன; மா-விலங்குகள்; அழல்-நெருப்பு; வேய்-மூங்கில்) என்கின்றார் ஆழ்வார். ''அலைந்து திரிந்து களைத்துப்

7. பெரிய திரு. 1.7 : 1
8. திருமால்—14
9. பெரிய திரு. 1.7 : 3

போன மிருகங்களை அங்குக் காணலாம்; உடைந்து கிடக்கும் கற்பாறைகளைக் காண லாம்; மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புப் பற்றி எரிந்து குறை கொள் ளியாக இருக்குமாற்றைச் சிறப்பாகக் காண லாம். இன்னும்,

காய்த்தவாகை நெற்றொலிப்பக்
கல்லதாவேய்ங் கழைபோய்
தேய்த்த தீயால்விண்சிவக்கும்
சிங்கவேழ் குன்றமே (10)

[காய்த்த-காய்கள்நிறைந்த; ஒலிப்ப-ஒலியுண் டாக்க; கல்அதர்-கல்வழி; வேய்கழை-குழல் மூங்கில்).

என்று காட்டுவார் ஆழ்வார். ''வாகை நெற்று கள் காற்று வீசுவதால் ஒலிக்கின்றன. மூங் கில்கள் உராய்வதால் உண்டான செந்தீ விண் முழுவதையும் சிவக்கச் செய்கின்றது'' என்கி றார். சிலசமயம் சுழல்காற்று சிவந்த நெருப்பை வாரிக் கொண்டு விண்முழுவதும் ஓடிப் பரவு கின்றது. (11) மூங்கில்கள் நெருப்பில் வேகின்ற போது ஒலி உண்டாகின்றது; அந்த நெருப்பில் கற்களும்வேகின்றன. (12) மேலும் அந்த மலைச் சூழ்நிலையில் நெல்லி மரங்கள் கல்லிடைகளில் முளைத்து வளர்ந்து அவற்றினிடையே வேரோடுகையினால் அந்த வேர்கள் பருத்துப் பாறைகளையும் பிளந்து தள்ளுகின்றன. (13) நாம் வண்டியில் செல்லும்போது ஆழ்வார் காலத்தில் நிலவிய சூழ்நிலையை இன்றும் காணலாம்படி உள்ளதே என்று வியப்பில் ஆழ் கின்றோம்.

இங்ஙனம் அச்சத்தை விளைவிக்கும் அட வியில் யானை, குதிரை, சிங்கம், புலி முதலிய கொடிய விலங்குகள் இங்குமங்கும் ஓடியலைந்து ஓய்ந்து நிற்கின்றன. (14) மூங்கில் புதர்களினின் றும் புலிகள் பெருவழியில் வந்து சேர்ந்து யானைகள் நடமாடின அடையாளங்களைக் கூர்ந்து ஆராய்கின்றன. (15) அவை உலாவின இடங்களைத் தேடித் திரிகின்றன. மற்றும் இங்கு நடுப்பகலில் பகலவன் காலும் வெப்பம் தாங்கமாட்டாது நாய்களும் கழுகுகளும் அவ் விடத்தில் நடக்கும்பொழுது கால்தடுமாறித் திண்டாடுகின்றன. (16) எம்பெருமானின் சந் நிதான மகிமையால் அவ்விடத்து மிருகங்களும் பகவத் பக்தியில் திளைக்கின்றன. சிங்கங்கள் களிறுகளைக் கொன்று அவற்றின் கோடுகளைப் பிடுங்கிக் கொண்டுவந்து எம்பெருமான் திரு வடிகளில் வைத்துப் பகவதாராதனம் நடத்து கின்றன. (17) ''இவற்றுக்கு ஆனைகளின் மேலே சீற்றம் மாறாதே யிருக்கச் செய்தேயும் பகவத் பக்தி ஒரு படிப்பட்டுச் செல்லுமாயிற்றே; சீற் றம் விக்ருதியாய் (தோன்றியது) பகவத் பக்தி ப்ரகிருதியாய் (மூலகாரணமாய்) இருக்கு மாயிற்று'' என்ற வியாக்கியானப் பகுதி அனு பவித்து மகிழத்தக்கது. எம்பெருமானுடைய வரலாறு எதுவாயிருந்தாலும் அது ஆழ்வார் களுடைய நெஞ்சைக் கவர்வதுபோல், அப்பெரு மான் உகந்தருளின நிலங்களில் உள்ளவையும் எதுவாயிருப்பினும் 'அவ்விடத்தவை' என்கிற காரணத்தினால் எல்லாம் இந்த ஆழ்வாருக்கு இன்பம் தருவனவாகும். ''பிறர்க்குக் குற்ற மாய்த் தோன்றுமவையும் உபாதேயமாய்த் தோற்றுகையிறே ஒரு விஷயத்தை உகக்கை யாகிறது'' (18) என்ற வியாக்கியானப் பகுதி சிந் திக்கத் தக்கது.

இந்தச் சூழ்நிலையில் மக்களின் நடமாட் டத்தையும் பற்றிப் பேசுகின்றார் ஆழ்வார்.

மலைத்தசெல் சாத்தெறிந்தபூசல்
வன்துடி வாய்கடுப்ப
சிலைக்கைவேடர் தெழிப்பறாத
சிங்கவேழ் குன்றமே (19)

(மலைத்து-ஆக்கிரமிக்கப் பெற்ற; சாத்து- திருத்தலப் பயணிகளின்கூட்டம்; பூசல்-போர் பேரொலி; துடி-பறை; வாய்கடுப்ப-ஒலிக்க; தெழிப்பு-ஆரவாரம்).

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. திருத்தலப் பயணமாகப் பலர் அந்த அடவியில் செல்லு கின்றனர். அவ்விடத்துவேடர்கள் அவர்களைத் தகைந்து போரிடுவர். ஒருவரோடொருவர் பெரும்போர் நடத்துவர். அப்போரில் வேடர் களின் வில்லோசையும் பறையோசையும் இடைவிடாது இருந்து கொண்டே இருக்கும். இப்பொழுது இம்மலையில் வாழும் வேடர்கள் 'செஞ்சு' என்ற பெயர்களால் வழங்கப் பெறு கின்றனர். இவர்கள் மரபில் பிறந்த மங்கை யொருத்தியை எம்பெருமான் உகந்து மணந்து கொண்டதாகத் தலவரலாறு கூறுகின்றது. இதனால் மகளிருக்குச் செஞ்சுலட்சுமி என்று பெயரிடும் வழக்கமும் இருந்து வருகின்றது.

இனி, பாசுரங்கள்தோறும் நரசிம்மாவ தாரப் பெருமையில் ஆழ்வார் ஆழங்கால்படு வதையும் காண்போம். இரணியனை மாய்க்கும் பொருட்டும், அவன் மகன் பிரகலாதனைக் காத்து ஆட்கொள்ளும் பொருட்டும் நரசிங்கப் பெருமான் அவதரித்தனன் என்பதை நாம் அறி வோம்.

''எங்கும் உளன்கண்ணன் என்ற
மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால் என்று
இரணியன் தூண்புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன்
வீயத் தோன்றிய என்
சிங்கப்பிரான் பெருமை
ஆராயும்சீர்மைத்தே'' (20)

[காய்ந்து-சினந்து, புடைப்ப-தட்ட, வீய-இறக்க]

என்று நம்மாழ்வார் இந்த அவதாரத்தில் ஆழங் கால்படுவர். பெரியாழ்வாரும்,

10. பெரிய திரு 1.7 : 3
11. ஷை 1.7 : 5
12. ஷை 1.7 : 7
13. ஷை 1.7 : 7
14. ஷை 1.7 : 3
15. ஷை 1.7 : 3
16. ஷை 1.7 : 4
17. ஷை 1.7 : 1
18. பெரிய திரு 1.7 : 3 இன் உரை
19. ஷை 1.7 : 2
20. ஷை 2.8 : 9

அளந்திட்ட தூணை அவன்தட்ட, ஆங்கே
வளர்ந்திட்டு வாள்உருச் சிங்க உருவாய் (21)

என்று அந்த அவதாரத்தை அனுபவித்து மகிழ்வர். கம்பநாடரும்,

நசைதிறந் திலங்கப் பொங்கி
நன்றுநன் றென்ன நக்கு
விசைதிறந் துருமு வீழ்ந்த
தென்னவே தூணின் வென்றி
இசைதிறந் துயர்ந்த கையால்
எற்றினன்; எற்ற லோடும்
திசைதிறந் தண்டங் கீறிச்
சிரித்தது செங்கட் சீயம் (22)

[நசை-விருப்பம்; நக்கு-சிரித்து; உருமு-இடி; இசை-புகர்; எற்றினன்-அறைந்தனன்; திசை-திக்கு; கீறி-பீறி)

என்று நரசிங்கப்பெருமான் தூணினின்றும் வெளிப்போந்தமையைக் காட்டுவான். இத்தகைய பெருமான் திருக்கோயில் கொண்ட இடம் சிங்கவேழ் குன்றமாகும்.

இந்த சிங்கவேழ்குன்றத்தில் எம்பெருமான் ஒன்பது இடங்களில் ஒன்பது நரசிம்மர்களாக எழுந்தருளியுள்ளான். மேல் அகோபிலத்துக்கு வண்டியில் போகும் போதே வண்டியினின்றும் இறங்கி வழியிலுள்ள இரண்டு நரசிம்மர்களைச் சேவிக்கின்றோம். இவர்கள் கீழ் அகோபிலத்தினின்று சுமார் இரண்டரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளனர். ஒருவர் சத்ரவடநரசிம்மர். இவர் ஒரு அரசமரத்தடியில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் அரவணைமேல் வீற்றிருந்த திருக்கோலமாய் அதிகாம்பீரியத்துடன் சேவை சாதிக்கின்றார். இவ்வெம்பெருமானுக்கு இசையில் திருவுள்ளம் அதிகம் என்று சொல்லப்பெறுகின்றது. மற்றொருவர் யோக நரசிம்மர். இவர் ஒரு சிறிய திருக்கோயிலில் கால்மீது கால்போட்டுக்கொண்டு, முன்னிரண்டு கைகளும் முழங்கால்களின்மீது தாங்கிய வண்ணம் யோகம் செய்யும் பாவனையில் எழுந்தருளியுள்ளார்.

மேல் அகோபிலத்திலுள்ள திருக்கோயில், கருடாத்ரி, வேதாத்ரி என்ற இரண்டு குன்றுகளுக்கிடையேயுள்ள பாவநாசினி என்ற நதியருகில் அமைந்துள்ளது. தெற்குப் புறத்தில் மூன்று குகைகள் உள்ளன. நடுவிலுள்ள குகையில் கற்பாறையில் குடைந்தெடுக்கப்பெற்ற திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவரே உக்கிர நரசிம்மர். இருந்த திருக்கோலத்தில், கிழக்கே திருமுக மண்டலம் கொண்டவர். இவரே இத்திருத்தலத்தின் நாயகர். தாயார் இலக்குமி நாச்சியார் . இவர் இரணியனின் மார்பைத் தம் நகங்களால் கிழிக்கும் நிலையில் காட்டப்பெற்றுள்ளார். இவரைத்தான் ஆழ்வார் 'அவுணன், பொங்கு ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன்' 'கொலைக் கையாளன் நெஞ்சு இடந்த கூருகிராளன்' 'அவுணன் வாய்ந்த ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த அம்மான்' 'பொன் பெயரோன் இன்னுயிரை வவ்வி ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த அம்மான்' 'அவுணன் பொன்றஆகம் வள்ளுகிரால்போழ்ந்த புனிதன்' 'எரிந்த பைங்கண் இலங்கு பேழ்வாய் எயிற்றோடு இது எவ்வுரு என்று, இரிந்து வானோர் கலங்கியோட இருந்தஅம்மான்' 'மூவுலகும் பிறவும் அனைத்தும் அஞ்ச ஆளரியாய் இருந்த அம்மான்' (23) என்று மங்களாசாசனம் செய்துள்ளார். பாசுரங்கட்குக் குரல் கொடுத்து இவரைச் சேவிக்கின்றோம். இத்திருக்கோயிலுக்குக் கீழ்த்திசையில் சுமார் முக்கால் கிலோ மீட்டர் தொலைவில் கோயில் கொண்டிருப்பவர் வராகநரசிம்மர். இவர் பூமிப்பிராட்டியைத் தம்மடியில் தாங்கிக் கொண்டு சேவை சாதிக்கிறார். இங்கிருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் செங்குத்தான கண்டாத்ரி எனப்படும் குன்றில் கோயில் கொண்டிருப்பவர் பிரகலாத நரசிம்மர். இவர் குகையொன்றில் இலக்குமி தம் மடியிலிருந்த வண்ணம் சாந்த மூர்த்தியாகக் காட்சி அளிக்கின்றார். இங்கிருந்த உற்சவமூர்த்தி ஆதிவண்சடகோபரால் (மடத்தை நிறுவியவர்) அகோபிலமடத்தில் வைக்கப்பெற்றுள்ளதாக அறிகின்றோம். பிரகலாத நரசிம்மனருகில் 'பிரகலாதபாறை' என வழங்கும் கல்மேடை ஒன்றுள்ளது. இதிலமர்ந்துதான் பிரகலாதன் எம்பெருமானிடம் பாடங்களைப் பயின்றான் என்பது புராண வரலாறு. இங்கிருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் 'உக்குஸ்தம்பம்' என வழங்கும்தூண் உள்ளது. இதுவே இரணியன் புடைத்த தூண். எம்பெருமான் நரசிம்ம உருவமாய் வெளிப்பட்டதூண். இங்கிருந்து சுமார் இரண்டரை கிலோமீட்டர் தொலைவில் சேவை சாதிப்பவர் சுவாலா நரசிம்மர். இப்பெருமானுக்குக் கார்த்திகைத் திங்களில் நெய்யில் அல்லது எண்ணெயில் திருவிளக்கு ஏற்றும் வழக்கம் இருந்து வருகின்றது. இங்கிருந்து (அல்லது கீழ் அகோபிலத்திலிருந்து) சுமார் ஏழரை கிலோமீட்டர் தொலைவில் ஸ்வேதாத்ரி குன்றில் எழுந்தருளி இருப்பவர் பாவன நரசிம்மர். இவரை பார்முலிடி நரசிம்மர் என்றும் வழங்குவதுண்டு. மலை அடிவாரத்தில் எழுந்தருளியிருப்பவர் மாலோல நரசிம்மர். இவரை ஆராத்ய தெய்வமாகக் கொண்டுதான் பிற்காலத்தில் அகோபிலமடம் நிறுவப் பெற்றதாக வரலாறு. மலையடிவாரத்திலிருந்து சற்றுத் தொலைவில் அட்சயதீர்த்தத்திற்கு அருகில் எழுந்தருளி இருப்பவர் பார்க்கவநரசிம்மர். வடக்கு நோக்கிய திருமுகமண்டலத்தர். அட்சதீர்த்தத்தில் என்றும் நீர் அமுததாரையாய் வற்றாது இருக்கும். திருத்தலப் பயணிகட்கு நீர்வசதியை நல்குவது.

இந்த ஒன்பது நரசிம்மர்களையும் சேவித்த நாம் 'சென்று காண்டற்கரிய' 'தெய்வமல்லால் செல்ல வொண்ணா' என்ற ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்டு அனுபவிக்கின்றோம். 'அல்லிமாதர் புல்க நின்ற ஆயிரந்தோளனை' (24) சேவித்த களிப்பில் மூழ்கியுள்ள நாம் ''இவளணைத்தால் (பெரியபிராட்டியார்) இவளைக்

21. பெரிய திரு 1.6 : 9
22. கம்ப. யுத்த இரணி 127
23. கம்ப. யுத்த இரணி. 1.7 : 1-7
24. ஷ 1.7 : 9

கட்டிக் கொள்ள ஆயிரந் தோள் உண்டா மாயிற்று'' என்ற பெரியவாச்சான்பிள்ளையின் உரைநயத்திலும் ஆழங்கால்படுகின்றோம்.

எம்பெருமானை அனுபவித்த பிறகு அருளிய பிரசாதங்களையும் உண்டு பசியாற்றிக் கொள்ளுகின்றோம். இந்த வசதிகளைச்செய்து தந்த இலக்குமி நரசிம்மன் என்ற திருக்கோயில் மேலாளரையும் நன்றியுடன் நினைக்கின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நிறைவுக்கு வர அதனையும் ஓதி உளங்கரைகின்றோம்.

''வாழ்குமரன் மேற்கனக
வஞ்சகன்மேல் ஓர்முகத்தே
சூழ்கருணை யும் முனிவும்
தோன்றியவால்-கேழ்கிளரும்
அங்கவேள் குன்ற
அழல்சாபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி
னார்க்கு'' (25)

[வாழ்குமரன்-பிரகலாதன்; ஓர்முகம்-ஒருபால். கருணை-பேரருள்; முனிவு-சினம்; கேழ்-நிறம்; அங்கவேள்-மன்மதன்; குன்ற-சாம்பலாக; அழல்-கோபித்த; பிளந்த-பிளந்து அழித்த].

இரணியன்மீது சினமும் பிரகலாதன்மீது திருவருளும் நரசிங்கமூர்த்திக்கு ஒருங்கே தோன்றின அற்புதச் செயலை எண்ணி எண்ணி வியக்கின்றோம்.

ஆண்டுதோறும், மாசிமாதம் பத்துநாட்கள் பெருவிழா (பிரம்மோற்சவம்) நடைபெற்று முழு மதியம் அன்று நிறைவு பெறுகின்றது. பாஞ்சராத்ர ஆகமப்படி கீழ் அகோபிலத்தில் நாளொன்றுக்கு மும்முறையும், மேல் அகோபிலத்தில் ஒருமுறையும் (உச்சிக்காலம் மட்டிலும்) நடைபெறுவதாக அறிகின்றோம். திருத்தலப் பயணம் நன்னிலையில் நிறைவு பெற்ற மகிழ்வுடன் மாலையில் வந்த வண்டியிலேயே கீழ் அகோபிலம் வந்து சேர்கின்றோம்.

25. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி—97

தொடரும்

## மீட்சியிலா நாட்டிருப்பார்

பிரணவமானது, அகரம்-உகரம்-மகரம் என்னும் மூன்று கூறுகளையுடையது. இவற்றில் அகரமானது, எல்லா உலகங்களின் தோற்றத்திற்கும் காரணமாய், எல்லாவற்றையும் எல்லோரையும் காப்பவனாய் உள்ள, எம்பெருமானைக் குறிக்கின்றது. அகரமானது இருபத்தைந்தாம் எழுத்தாய், அறிவின் கூறாய் விளங்குவதனால், அறிபவன் (அவிஞ்ஞாதா) ஆகிய ஆன்மாவைச் சுட்டுகின்றது. உகரமானது திருமகளையும், அவளையொத்த அருள்நலம் உடைய ஆசாரியர்களையும் அறிவிக்கின்றது. இங்ஙனம் அகர உகர மகரங்கள் குறிக்கும் பொருள்களைத் தொகுத்து, பின்வரும் பாடல் பெரிதும் அழகுற விளக்குகின்றது.

அவ்வா னவருக்கு, மவ்வா னவர்எல்லாம்
உவ்வா னவர்அடிமை என்றுரைத்தாய்: —இவ்வாறு
கேட்டிருப்பார்க்கு ஆள்என்று கண்டிருப்பார், மீட்சியிலா
நாட்டிருப்பார் என்றிருப்பன் நான்

—பிரமேயசாரம்

அகரத்தின் பொருளான இறைவனுக்கு, மகரத்தின் பொருளான உயிர்த் திரள்கள் எல்லாம் அடிமைகள் என்று, உகரத்தின் பொருளான பெரியபிராட்டியாரைப் போன்ற அருளாளர்களான ஆசாரியர்கள் அருளிச் செய்வர். இவ்வாறு உபதேசமுகத்தாலே கேட்டு, இனிது உணர்ந்து அப்பொருளிலேயே ஊன்றியிருக்கும் உணர்வுடையவர்களுக்கு, அடிமைப்பட்டவர்களாகத் தம்மை உணர்ந்து தெளிந்தவர்கள், மீளுதல் இல்லாத வைகுந்தமாகிய திருநாட்டிலே சென்று வீற்றிருப்பார்கள் என்று நான் உறுதியாக இருக்கின்றேன். பகவானுக்கு அடிமையாவதோடுகூட பாகவதர்களுக்கும் அடிமைபூண்டு ஒழுகும் திறத்தைத் தெரிந்து கொள்வார் யாவரோ அவர்கள்தாம், திருநாடு எய்தும் பேறு பெறுவர் என்பது ,இப்பாடலால் இனிது உணர்த்தப்படுகின்றது.

[அஆனவருக்கு-அகரத்தின் பொருளாகிய இறைவனுக்கு. மஆனவரெல்லாம்-மகரத்தின் பொருளாகிய உயிர்த்திரள்கள் எல்லாம். உஆனவர் உரைத்தார்-உகரப்பொருளாகிய திருமகளோடு ஒத்த அருளாளர்களாகிய ஆசாரியர்கள் கூறுவர். இவ்வாறு கேட்டு இருப்பார்க்கு-இத்தகைய உபதேசத்தைக் கேட்டு அதன் பொருளில் ஊன்றி இருப்பவர்களுக்கு. ஆள் என்று கண்டு இருப்பார்-அடிமைப்பட்டவர்களாகத் தம்மைத் தெளிவுறக்கண்டு அவ்வழியைக் கடைப்பிடித்திருப்பவர்கள்]

—ஆசிரியர்

# இந்தியத் தத்துவ ஞானம்

பேராசிரியர் திரு. கி. இலட்சுமணன், எம்.ஏ.,

(இராமாநுச வேதாந்தம், முற்றொடர்ச்சி)

**அப்பிரதக்சித்தி:**

இந்த உலகு, உயிர்கள், இறைவன் ஆகிய மூன்றும் சேர்ந்து ஒரு பொருள் என்கிறார் இராமாநுசர். இப்பொருளுக்கு உயிர்களும் உலகும் அங்கங்கள்; இறைவன் அங்கி. அதாவது அந்த அங்கங்களை யுடையவன். உலகு, உயிர் ஆகியவற்றுக்கு, அவற்றைத் தனது உறுப்புக்களாகவுடைய இறைவனுக்கு மிடையேயுள்ள தொடர்பு மிக நெருங்கியது, இதனைக் குறிக்க 'அப்பிரதக்சித்தி' என்ற ஒரு சொற்றொடரை இராமாநுசர் உபயோகிக்கின் றார். பிரிக்க முடியாது என்பது இதன் கருத்து. ஒரு கத்தியிலிருந்து அதன் பிடியைப் பிரிக்க லாம். ஆனால், ஒரு பழத்திலிருந்து அதன் சுவையைப் பிரிக்க முடியாது. அப்பிரதக்சித் திக்குப் பொருள் பிரிக்க முடியாதது என்பது மட்டுமல்ல; ஒன்று நிலைப்பதற்கு மற்றது இன்றியமையாதது என்பதுமாகும். சுவை பழத்திலே தங்கியிருக்கின்றது. பழம் இருந் தால்தான் சுவையிருக்கும். எனவே, சுவை நிலைப்பதற்குப் பழம் இன்றியமையாதது. இதைப் போலவே உயிர்களுக்கும் உலகுக்கும் இறைவன் இன்றியமையாதவன். இதனையே அப்பிரதக்சித்தி என்ற பிரயோகம் உணர்த்து கின்றது.

ஆனால் உலகை அங்கம் ஆக்கி இறை வனை அங்கி ஆக்குவதில் ஒரு வில்லங்கம் இருக் கின்றது. உலகுக்கு உள்ள குறைபாடுகள்யாவும் இறைவனையும் பாதிக்கும். இது இறைவனது பரிபூரணத்துவத்துக்குப் பங்கம் கூறுவதாய் முடியும். ஆனால் உலகுக்கும் உயிர்களுக்கு முள்ள குறைகளும், அவற்றில் ஏற்படும் மாற் றங்களும் அவற்றை அங்கமாகக் கொண்டுள்ள இறைவனைப் பாதிப்பதில்லை என்கிறார் இராமாநுசர். இராமாநுசரது இந்த வாதத்தை முக்கியமாக வேதாந்திகள் ஒப்புக் கொள்ளுவதில்லை. 'உலகு உண்மையில் இறை வனது அங்கமாயின், உலகு அடையும் மாற்றம் யாவும் இறைவனையும் பாதித்தே தீரவேண்டும். அங்ஙனமல்ல வாயின், உலகு இறைவனுக்கு அங்கமல்ல என்பதை ஒப்புக் கொள்ளவேண் டும்'—இது வேதாந்திகளின் கூற்று. இராமாநு சர் தமது நிலையை விளக்குவதற்கு வேறுபல எடுத்துக்காட்டுக்களையும் கையாளுகின்றார். அவற்றுள், ஒன்று உயிருக்கும் உடலுக்குமுள்ள தொடர்பு. உடலைப் பாதிக்கும் பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய எதுவும் அதனுள் நின்று அதனை இயக்கும் உயிரைப் பாதிப்பதில்லை. அது போலவே உலகுள்ளும் உயிர்களுள்ளும் அந்தர்யாமியாய் நின்று அவற்றை இயக்கும் இறைவனை அவற்றுக்குள்ள குறையெதுவும் பாதிப்பதில்லை. இராமானுசர் கையாளும் இன்னும் ஓர் எடுத்துக்காட்டு, ஓர் அரசனுக்கும் அவனுடைய பிரசைகளுக்கும் உள்ளதொடர்பு. அரசனது கட்டளையை நிறைவேற்றும்போது பிரசைகள் அனுபவிக்கும் இன்ப துன்பம் எது வும் அரசனை அணுகுவதில்லை. அதுபோலவே சடப்பொருளாகிய உலகம் அடையும் மாற்றங் களும், சித்தாகிய உயிர்கள் அடையும் இன்ப துன்பங்களும் ஆள்பவனாகிய ஆண்டவனை அணுகுவதில்லை. எப்படிப் பார்க்கிலும் இராமானுசர் கையாளும் உதாரணங்களிலே சில குறைபாடுகள் இருப்பதாகவே தோன்று கின்றது. உடல் அனுபவிக்கும் துன்பங்கள் உயி ரைப் பாதிப்பதில்லை என்பதும், பிரசைகள் அடையும் இன்ப துன்பங்கள் அரசனைப் பாதிப்பதில்லை என்பதும் சரியா என்பது முதற் கேள்வி. அன்றியும் பகுதிகளில்லாமல் முழுப் பொருளென எதுவும் கிடையாது. பிரசை களில்லாமல் அரசனென ஒருவன் ஏற்பட இட மில்லை. இந்த ரீதியிலே பார்த்தால் எங்ஙனம் உயிர்கள் நிலைபெற இறைவனது துணை தேவையோ, அங்ஙனமே இறைவன் நிலைபெற உயிர்களின் துணையும் உலகின் துணையும் தேவை என்ற நிலை ஏற்படும். இது இறைவனது சுதந்திரத்துக்கே பங்கம் கூறுவதாய் முடியும். மேலே கூறப்பட்ட அப்பிரதக்சித்தி என்ற அவ ருடைய தத்துவமும் இக்குறைபாட்டை வலி யுறுத்துகின்றது. அப்பிரதக்சித்தி என்பதற்கு ஒன்று நிலைப்பதற்கு மற்றது இன்றியமையா தது என்ற கருத்துமுண்டு எனக் கூறினோம். அங்ஙனமாயின், உயிர்கள் நிலைப்பதற்கு இறைவன் இன்றியமையாதவன் என்பது மட்டு மின்றி, இறைவன் நிலைப்பதற்கு உயிர்கள் இன்றியமையாதன என்ற நிலைமையும் ஏற்படு மன்றோ!

## பேதம், அபேதம், பேதாபேதம்:

ஆன்மாக்கள் பகுதி; இறைவன் அப்பகுதிகளையுடைய முழுப் பொருள். ஆன்மாக்கள் உடல்; இறைவன் அந்த உடலை இயக்கும் உயிர். ஆன்மாக்கள் பிரசைகள்; இறைவன் அப்பிரசைகளை ஆளும் அரசன். இவை ஆன்மாவுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பை விளக்க இராமானுசர் கையாளும் உருவகங்கள் எனக் கொள்ளலாம். 'இந்த உருவகங்களால் ஆன்மா வேறு, இறைவன் வேறு என்ற பேதம் அதாவது வேற்றுமை பெறப்படுகின்றதே ஒழிய அவையிரண்டும் ஒன்று என்ற அபேதம், அதாவது வேற்றுமையின்மை பெறப்படவில்லை. ஆனால், உபநிடதத்திலே அவையிரண்டும் ஒன்றே என அபேதம் பேசும். 'தத்துவமசி' போன்ற வசனங்கள் இருக்கின்றனவே! அதற்கு இராமானுசர் என்ன சமாதானம் கூறுவார்?என வினவலாம்.

## தத்துவமசி:

தத்துவமசி என்ற வடமொழி வாக்கியத்தில் தத் என்பதற்குக் கருத்து அது. துவம் என்பதற்குக் கருத்து நீ. அசி என்பதற்கு இருக்கிறாய் என்பது கருத்து. அது நீயே அல்லது நீயே அது என்பதே இவ்வாக்கியத்தின் பொருள். இது ஒவ்வொரு ஆன்மாவையும் நோக்கிக் கூறப்படுவதாகக் கொள்ளலாம். அது என்ற சொல் பரம்பொருளைக் குறிக்கும். எனவே, 'நீயே அப் பரம்பொருள்' என்பதே, இவ்வாக்கியத்துக்குப் பொருளாகின்றது. வேதாந்திகளுக்கு இக் கருத்தை ஏற்றுக் கொள்வதில் வில்லங்கம் எதுவுமில்லை. பிரமமேகட்டுண்ட நிலையில் சீவன் எனப்படுகிறது என்பது அவர்கள் கொள்கை. ஆனால், இராமானுசரது கொள்கை அது அல்ல. எனவே, அவர் தத்துவமசி என்ற மிக முக்கியமான உபநிடத வாக்கியத்துக்கு எவ்விதம் பொருள் கொள்ளுகிறார் என்பது சிந்திக்கத்தக்கது. துவம் என்பதற்கு அவர் கொள்ளும் பொருள்தான் முக்கியம். துவம் என்பதை நேர்ப்பொருளில் நீ எனக் கொள்ளாமல், உன்னுள்ளே அந்தர்யாமியாக நின்று உன்னை இயக்கும் இறைவன் என அவர் கொள்ளுகின்றார். எனவே, உன்னுள்ளே நிற்கும் இறைவனும் பரம்பொருளும் ஒன்று என்ற கருத்துக் கிடைக்கின்றது.

## மூவகை ஆன்மாக்கள்:

இனி ஆன்மாக்கள், அவை அடையும் வீடு, அதனை அடைவதற்கு வழி ஆகியவை பற்றி இராமானுசர் கூறுவனவற்றை எடுப்போம். ஆன்மாக்கள் பல. அவை யாவும் நித்தியமானவை. இது இராமானுசர் கொள்கை. இங்ஙனமின்றி ஆன்மா ஒன்றுதான் எனக்கூறும் வசனங்களும் வேதங்களிலே காணப்படுகின்றனவே எனின், அவற்றுக்குக் கருத்து, ஆன்மாக்கள் அனைத்தும் அறிவை இயல்பாகவுடையவை. ஆகவே இயல்பினால் அவை யாவும் ஒன்று என்பதேயாகும். அவ்வாறன்றி ஆன்மாக்கள் எண்ணிக்கையில் ஒன்று என்பது வேதங்களின் கருத்தல்ல. இதுவே இராமானுசர் கொடுக்கும் விளக்கம். ஆன்மாக்கள் மூன்று வகை. முதல்வகை எப்போதுமே முத்திநிலையிலுள்ளவை. இவை ஒரு காலம் பெத்த நிலையில், அதாவது கட்டுண்ட நிலையிலிருந்து பின் முத்தியை அடைந்தவை அல்ல. இரண்டாவது பிரிவு பெத்த நிலையிலிருந்து முத்தியை அடைந்தவை. மூன்றாவது பிரிவு, பெத்த நிலையிலேயே உள்ளவை. இதைப்போலவே சைவ சித்தாந்திகளும் சமணர்களும் ஆன்மாக்களை மூன்று பிரிவாகக் கொள்வது இங்குக் குறிப்பிடத்தக்கது. அவைகளை முறையே நித்திய சித்தன், முத்தன், பெத்தன் எனச் சமணரும், அநாதிமலமுத்தர், முத்தர், பெத்தர் எனச் சைவ சித்தாந்திகளும் குறிப்பிடுவர்.

## தர்மபூதஞானம்:

ஆன்மாவுக்குரிய முக்கிய குணம் ஞானமுடைமை. இந்த ஞானத்தை இராமானுசர் தர்மபூதஞானம் என்ற ஒரு சிறப்புப் பெயரால் குறிப்பிடுகின்றார். ஆன்மாவின் குணமாகிய இந்த ஞானத்தையும் ஒரு திரவியமாகவே, அதாவது ஒரு பொருளாகவே இராமானுசர் கருதுகின்றார். இறைவனுடைய ஞானமும் இந்தத் தர்மபூதஞானமே யாகும். ஆனால், இறைவனது ஞானம் பூரணமானது. ஆன்மாக்களுடைய ஞானம் குறைபாடு உடையது. இறைவனது ஞானம் தொழிற்படத் துணை எதுவும் தேவையில்லை. ஆன்மாவின் ஞானத்துக்கு அந்தக் கரணங்களின் துணை தேவை. இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு ஆகிய யாவும் இந்தத் தர்மபூத ஞானத்தின் வெவ்வேறு வடிவங்களாகக் கருதப்படுகின்றன.

ஏனைய மதத்தினர் போலவே, இராமானுசரும் ஆன்மாக்கள் பிறந்திறந்து அல்லலுறுவதற்கு அவற்றின் அறிவுக் குறைவும், அதனால் ஏற்படும் கன்மங்களுமே காரணம் என்பர். பிறவித் துன்பங்களிலிருந்து நீங்கி ஸ்ரீமந் நாராயணன் வீற்றிருக்கும் ஸ்ரீவைகுண்டத்தை அடைவதே வீடுபேறாகும். இதற்குக் கர்ம மார்க்கம், ஞானமார்க்கம், பக்திமார்க்கம் ஆகிய மூன்றும் துணைசெய்யும் என்பர் இராமானுசர். சங்கரர் வேதங்களிலே ஞான காண்டத்தையும் கருமகாண்டத்தையும் வெவ்வேறாக்கி, அவற்றுக்கு அதிகாரிகளும் வெவ்வேறாவர் என்பர். ஆனால், இரண்டும் ஒரு வருக்கே கூறப்பட்டவை என்பர் இராமாநுசர். இதுவே சைவசித்தாந்திகளின் கொள்கையும் எனலாம்.

## பிரபத்தி:

வீடு பேற்றை அடையக் கன்மம் ஞானம் பக்தி ஆகிய மூன்றும் தேவை என மேலே குறிப்பிட்டோம். பக்தியைவிடப் பிரபத்தி என்ற ஒன்றைப் பற்றியும் இராமானுச மதத்தினர் பேசுகின்றனர். இதனைச் சற்று விளக்குவது அவசியம். பக்தி உயர்ந்த வருணத்தாருக்கு மட்டுமே உரியது; பிரபத்தி எல்லோருக்கும் உரியது என்பது அவர்கள் கூறும் வேற்றுமை. அன்றியும் பக்தி மார்க்கத்தைப் படிப்படியாகத் தான்

கையாளலாம். ஆனால் பிரபத்தியை எவருமே உடனடியாகவே மேற்கொள்ளலாம். இறைவனது வல்லமையிலும் அருளிலும் பூரண நம்பிக்கை வைத்துத் தன்னை முற்றாக அவனிடம் ஒப்படைத்தலே பிரபத்தியாகும். இப் பிரபத்தியுள் இன்னும் ஒருவகை உண்டு. அதனை முறையாகமேற்கொள்ளின் முத்தி உடனே கைகூடும் எனக் கூறப்படுகின்றது.

பக்தி என்னும்போது மூடபக்தி என்பது கருத்தல்ல. கர்மத்தையும் ஞானத்தையும் பக்திக்குத் துணையாக்கிக் கொள்ளல் வேண்டும். விதிக்கப்பட்ட கடமைகள் அனைத்தையும் பலனை எதிர்பாராது செய்தல் வேண்டும். கடமைகளைச் செய்வதே இறைவனுக்குப் பிரீதி. ஏனைய எல்லாவற்றையும்விட இறைவனையே நமது அன்புக்கு அதிக பாத்திரமான பொருளாகக் கருதி இடையறாது அவனையே தியானித்தவண்ணமும் உபாசித்தவண்ணமும் இருத்தல் வேண்டும். இறைவனையே இடையறாது நினைத்தவண்ணமிருப்பது துருவஸ்மிருதி எனப்படும். இது கைவரப்பெறின் இதன் முதிர்வால் இறைவனது காட்சி கைகூடும். இதுவே வீடுபேற்றுக்கு வழியாகும். இதனால், இவை முழுதும் மனிதனின் முயற்சியை மட்டுமே பொறுத்தவை என இராமானுசர் கருதவில்லை. மனிதனும் முயலவேண்டும். அதே சமயம் இறைவனும் அருளவேண்டும் என்பர் இராமானுசர். இது திருவாசகத்தில் ''அவனருளாலே அவன்தான் வணங்கி'' என மணிவாசகர் கூறும் சைவசித்தாந்தக் கருத்தை நினைவூட்டுகின்றது.

**இராமானுசரும் சைவசித்தாந்தமும்:**

பலவிதமாகவும் பார்க்குமிடத்து இராமானுசரது கொள்கை வேதாந்தத்துக்கும் சைவசித்தாந்தத்துக்கும் இடைப்பட்ட ஒரு நிலையாகவே தோன்றுகின்றது. வேதாந்தத்திலிருந்து இராமானுசர் மாறுபாடும் இடங்கள் பலவற்றை முந்திய கட்டுரைகளிலே விளக்கினோம். அவரும் சைவசித்தாந்திகளும் ஒன்றுபடும் இடங்கள் சிலவற்றை இக்கட்டுரையிலே குறிப்பிட்டோம். உலகம் உண்மை; உயிர்களும் உண்மை எனக் கொள்ளுவதால் சைவசித்தாந்திகளைப் போலவே இராமானுசரும் ஒரு மெய்ம்மைவாதி. அவர்களைப்போலவே இவரும் ஒரு பன்மைவாதி. வேதாந்திகளைப் போலப் பிரமாணம் ஆறு எனக் கொள்ளாது சைவசித்தாந்திகளைப் போலவே இராமானுசரும் பிரமாணம் மூன்று என்றே கொள்ளுகின்றார். அன்றியும் வேத உபநிடதங்களை மட்டுமே பிரமாணமாகக் கொள்ளாது, சித்தாந்திகளைப் போலவே இராமானுசரும் புராணங்களையும் ஆகமங்களையும் பிரமாணமாகக் கொள்ளுகின்றார். இவை எல்லாவற்றுக்கும் மேலாகச் சைவசித்தாந்தத்தைப் போலவே இராமானுசரது மதமும் இறைவனுக்கே முதன்மை வழங்கி அவனையே நடுநாயகமாகக் கொண்டு இயங்குகின்றது.

**முடிவுரை:**

உயிர் உலகு ஆகியவற்றுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பைக் குறிக்க இராமானுசர் பேசும் அப்பிரதக்சித்தி என்னும் தத்துவம்; தமது கொள்கைக்குப் பொருந்தத் தத்துவமசி என்னும் மகாவாக்கியத்துக்கு இராமானுசர் கொடுக்கும் விளக்கம்; ஆன்மா, அதன் இயல்பு, வீடுபேறு, அதனைஅடைய வழி, பக்திக்கும் பிரபத்திக்குமுள்ள வேறுபாடு ஆகியவை பற்றி இராமானுசரது கொள்கைகள்; இராமானுசருக்கும் சைவசித்தாந்தத்துக்குமுள்ள ஒற்றுமைகள் ஆகியவை இங்கு ஆராயப்பட்டுள்ளன.

## குலம்கொண்டு காரியம்என் கூறீர்?

ஆன்மாக்களுக்கெல்லாம் தொண்டக்குலம் என்பது, அவர்களால் ஒழிக்க ஒழியாததாக இருந்து வருகின்றது. ஆயினும், அது அவர்களுக்குப் பயன்படாமலே கழிந்தொழிகின்றது. அதற்குக் காரணம் எது மேலான பயனாகிய பரதத்துவமோ அதனைக் கைவிட்டு, வேறு பொருள்களைப் பயன் என்று மயங்கி மருள்கொண்டு, ஆன்மாக்கள் அலைவதே யாகும். ஆதலின் வேறு பயன்கள் உண்டு என்று நம்பி, அவைகளை அடைய வீணே அலைவதைக் கைவிட்டு, இறைவனையே நாம் எய்துதற்குரிய மேலான பயனாகத் தெளிந்து, அவனையே பற்றி வழிபட்டுக் கொண்டிருப்பவர்கள், எல்லா நலன்களையும் பெறுவார்கள்.

உலகில் மக்கள் பலர் தம்மைத் தொண்டக் குலத்தைச் சேர்ந்தவராக உணராமல், உலகியலில் உடற்பிறப்பையொட்டி வகுக்கப்பெற்றுள்ள பலவகைச் சாதி குலம் என்னும் சுழிபட்டுத் தடுமாறுகின்றனர். அவரவர்க்குத் தத்தம் பயனைத் தந்தேவிடும் வினைகள் உள்ளன. ஆதலின், உலகியலையொட்டிய சாதி குல வேறுபாடுகளால் ஒரு பயனும் இல்லை. திரிவிக்கிரமனாய் எல்லா உலகங்களையும் உள்ளடக்கிக்கொண்ட இரண்டு திருவடிகளையுடைய திருமால், உலகளந்த அந்தக் காலத்திலேயே, தன்னையொழித்த எல்லா உயிர்களையும் தனக்கு அடிமைகொண்டருளினன் என்பதனை உணர்ந்து, தம்மை அவனது தொண்டக்குலத்தைச் சேர்ந்தவராகத் தெளிந்து, அவனை அன்பினால் வழிபடுபவர்களே, தீவினைகளினின்று விடுபட்டு எல்லா இன்பங்களையும் அடைவார்கள்.

பலங்கொண்டு மீளாத பாவம் உளதாகில்
குலங்கொண்டு காரியம்என்? கூறீர்—தலங்கொண்ட
தாளிணையான் அன்றே தனைஒழிந்த யாவரையும்
ஆளுடையான் அன்றே அவன்

—பிரமேயசாரம்.

[பலம்கொண்டு மீளாத பாவம்-பலனை அனுபவிக்கச் செய்தல்லது நீங்காத தீவினைகள். 'பலன்' என்னும் சொல் 'பலம்' என வந்தது. தலம் கொண்ட - எல்லா உலகங்களையும் தாவி அளந்த]

—**ஆசிரியர்.**

# உடையவரும், வடுகநம்பியும்

திரு. இராசகோபால இராமாநுசதாசன், எருமை வெட்டி, செய்யாறு.

ஆராமம் சூழ்ந்த அரங்கநகர் அப்பன் செல்வமுற்றும் திருத்தி வைத்தவர் இராமாநுசர் என்பார்கள். இவருக்குச் சீடர்கள் பல்லாயிரவர். அவருள் பதினோராயிரம் பேர்கள் உபவீதம் (பூணூல்) அணிந்தவர்கள். பன்னீராயிரம் பேர்கள் பூணூல் அணியாதவர்கள். எழுநூறு பேர்கள் துறவிகள். எழுநூறுபேர்கள் பெண்ணினத்தவர்கள். பன்னீராயிரவர்கள் பாகவத நிஷ்டர்கள். இது தவிரப் பல்லாயிரம் பேர்கள் அவரைச் சார்ந்து நின்றவர்கள், என்று படிப்படியாகக் கணக்குச் சொல்வர்.

உடையவரின் சீடர்களுள் வடுகநம்பி என்பவர், மிகத் தீவிர இராமாநுச பக்தராவர். இவர் ஆந்திர நாட்டினர். உடையவரின் திருவடிகளே அவர் பணியும் தெய்வம். எம்பெருமானாரே எல்லாம் என்ற ஆசார்ய நிஷ்டையுடையவர். வடுகநம்பி, தம் ஆத்ம யாத்திரை முழுவதும் ஆசார்யரான இராமாநுசருக்கே எல்லா அடிமையும் பூண்டு, அவர்தம் நிழலும் அடிதாறுமாய் நின்றிட்டவர்.

எங்காவது கோவிலைக் கண்டால், காத தூரத்திலே கழற்றி விடுவர், தம் காலணிகளை இராமாநுசர்! கோயில் தரிசனத்துக்குப் பின் மீண்டும் அணிந்து கொள்வதற்குப் பாதுகைகளைக் கையிலேந்தி நிற்பவர் வடுகநம்பி. ஒரு சமயம் திருவெள்ளறை என்கிற திவ்யதேசத்திலே, எம்பெருமானார் திருவடி பணிகையில், வடுகர், இராமாநுசருடைய நித்திய ஆராதனப் பெருமாளான வரதராசருடன் இராமாநுசருடைய பாதுகைகளையும் ஒன்றாகச் சேர்த்து மூட்டை கட்டினார். அதுகண்ட இராமாநுசர் பதறிப்போனார். உடனே இவர் ''வடுகா, இது அடுக்குமா'' என்று கேட்டனர். வடுகரோ அமைதியாக, ''என்ன செய்துவிட்டேன் அப்படி'' என்றும், ''தங்கள் தேவரில் எங்கள் தேவருக்கு வந்த குறை என்னவோ?' என்றும் திருப்பிக் கேட்டனர். வடுக நம்பியின் ஆசார்ய பக்திகண்ட இராமாநுசர் பிரமித்து நின்றனர்.

உடையவர் பெருமாளைச் சேவித்துக் கொண்டிருக்கும்போதெல்லாம், வடுகர், உடையவரையே சேவித்து நிற்பர். ஒருசமயம் பொங்குநீர் பரந்துபாயும் பூம்பொழில் அரங்கனைப் ''பவளவாய் கமலச் செங்கண்'' என்று தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரஞ் சொல்லிச் சேவிக்கையில், பெரிய பெருமாளின் கண்ணழகில் ஈடுபட்டுநின்றார் இராமாநுசர். தம் பக்கலில் நின்ற வடுகநம்பியை விளித்து ''வடுகா! பெருமாள் தம் கண்ணழகைப்பாரும்'' என்றார். வடுக நம்பியோ, ''என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்று திருப்பாணாழ்வார் பாசுரத்தில் பதில் சொல்லினார். (அமுதினை என்று இங்குச் சொன்னது, எம்பெருமானாரை.)

மற்றொரு சமயம் உடையவருக்கு வடுகநம்பி, பால் காய்ச்சிக் கொண்டிருந்தார். அணிபொழில் சூழ் அரங்கத்து அரவணையான் வசந்தோத்சவம். பெருமாள் திருவீதி உலாக் கண்டருள, உடையவர் உள்ளிருந்து திருவீதி வந்து பெருமாளைச் சேவித்து நின்றார். அவர் வடுகரும் பெருமாளைச் சேவிக்கட்டும் என்று''வடுகா! பெருமாளைச் சேவிக்க வா'' வென்றார். உள்ளிருந்த வடுகநம்பி ''அந்தப் பெருமாளைச் சேவித்துக் கொண்டிருந்தால், எங்கள் பெருமாள் பால் அடுப்பில் போய் விடுமே'' என்று சொல்லி வெளியே வர மறுத்தார். வடுகநம்பியின் ஆச்சார்ய நிஷ்டையைக் கண்ட இராமாநுசர் முகம் பூர்ண நிலவுபோலப் பிரகாசிக்க, வடுகரைத் தம் இருகரங்களாலும் வாரி எடுத்து அணைத்துக் கொண்டார். ''ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்று அவரைச் சார்த்தியிருப்பார் தவம்''. உம்தவம் எம்தவத்துக்கு மேலானது என்று மொழிந்தார். அதுகேட்ட வடுகர் இராமாநுசரின் பாதங்களில் வணங்கி நின்றார். இராமாநுசரே தெய்வம் என்று ஆச்சார்ய பக்தி ஒன்றுமே கைக்கொண்டு, எல்லா அடிமையும் பூண்டு, உலகோருக்கு உய்யும் நெறி காட்டியருளினவர் வடுகநம்பி.

**

# வைணவத் திவ்விய தேசங்களும், பெருமாள்–தாயார் திருப்பெயர்களும்—(முற்றொடர்ச்சி)

(தொகுத்தவர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.)

| வ. எண் | திவ்வியதேசங்களின் திருப்பெயர்கள் | பெருமாள்திருப்பெயர் | தாயார் திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| | | **(சோழநாட்டுத் திருப்பதிகள்—40)** | | |
| 58 | திருக்கோளூர் | வைத்தமாநிதி நிட்சேபவித்தன் | கோளூர்வல்லிநாச்சியார் | ஆழ்வார்திருநகரிக்குக்கிழக்கே 2 கல்தொலைவு. மதுரகவியாழ்வாரின் அவதாரத் தலம். ஆழ்வார் திருநகரியைச் சூழ்ந்துள்ள பின்வரும் தலங்களை எட்டுத் திருப்பதிகள் என்பர். 1. திருக்குருகூர், 2. திருக்கோளூர், 3. தொலைவில்லிமங்கலம், 4. திருப்பேரை, 5. திருக்குளந்தை, 6. திருக்குறுங்குடி, 7. வரகுணமங்கை, 8. திருவைகுந்தம். இவ் எட்டுத் தலங்களையும் ஒருசேரத் தரிசிப்பது சிறப்பாகும். |

## மலைநாட்டுத் திருப்பதிகள்—13

| வ. எண் | திவ்வியதேசங்களின் திருப்பெயர்கள் | பெருமாள்திருப்பெயர் | தாயார் திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 59 | திருஅனந்தபுரம் (அனந்தசயனம்) | அனந்தபத்மநாபன் | திருஅரிலட்சுமி | திருவனந்தபுரம் மத்திய நிலையத்திலிருந்து அரைகல் தொலைவில் கோயில் உள்ளது. இங்கு மூலவரைச் சேவிக்க மூன்று தலைவாயில்கள் உள்ளன. இடப்புறத்தலைவாயிலில் திருமுடியையும், இடைவாயிலில் திருவுந்தித் தாமரையில் உள்ள பிரமனையும், வலப்புற வாயிலில் திருவடிகளையும் தரிசிக்கலாம். கருவறையின் பிராகாரத்திலிருந்து தென்புறம் வெளியே செல்லுங்கால் யோகநரசிம்மர் சந்நிதி உள்ளது. மூலவர்சந்நிதியின் பின்புறம் கண்ணபிரானின் சந்நிதி உள்ளது. |
| 60 | திருவண்பரிசாரம் (திருப்பதிசாரம்) | திருக்குறளப்பன், திருவாழ்மார்பன் | கமலவல்லிநாச்சியார் | நாகர்கோயிலுக்குச் சுமார் 10 கல் தொலைவில் உள்ளது. இத்தலத்தில் மூலவர் மார்பின் இடப்பக்கத்தில் திருமகள் இருப்பது தரிசிக்கத்தக்கது. இதனாலேயே பெருமாளுக்குத் திருவாழ்மார்பன் என்னும் பெயர் வழங்குகிறது. நம்மாழ்வாரின் தாயாராகிய உடையநங்கையார் அவதரித்த தலம். உடைய நங்கையாரின் தந்தையாகிய திருவாழ்மார்பன் திருமாளிகையிருந்த இடத்தில் ஒரு பசனைமடம் அமைந்துள்ளது. இங்குள்ள அர்ச்சகர்கள் உடுப்பிப் பகுதியைச் சேர்ந்த அந்தணர்கள். இவர்களுக்குச் சிவ-விஷ்ணு வேறுபாடு இல்லை. |
| 61 | திருக்காட்கரை | காட்கரைஅப்பன் | பெருஞ்செல்வநாயகி | எர்ணாகுளம் நிலையத்திலிருந்து வடகிழக்கில் 7 கல் தொலைவில் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 62 | திருமூழிக்களம் | திருமூழிக்களத்தான் | மதுரவேணிநாச்சியார் | சோரனூர் - எர்ணாகுளம் செல்லும் பாதையில் காலடி ரோடு நிலையத்திற்கு மேற்கே 7 கல் தொலைவில் உள்ளது. இங்குத் தாயார் சந்நிதி இல்லை. பகவதி அம்மன்சந்நிதி உள்ளது. சந்நிதிக்கு அருகில் ஆல்வாய் நதி ஓடுகின்றது. பூசை நேரத்தில் இங்கு வாத்தியங்கள் வாசிக்கப்படுவதில்லை. |
| 63 | திருப்புலியூர் (குட்டநாடு) | மாயப்பிரான் | பொற்கொடிநாச்சியார் | திருச்செங்குன்றூருக்கு மேற்கே 4 கல் தொலைவில் உள்ளது. மிகவும் சிறிய சந்நிதி. பழுதுபட்டுள்ளது. |
| 64 | திருச்செங்குன்றூர் (திருச்சிற்றாறு) | இமையவர்அப்பன் | செங்கமலவல்லிநாச்சியார் | கோட்டயத்திற்கு 30 கல் தொலைவில் உள்ளது. இத்தலத்திற்குக் கிழக்கே திருவாறன்விளை, மேற்கே திருப்புலியூர், வடமேற்கே திருவண்வண்டூர், வடக்கே திருவல்லவாழ், வடகிழக்கில் திருக்கடித்தானம் என்னும் திவ்வியதேசங்கள் உள்ளன. இவற்றை ஒரே நாளில் சென்று தரிசிக்கலாம். |
| 65 | திருநாவாய் | நாராயணன் | மலர்மங்கைநாச்சியார் | இத்தலம் பாரதப்புழை ஆற்றங்கரையில் எடக்குளம் நிலையத்திற்குத் தெற்கில் ஒரு கல் தொலைவில் உள்ளது. பெருமாளை நாவாய் முகுந்தன் என்றும், தாயாரைச் சிறுதேவிநாச்சியார் என்றும் மக்கள் வழங்குகின்றனர். |
| 66 | திருவல்லவாழ் (திருவெள்ளா) | கோலப்பிரான் | செல்வத்திருக்கொழுந்து நாச்சியார் | இத்தலம் கோட்டயத்திற்கு 4 கல் தொலைவில் உள்ளது. இந்தச் சந்நிதிக்குள் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் வெளியில்நின்றபடியே சேவிக்க வேண்டும். மூலத்தானத்தின் பின்புறத்தில் சுதர்சனம் என்னும் சக்கரத்தாழ்வார் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இச்சந்நிதியில் திருநீறுதான் பிரசாதமாக வழங்கப்படுகிறது. |
| 67 | திருவண்வண்டூர் | பாம்பணையப்பன் | கமலவல்லிநாச்சியார் | திருச்செங்குன்றூர் கோட்டயம் பெருந்துப்பாதையில் உள்ளது. இங்குத் தாயார் விக்கிரகமும் சந்நிதியும் இல்லை. |
| 68 | திருவாட்டாறு | ஆதிகேசவப்பெருமாள் | மரகதவல்லிநாச்சியார் | நாகர்கோயில்-திருவனந்தபுரம் பாதையில் தொடுவட்டி என்னும் ஊரில் இருந்து வடக்கே 6 மைல் தொலைவில் உள்ளது. சந்நிதி மிகவும் சிறியது. |
| 69 | வித்துவக்கோடு | உய்யவந்தபெருமாள் | வித்துவக்கோட்டுவல்லி நாச்சியார் | சோரனூர் பட்டாம்பிக்கு அருகில் உள்ளது. இச்சந்நிதி பாரதப்புழை ஆற்றங்கரையின் மேல் உள்ளது. சந்நிதியில் நுழைந்ததும், எதிரில் சிவன் கோயில் காணப்படுகிறது. இதற்குப் பின்புறம் பெருமாள் சந்நிதி இருக்கின்றது. பெருமாள் நின்ற கோலத்தில் உள்ளார். |

| வ.எண். | திவ்வியதேசங்கள் திருப்பெயர்கள் | பெருமாள்திருப்பெயர் | தாயார்திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 70 | திருக்கடித்தானம் | அற்புதநாராயணன் | கற்பகவல்லித்தாயார் | கோட்டயம்-செங்கணாச்சேரிக்கு அருகில் உள்ள தலம். சந்நிதியின் கருவறையின் பின்னால் நரசிம்ம சுவாமி திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. |
| 71 | திருவாறன்விளை | திருக்குறளப்பன் | பத்மாசனநாச்சியார் | திருச்செங்குன்றூருக்கு 6 கல் தொலைவில் உள்ளது. இச்சந்நிதியின் இடப்புறம் பம்பை என்ற நதி ஓடுகின்றது. அருகில் ஒரு சிவன்கோயில் உள்ளது. |

## நடுநாட்டுத் திருப்பதிகள்-2

| வ.எண். | திவ்வியதேசங்கள் திருப்பெயர்கள் | பெருமாள்திருப்பெயர் | தாயார்திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 72 | திருவகீந்திரபுரம் (வடகலைச் சந்நிதி) | தெய்வநாயகப்பெருமாள் தேவநாதன் | வைகுண்டநாயகி | திருப்பாதிரிப்புலியூர் நிலையத்தில் இருந்து மேற்கே 3 கல் தொலைவில் உள்ளது. அகி—பாம்பு. அகி+இந்திரன்=அகீந்திரன்-பாம்புகளின் தலைவனாகிய ஆதிசேடன். அகீந்திரன் என்னும் ஆதிசேடன் பூசித்த தலமாதலால் அகீந்திரபுரம் என்று பெயர் பெற்றது. இது அயிந்திரபுரம் எனவும், அயிந்தை எனவும் வழங்கும். இது கெடிலம் என்னும் கருடநதியின் கரையில் உள்ளது. பக்கத்தில் உள்ள அவுடத மலையின் மேல் அயக்கிரீவர் சந்நிதி உள்ளது. வேதாந்த தேசிகர் அயக்கிரீவரின் அருளுபவதேசம் பெற்றவர். இங்குள்ள உற்சவமூர்த்தியின் திருவுருவத்தில் வலக்கையில் பிரமனின் சின்னமாகிய தாமரை மலரும், நெற்றியில் சிவனின் சின்னமாகிய நெற்றிக் கண்ணும் சிரசில் சடையும் இருப்பதுடன், இரண்டு திருக்கைகளிலும் திருமாலின் சின்னமாகிய சங்கு சக்கரங்கள் இருக்கின்றன. |
| 73 | திருக்கோவலூர் | திருவிக்கிரமன் ஆயனார் | பூங்கோவல்நாச்சியார் | காட்பாடி-விழுப்புரம் கிளைப் பாதையில் உள்ள ஒரு நிலையம். நிலையத்தில்இறங்கித் தெற்கேபெண்ணையாற்றைக் கடந்தால், இத்தலத்தை அடையலாம். இத்தலத்துப் பெருமாளின் வலக்கால் வானத்தை ஊடுருவி நிற்பதுபோல் நீண்டுள்ளது. இடக்கையில் இருக்கக்கூடிய சங்கு வலக்கையில் இருக்கின்றது. சந்நிதியின் இடப்பக்கத்தில் துர்க்காதேவியின் சந்நிதி உள்ளது. முதலாழ்வார்கள் மூவரும் சந்தித்து அந்தாதி பாடிய சிறந்த தலம். கடலூர்ப் புதியநகரத்திற்கு 45 கல் தொலைவில் உள்ளது. |

# தொண்டை நாட்டுத் திருப்பதிகள்—22

| | | | | |
|---|---|---|---|---|
| 74 | திருக்கச்சி (அத்திகிரி, வடகலைச் சந்நிதி). | பேரருளாளப்பெருமாள் வரதராசப்பெருமாள் தேவப்பெருமாள் | பெருந்தேவித்தாயார் | காஞ்சிபுரம் நிலையத்திலிருந்து 2 கல் தொலைவில் உள்ளது. காஞ்சிபுரத்தில் மட்டும் 108 வைணவத் திருப்பதிகளுள் ஆழ்வார்களின் மங்களாசாசனம் பெற்ற 14 திருப்பதிகள் உள்ளன. ஒரே நாளில் இவற்றைத் தரிசிக்கலாம். கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்று குறிப்பிடப்படும் மூன்றில், பெருமாள்கோயில் என்பது காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள்கோயிலேயாகும். இங்கு நிகழும் கருடசேவை மிகவும் புகழோங்கிய விழாவாகும். |
| 75 | அட்டபுயகரம் (அஷ்டபுஜம்) | ஆதிகேசவப்பெருமாள் சக்கரதரர் | அலர்மேல்மங்கைத் தாயார் | காஞ்சி வரதர் சந்நிதிக்கு மேற்கே ஒரு கி. மீ. தொலைவில் உள்ளது. இங்குப் பெருமாள் எட்டு கைகளுடன் இருப்பதனால் இதற்கு அட்டபுயகரம் என்பது பெயராயிற்று. |
| 76 | திருத்தண்கா (விளக்கொளி கோயில்) | விளக்கொளிப்பெருமாள் திபப்பிரகாசர் | மரகதவல்லித் தாயார் | இது அட்டபுயகரம் சந்நிதிக்கு அரை கல் தொலைவில் உள்ளது. இச்சந்நிதிக்கு வெளியில் இடப்பக்கத்தில் வேதாந்ததேசிகர் சந்நிதி உள்ளது. இங்கேதான் வேதாந்ததேசிகர் அவதரித்தார். |
| 77 | வேளுக்கை | முகுந்தநாயகன் | வேளுக்கைவல்லி | இச்சந்நிதி சின்னகாஞ்சிபுரத்தில் உள்ளது. ஆனால் தற்போது சந்நிதி இல்லை. மூலவரின் திருவுருவம் ஒன்றுமட்டும் உத்தரமேரூர்ச் சாலையின் வலப் பக்கத்தில் உள்ள ஒரு திருக்குளத்தின் நடுவில் உள்ளது. இவருக்குப் பூசை இல்லை. |
| 78 | பாடகம் (பாண்டவர் தூதர் சந்நிதி) | பாண்டவர் தூதர் | உருக்குமிணிதேவி, சத்தியபாமை | இச்சந்நிதி பெரியகாஞ்சிபுரத்தில் உள்ளது. ஏகாம்பரநாதர் கோயிலுக்கு மேற்கே இருக்கின்றது. |
| 79 | திருநீரகம் | சகதீசப்பெருமாள் | நிலமங்கைவல்லி | இது பெரிய காஞ்சிபுரத்தில் உலகளந்தபெருமான் கோயில் பிராகாரத்தின் வடபுறத்தில் உள்ளது. |
| 80 | நிலாத்திங்கள்துண்டம் | நிலாத்திங்கள்துண்டத்தான் சந்திரசூடப்பெருமாள் | நேரொருவர் இல்லாவல்லி. | பெரியகாஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயில் உட்பிராகாரத்தில் வலப்பக்கத்தில் உள்ள சிறிய சந்நிதி. |
| 81 | திருவூரகம் (உலகளந்தபெருமாள் சந்நிதி) | உலகளந்தபெருமாள் திரிவிக்கிரமன் | அமுதவல்லிநாச்சியார் | இது பெரிய காஞ்சிபுரத்தில், பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது. இக்கோயிலின் பிராகாரத்துக்குள்ளாகவே, நீரகம், காரகம், கார்வானம் என்னும் வேறு மூன்று சந்நிதிகள் உள்ளன. இங்குப் பெருமாள் உரக (பாம்பு) வடிவமாய்க் காட்சி தருதலால், இதற்கு ஊரகம் என்ற பெயர் அமைந்தது. |

| வ.எண். | திவ்வியதேசங்களின் திருப்பெயர்கள் | பெருமாள் திருப்பெயர் | தாயார் திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 82 | திருவெஃகா (யதோக்தகாரி சந்நிதி) | சொன்னவண்ணம் செய்த பெருமாள், யதோக்தகாரி. | கோமளவல்லிநாச்சியார் | இது சிறிய காஞ்சிபுரத்தில் தேரடிக்கு அருகில் இருக்கின்றது. இங்குள்ள திருக்குளமாகிய பொய்கையிலேயே பொய்கையாழ்வார் அவதரித்தனர். திருமழிசையாழ்வார் 'பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்' என்றும் 'பைந்நாகப் பாய்படுத்துக்கொள்' என்றும் சொல்லிப் பாடியவாறு செய்ததனால், இவருக்குச் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்ற பெயரமைந்தது. |
| 83 | திருக்காரகம் | கருணாகரப்பெருமாள் | பத்மாமணிநாச்சியார் | காஞ்சி உலகளந்தபெருமாள் சந்நிதியின் உட்பிராகாரத்தில் இருக்கின்றது. |
| 84 | திருக்கார்வானம் | கள்வர் | கமலவல்லிநாச்சியார் | காஞ்சி உலகளந்த பெருமாள் சந்நிதியின் பிராகாரத்தில் இருக்கின்றது. |
| 85 | திருக்கள்வனூர் | ஆதிவராகப்பெருமாள் | அஞ்சிலைவல்லிநாச்சியார் | பெரியகாஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் சந்நிதியின் கருவறையின் நுழைவாயிலில் உள்ளது. காமாட்சியம்மை கோயிலில் உள்ள உலகாணித் தீர்த்தம் என்னும் குளத்தின் வடகிழக்கு மூலையில், நின்றான், இருந்தான், கிடந்தான் என்று மூன்று பெருமாள் சந்நிதிகள் உள்ளன. |
| 86 | திருப்பவளவண்ணம் | பவளவண்ணப்பெருமாள் | பவளவல்லிநாச்சியார் | காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர், காமாட்சியம்மை கோயில்களுக்கு அருகில் உள்ளது. பச்சைவண்ணர் சந்நிதி இதற்கு மேற்கில் உள்ளது. |
| 87 | திருப்பரமேச்சுர விண்ணகரம் (வைகுண்டப்பெருமாள் சந்நிதி) | பரமபதநாதன் | வைகுண்டவல்லி | பெரியகாஞ்சிபுரத்தில், இருப்புப் பாதைநிலையத்திற்கு மிக அருகில் உள்ளது. பரமேச்சுரவர்மன் என்னும் பல்லவமன்னனால் கட்டப்பெற்றது. இச்சந்நிதியின் விமானம் இரண்டு அடுக்கு உடையது. கீழ்ச்சந்நிதியில் வைகுண்டநாதர் உள்ளார். முதல் விமானத்தில் பள்ளிகொண்டநிலையிலும், இரண்டாம் விமானத்தில் நின்ற திருக்கோலத்திலும் பெருமாள் காட்சிதருகின்றார். அழகிய சிற்பங்கள் நிறைந்தது. வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. |
| 88 | திருப்புட்குழி | விசயராகவப்பெருமாள் | மரகதவல்லிநாச்சியார் | காஞ்சிபுரத்திற்கு மேற்கே 7 கல் தொலைவில் வேலூர் செல்லும் பாதையில் உள்ளது. புள்-பறவை. சடாயு என்னும் கழுகரசன் ஆகிய பெரியவுடையாரைக் குழியிலிட்டு இராமபிரான் இறுதிக்கடன் செய்தருளிய தலம். ஆதலால் திருப்புட்குழி என்று பெயர் அமைந்தது. |
| 89 | திருநின்றவூர் (தின்னனூர்) | பக்தவத்சலர் பத்தர்ஆவிப்பெருமாள் | என்னைப்பெற்றதாயார் | சென்னை-திருவள்ளூர் இருப்புப் பாதையில் உள்ள ஒரு நிலையம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 90 | திருஎவ்வுள் (திருவள்ளூர்) | வீரராகவப்பெருமாள் | கனகவல்லித்தாயார் | சென்னை-அரக்கோணம் பாதையில் உள்ள ஒரு நிலையம். பெருமாள் சாலிகோத்திர முனிவருக்குக் காட்சிதந்து, 'யாம் உறைதற்குரிய உள் எவ்வுள்? (இடம் எந்த இடம்)' என்று வினவியதனால், இதற்குத் திருஎவ்வுள்ஊர் என்று பெயரமைந்தது. |
| 91 | திருநீர்மலை | நீலமுகில்வண்ணன் | அணிமாமலர்மங்கைத் தாயார் | சென்னை-தாம்பரம் பாதையில் உள்ள பல்லாவரம் நிலையத்திலிருந்து 4 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள மலையின் அடிவாரத்தில் நீலமுகில் வண்ணப்பெருமாள் சந்நிதியும், மலையின்மேல் அரங்கநாதர், சாந்தநரசிம்மர், சக்ரவர்த்தித்திரு மகன் (இராமபிரான்) ஆகியோர் சந்நிதிகளும் உள்ளன. |
| 92 | திருவிடவெந்தை (திருவிடந்தை) | நித்தியகல்யாணப்பெருமாள் | கோமளவல்லிநாச்சியார் | சென்னை-மாமல்லபுரம் பாதையில், மாமல்லபுரத்திற்கு அருகில் 6 கல்தொலைவில் உள்ளது. இங்குள்ள வராகப்பெருமாள் தமது தேவியை இடப்பாகத்தில் கொண்டிருத்தலால், இதற்குத் திருஇடஎந்தை என்ற பெயரமைந்தது. அதுஇப்போது திருவிடந்தை என வழங்குகின்றது. மூலவர் ஆதி வராகப் பெருமாள். உற்சவர் நித்தியகல்யாணப் பெருமாள். 108 திருப்பதிகளில் இந்தச் சந்நிதியின் மூலத்தானத்தில் மட்டுமே பெருமாள் வராகவடிவில் காட்சி தருகின்றார். |
| 93 | திருக்கடல்மல்லை (மகாபலிபுரம், மாமல்லபுரம்) | தலசயனத்துறைவார் | நிலமங்கைநாச்சியார் | சென்னையிலிருந்து 37 கல். புகழ்பெற்ற சுற்றுலா நகரம். முதலாழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வாரின் அவதாரத் தலம். பல்லவமன்னர்களின் அழகிய சிற்பங்களால் புகழ்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரமும் தலமும் ஆகும். |
| 94 | திருவல்லிக்கேணி | வேங்கடகிருஷ்ணன் பார்த்தசாரதி | உருக்குமிணிப் பிராட்டி. | சென்னை நகரின் ஒரு முதன்மையான பகுதி. வேங்கடகிருஷ்ணர் உருக்குமிணிப்பிராட்டியுடன் அநிருத்தர் பிரத்தியும்நர் பலராமர் சாத்தகி ஆகியவருடன் எழுந்தருளியுள்ளார். மற்றும் மந்நாதர் என்னும் அரங்கநாதர் (என்னை ஆளுடைய அப்பன்) வேதவல்லித் தாயாருடனும், வராகநாயனார், அழகியசிங்கர், தெள்ளியசிங்கர், சக்கரவர்த்தித்திருமகன், தேவப்பெருமாள் (கஜேந்திரவரதர்) முதலியவர்களின் சந்நிதிகளும் இங்கு அமைந்துள்ளன. இத்தலத்திற்குள்ளேயே ஐந்து சந்நிதிகள் இருக்கின்றன. சென்னை நகரிலுள்ள புகழ்மிக்க பழமைவாய்ந்த வரலாற்றுச் சிறப்புடைய சந்நிதி. |
| 95 | திருக்கடிகை (சோழசிங்கபுரம், சோளிங்கபுரம்) | யோகநரசிம்மர் தக்கான் (பக்தஉசிதப் பெருமாள்). அக்காரக்கனிப்பெருமாள் | அமிர்தவல்லிநாச்சியார் | ஒரு கடிகைப் பொழுது நேரம் தங்கினாலும் முத்தி தரும் தலமாதலால், இதற்குக் கடிகை, கடிகாசலம் எனப் பெயரமைந்தது. இங்குள்ள மலையின்மேல் யோகநரசிம்மர் எழுந்தருளியுள்ளார். இதற்குக் கிழக்குப்புறம் உள்ள சிறிய குன்றில் ஆஞ்சநேயர் சந்நிதி, யோகநரசிம்மரை நோக்கியிருக்கும் நிலையில் அமைந்துள்ளது. சிறந்த பிரார்த்தனைத் தலம். |

## வடநாட்டுத் திருப்பதிகள்—12

| வ. எண். | திவ்வியதேசங்களின் திருப்பெயர்கள் | பெருமாள் திருப்பெயர் | தாயார்திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 96 | திருவேங்கடம் (திருமலை, திருப்பதி) | திருவேங்கடத்தான் சீநிவாசன், வேங்கடாசலபதி, பாலாஜி | அலர்மேல்மங்கைத்தாயார் பத்மாவதி | மிகவும் புகழ்பெற்ற அனைத்திந்தியப் பெருந்தலம், ஆழ்வார்கள், பதின்மரும், ஆண்டாள்நாச்சியாரும் மங்களாசாசனம் செய்தருளிய தலம். |
| 97 | சிங்கவேள்குன்றம் (அகோபிலம்) | நரசிம்மன் | திருமகள்நாச்சியார் | குண்டக்கல்-விஜயவாடா கிளைப்பாதையில் நந்தியால் நிலையத்தில் இறங்கித் தென்திசையில் சுமார் 38 கல் தொலைவில் உள்ளது. சிங்கவேள் என்னும் நரசிம்மர் வீற்றிருக்கும் திருமலையாதலால், இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. இங்கு ஒன்பது நரசிம்மமூர்த்திகள் உள்ளனர். இலட்சுமி நரசிம்மர், யோகநரசிம்மர், சத்திராங்க நரசிம்மர், பார்க்கவ நரசிம்மன், காரங்கி நரசிம்மர், உக்கிர நரசிம்மர், வராகநரசிம்மர், பர்முலிதி நரசிம்மர், பிரகலாத நரசிம்மர் என்று இந்த நவநரசிம்மர்கள் எழுந்தருளியுள்ள தலம். |
| 98 | திருவயோத்தி | சக்கரவர்த்தித்திருமகன் இரகுநாயகன் | சீதைப்பிராட்டி | கிழக்கிந்திய இருப்புப்பாதையில் ஒரு நிலையம். இராமபிரான் திருவவதாரத்தலம். முத்திதரும் தலங்கள் ஏழில் ஒன்று. அனுமான்டேக்ரி என்னும் இடத்தில் இங்கு ஒரு பெரிய ஆஞ்சநேயர் கோயில் உள்ளது. இத்தலம் சரயுநதியின் வலப்பக்கத்தில் உள்ளது. குப்தகாட் என்னும் நீராடுதுறையில்தான், இராமபிரான் தன் பரிவாரங்களுடன் சரயு நதியில் இறங்கி மறைந்ததாகக் கூறுவர். |
| 99 | நைமிசாரணியம் | தேவராசர் | அரிலட்சுமி புண்டரீகவல்லித்தாயார் | முனிவர்கள் தவஞ்செய்யும்பொருட்டுப் பிரமதேவர் தருப்பைப் புல்லை நேமியாகச் செய்து உருட்டிவிட அது சென்று நின்ற சிறந்த இடமே, முனிவர்கள் தவஞ்செய்தற்குரிய இடமாக அமைந்து நைமிசாரண்யம் எனப் பெயர்பெற்றது. இங்குப் பெருமாள் ஆரண்யவடிவமாகவே விளங்குகின்றார் என்பர். வியாசர், சூதர், முதலிய முனிவர்கள் பலரும் தவஞ்செய்த இடம். கிழக்கிந்திய இருப்புப்பாதையில் இது நிம்சார் என்னும் நிலையமாக விளங்குகின்றது. நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. |
| 100 | சாளக்கிராமம் | மூர்த்திப்பெருமாள் | சீதேவி நாச்சியார் | இது நேப்பாளத்தின் தலைநகரமாகியகாட்மண்டிற்கு மேற்கே 60 கல் தொலைவில் கண்டகி நதியின் கரையில் உள்ளது. |
| 101 | வதரியாச்சிரமம் (பதரிகாசிரமம்) | பதரிநாராயணர் | அரவிந்தவல்லிநாச்சியார் | இருடிகேசத்திலிருந்து இமயமலையின்மீது 170 கல் தொலைவில் உள்ளது. பதரி-இலந்தை மரம். இலந்தை மரங்கள் அடர்ந்த காடு என்பது இதன் பொருள். பெருமாள் இங்கு நரநாரணராய், தாமே ஆசாரியனும் சீடனுமாய் இருந்து நரனுக்குத் திருமந்திர உபதேசம் செய்தார் என்பர். |

| | | | | |
|---|---|---|---|---|
| 102 | திருக்கண்டங்கடிநகர் (தேவப்பிரயாகை) | நீலமேகப்பெருமாள், புருஷோத்தமன். | புண்டரிகவல்லித்தாயார் | இத்தலம் ஹரித்துவாரத்திலிருந்து 58 கல்தொலைவில் உள்ளது. |
| 103 | திருப்பிரிதி (சோஷிமடம்) | பரமபுருடன் | பரிமளவல்லிநாச்சியார் | இது ஹரித்துவாரத்திலிருந்து 165 கல் தொலைவில் உள்ளது. |
| 104 | துவாரகை (துவரை) | கல்யாணநாராயணன் | கல்யாணநாச்சியார் | இராஜ்கோட் சந்திப்பு நிலையத்திலிருந்து ஜாம்நகர் வழியாய்த் துவாரகை நிலையம் சேரலாம். இங்குக் கண்ணபிரான் தம் தேவிமார்களுடன் வாசம் செய்த திருமாளிகை எனப்படும் ஒரு கட்டிடம் உள்ளது. கண்ணபிரான் அரசாண்ட தலம் என்பர். |
| 105 | வடமதுரை (கோவர்த்தனம்) | கோவர்த்தனஈசன் | சத்தியபாமை | டெல்லி நகரத்திற்கு 30 கல் தொலைவில் உள்ளது. மது என்ற அசுரனைத் திருமால் அழித்த தலமாதலால் இதற்கு மதுரை எனப் பெயரமைந்தது. தெற்கேயுள்ள மதுரையில் வேறுபட்டதாதலின் இதனை வடமதுரை என்பர். கண்ணபிரான் அவதாரத்தலம். முத்திதரும் தலங்கள் ஏழில் ஒன்று. இச்சந்நிதிக்கு எதிரில் யமுனை நதி ஓடுகின்றது. இவ்விடத்திலிருந்து தென்கிழக்கே 4 கல் தொலைவில் கண்ணபிரான் அவதரித்த திருவாய்ப்பாடி என்ற இடமுள்ளது. இங்கிருந்து 7 கல்தொலைவில் கோவர்த்தனகிரி உள்ளது. இம்மலையையே கண்ணபிரான் தம் கையில் ஏந்தி மழையிலிருந்து இடையர்களையும் பசுநிரைகளையும் காத்தனர் என்பர். கண்ணபிரானின் தொடர்புடைய பிருந்தாவனம் இதற்கு ஆறுதல் தொலைவில் உள்ளது. இவ்வூருக்கு அருகேயுள்ள ஒரு பள்ளமான மடுவினைக் காளிங்கமர்த்தன மடு என்கின்றனர். சீரகாட் என்னுமிடத்தில் ஒரு புன்னை மரம் உள்ளது. இங்குதான் கண்ணபிரான் கோபியர்களுடன் நீர் விளையாடல் புரிந்தான் என்பர். |
| 106 | திருஆய்ப்பாடி (கோகுலம்) | நவமோகனகிருஷ்ணன் | உருக்குமிணிப்பிராட்டி, சத்தியபாமைப்பிராட்டி | வடமதுரைக்குத் தென்கிழக்கே 4 கல்தொலைவில் உள்ளது. ஆயர் என்னும் இடையர் வசிக்கின்ற சேரி ஆய்ப்பாடி எனவும், ஆயர்பாடி எனவும் வழங்கும். |
| 107 | திருப்பாற்கடல் | திருப்பாற்கடல்நாதன் | கடல்மகள்நாச்சியார் | திருப்பாற்கடல் வடதிசையில் உள்ளது என்பர். நாம் நம் மனித உடலுடன் போகமுடியாத தலம். |
| 108 | திருநாடு | பரமபதநாதன் | பெரியபிராட்டியார் | இதுவும் நாம் நம் மனித உடலுடன் போகமுடியாத தலம். இது வைகுண்டம் எனவும், பரமபதம் எனவும் வழங்கப்பெறும். |

—: (முற்றும்) :—

# ஆறாறு தத்துவங்கள்

ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

**முன்னுரை:**

'உண்மை விளக்கம்' என்னும் நூற்பெயரின் தொடரில், 'உண்மை' என்னும் சொல்லானது பல பொருள்களை உள்ளடக்கி நிற்பதொன்றாகத் திகழ்கின்றது. தத்துவம் என்னும் வடசொல், தமிழில் உண்மை எனப் பொருள்படும். ஆதலின் ''பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல்'' என உமாபதி சிவனார் அருளிச் செய்தபடி, முப்பொருள் இயல்புகளைக்குறித்து விளக்கத் தலைப்படும் இச் சைவ சித்தாந்த நூலில், தத்துவங்கள் முப்பத்தாறு குறித்த செய்திகளும், இயைபுடைமை பெற்றுத் தெளிவுற விளக்கப்படுகின்றன.

''ஆறாறு தத்துவம் ஏது? ஆணவம் ஏது? அன்றே தான்
மாறா வினைஏது? மற்றிவற்றின்-வேறாகா
நான்ஏது? நீஏது? நாதன்நடம், அஞ்செழுத்துத்
தான்ஏது? தேசிகனே! சாற்று''

**தத்துவமும் சாங்கியமும்:**

காணப்பட்ட உலகத்தைக் கொண்டே, காணப்படாத கடவுளின் உண்மையை உணர்தல் வேண்டும். ஆசிரியர் திருவள்ளுவர், மெய்கண்டார் முதலிய சான்றோர்கள் அனைவரும் இம்முறைமை தழுவியே கடவுளுண்மையினைக் கட்டுரைத்தருளி யிருத்தல்காணலாம். மாணிக்க வாசகரும் ''ஞாலமே கரியாக நான் உனை நச்சி நச்சிட வந்திடும் காலமே'' என் அருளிச் செய்தனர். மனிதன் அறிவு வளரப் பெற்றுச் சிந்திக்கத் தொடங்கிய காலம் முதல், இவ்வுலகியற்கையைக் கூர்ந்து நோக்கிப் பலவகைகளில் ஆராய்ந்து பகுத்துணரத் தலைப்படுவானாயினன். அம் முயற்சியில் முதற்கண் தலைப்பட்டு நின்று ஓரளவு வெற்றிகண்டவன் உலகாயதன். அவன் நிலம் நீர் தீ வளி என்னும் நான்கு தத்துவங்கள் வரையில் மட்டுமே ஆராய்ந்து அமைந்தனன். ஆனால் சாங்கியம் என்னும் அறிவுநூற் கொள்கை, இருபத்தைந்து தத்துவங்கள் வரையில் ஆராய்ந்தறிந்த சிறப்பை உடையது. 'எண்' எனப் பொருள்படும் 'சங்கியை' என்னும் சொல்லினின்று, சாங்கியம் என்னும் சொல் தோன்றியது.

''சாங்கியம் யோகம் என் றிரண்டு தன்மைய
வீங்கிய பொருள் எலாம் வேறு காண்பன;
ஆங்கவை யுணர்ந்தவர்க் கன்றி, அன்னவன்
ஓங்கிய மேல்நிலை யுணரற் பாலதோ?''

எனக் கம்பர் சாங்கிய நூற் கொள்கையினைப் புகழ்ந்து போற்றுவர். பரிமேலழகர் ''சுவை யொளியூறோசை நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு'' என்னும் திருக்குறள் உரையிற் சாங்கியக் கொள்கையினைப் பாங்குற விளக்கியுள்ளார். பரிபாடல் என்னும் சங்க நூலும் இச் சாங்கியக் கொள்கையினை,

''பாழ்எனக் கால்எனப் பாகுஎன ஒன்றென
இரண்டென மூன்றென நான்கென ஐந்தென
ஆறென ஏழென எட்டெனத் தொண்டென
நால்வகை யூழி எண் நவிற்றும் சிறப்பினை''

என்னும் வரிகளாற் குறிப்பிட்டிருத்தல் காணலாம். சாங்கிய நூற் கொள்கையின் சிறப்பினையே ''ஐயைந்தும் ஆய்வது அறிவு'' என்னும் பழம்பாடலும் விதந்து போற்றுகின்றது.

இந்தியத் தத்துவக் கொள்கைகள் பலவற்றுள் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தது சாங்கியம் ஆகும். உலக அமைப்பு வளர்ந்து ஓங்கியுள்ள இயல்பினை நன்கினிது கூர்ந்து ஆராய்ந்து, இருபத்தைந்து தத்துவங்களாகப் பகுத்துணர்த்திய பெருஞ்சிறப்பு சாங்கியத்திற்கே யுரியதாகும். சாங்கிய நூல் உலகமைப்பினை உற்று நோக்கிப் பாகுபாடு செய்து விளக்கியுள்ள திறம், காரண காரிய அடிப்படையில் அறிவு நெறி முறைகளுக்குப் பெரிதும் இயைந்து விளங்குகின்றது. இவ்வாற்றாற் சாங்கியக் கொள்கையானது, மெய்ப் பொருளறிவுத் துறையில் குறிப்பிடத் தக்கதொரு சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது எனலாம்.

**சைவசித்தாந்தத்தின் சால்பு:**

இத்தகைய சிறந்த சாங்கியக் கொள்கையினும் மிக ஆழ்ந்து நுணுகிச் சென்று, உலக அமைப்பின் பொருட் கூறுகளையும், தோற்ற ஒடுக்க முறைகளையும் குறித்து ஆராய்ந்து, சைவசித்தாந்தம் திறம்பட விளக்குகின்றது. இவ்விளக்கத்தின் விளைவே ஆறாறு தத்துவங்

களைப் பற்றிய செய்திகள் ஆகும். உலோகாய
தம் மாத்தியமிகம் யோகாசாரம் சௌத்திராந்
திகம் வைபாடிகம் ஆருகதம் தருக்கம்
மீமாஞ்சை ஏகான்மவாதம் முதலிய சமயங்கள்
பலவும், தத்துவங்களை ஆராயும் நெறியில்
முறையே ஒன்றினொன்று குறைந்து நிற்பன
வாய், மூலப்பகுதிக்கு மேற்பட்ட பொருளுண்
மையினைக் கண்டறிந்தனஅல்ல. இச்சமயங்கள்
கூறும் தத்துவப் பாகுபாடுகள் அனைத்தும்,
சாங்கியக் கொள்கை விளக்கும் இருபத்தைந்து
தத்துவங்களுள் அடங்குவனவேயாம். மூலப்
பகுதிக்கு மேற்பட்ட பன்னிரண்டு சூக்கும
தத்துவங்களையெல்லாம் ஆராய்ந்துணர்ந்த
சிறப்பு, அகப்புறம் அகம் என்னும் பாகுபாட்
டைச் சேர்ந்த சமயங்களுக்கும், இவைகளெல்
லாவற்றிற்கும் அப்பாற்பட்டிலங்கும் சைவ
சித்தாந்தத்திற்குமே யுரியதாகும்.

''ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுஎன்பர்
ஆகின்ற ஆறாறு அருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி, வைணவர்க்கு
ஆகின்ற நாலாறு, ஐயைந்து மாயா வாதிக்கே''

எனவரும் திருமந்திரப் பாடல், ஆறாறு தத்து
வங்கள் அருஞ்சைவர்க்கே யுரியன என்று கூறி
யிருத்தல் அறிந்தின்புறத் தக்கது, இம்முப்பத்
தாறு தத்துவங்களும் முறையே ஆன்மதத்துவம்
(24) வித்தியாதத்துவம் (7), சிவதத்துவம் (5)
என மூன்றுவகைப்படும். அவற்றுள் ஆன்மதத்
துவம் இருபத்து நான்கும் முறையே வருமாறு:

**ஆன்ம தத்துவங்கள்:**

(1) பூதங்கள் ஐந்து : பிருதிவி அப்பு
தேயு வாயு ஆகாசம். இவற்றை நிலம் நீர் தீ
வளி விசும்பு எனவும், மண் புனல் அனல் கால்
வான் எனவும் கூறுவர். அண்டம் பிண்டம்
என்னும் இரண்டும் இவ் ஐம்பெரும் பூதங்களின்
கலப்பினால் ஆகிய காரியமேயாகும். பூதங்கள்
ஐந்திற்கும் தனித்தனியே வடிவு நிறம் எழுத்து
குணம் குறி தொழில் தெய்வம் என்பன உண்டு.
இப்பூதங்கள் ஐந்தும் அகப்பூதம் அகப்புறப்
பூதம் புறப்பூதம் என மூன்று வகைப்படும்.
இந்திரியங்களுக்குப் பற்றுக்கோடு ஆவன
பூதங்கள். நம்மனோர் உடலாக அமைவன
அகப்புறப் பூதங்கள். உயிருக்கு நுகர் பொரு
ளாகிய விடயமாக இருப்பன புறப்பூதங்கள்.

(2) தன்மாத்திரைகள் ஐந்து : சப்தம்
பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்பன. இவை
முறையே ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம்
என வழங்கப்படும். 'சுவை ஒளி ஊறு ஓசை
நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான்கட்டே
யுலகு' என்பது திருக்குறள். பூதங்கள் ஐந்தின்
சூக்கும நிலையே தன் மாத்திரைகள் ஆகும்.
தன்மாத்திரைகளில் இருந்தே பூதங்கள் ஐந்தும்
முறையே தோன்றுகின்றன. தன் மாத்திரைகள்
பூதாதி யாங்காரத்தில் இருந்து பிறக்கின்றன.
தன் மாத்திரையும் ஐம்பெரும் பூதமும், தேர்
ஊர்வானுக்குத் தேர்போல இந்திரியங்கட்கு
ஆற்றல் விளைவித்து நிற்கும். பெரும்பூதமும்
தன்மாத்திரையும் குடமும் குடமேற்பூச்சும்
போலும்.

(3) ஞானேந்திரியங்கள் ஐந்து :சுரோத்
திரம் துவக்கு சட்சு சிங்நுவை ஆக்கிராணம்
என்பன. இவற்றை முறையே செவி தோல்
கண் நாக்கு மூக்கு என்பர். இவை ஐந்தும்
முறையே ஐம்பூதங்களைப் பற்றுக்கோடாகக்
கொண்டு, சுவை யொளி யூறோசை நாற்றங்
களை அறியும். அறிகருவிகள் ஆகிய ஞானேந்
திரியங்கள், தைசத ஆங்காரத்தில் இருந்து
தோன்றும்.

(4) கன்மேந்திரியங்கள் ஐந்து: வாக்கு
பாதம் பாணி பாயுரு உபத்தம் என்பன. இவை
முறையே வாய் கால் கை எருவாய் கருவாய்
எனவும் படும். ஐம்பூதங்களைப் பற்றுக்கோடா
கக்கொண்டு, இவைகள் பேசல் நடத்தல் கொடுத்
தல் விடுத்தல் இன்புறல் (வசனம் கமனம்
தானம் விசர்க்கம் ஆனந்தம்) என்னும் தொழில்
களைச் செய்யும். தொழிற் கருவிகள் ஆகிய
கன்மேந்திரியங்கள், வைகாரியாங்காரத்
தினின்று பிறக்கும்.

(5) அந்தக் கரணங்கள் நான்கு : மனம்
புத்தி அகங்காரம் சித்தம் என்பன. ஒரு விட
யத்தைப் புறவிந்திரியம் பொதுவகையான் முன்
னுணர, அதன்பின் அவ்விடயத்தை அகவிந்திரி
மாகிய மனம் பற்ற, அதன் பின்ஆங்காரம்
ஒருப்பட்டு எழ, அதன் பின்னர்ப் புத்தி நிச்ச
யிக்கும். சித்தம் இஃது யாதாகற்பாற்று என
ஒரு பொருளைச் சிந்திக்கும். மனம் இது
குற்றியாகற்பாற்று மகனாகற்பாற்று என
ஒன்றைச் சங்கற்பித்தும், அஃதாமோ அன்றோ
என ஐயுற்றும் பற்றி நிற்கும். ஆங்காரமானது
குற்றியென்றாதல் மகனென்றாதல் ஒன்றை நிச்
சயிப்பேன் யான் என்று எழுச்சி கொள்ளும்.
புத்தியானது இவன்மகன் இதுகுற்றி இஃ
தாடை என அவ்வப் பொருள்களைப் பெயர்
சாதி கன்மம் குணம் என்பன பற்றிச் சிறப்பு
வகையால் துணியும். கண்ணுக்குக் காட்டாகிய
விளக்குப் போல, ஆன்மாவுக்குக் காட்டாக
நிற்பது அந்தக்கரணம். சிந்தித்தல் ஆகிய மனத்
தின் செய்கையே சித்தம் என்று கூறப்படுவ
தல்லது, சித்தம் என்பது ஒரு தனித் தத்துவ
மன்று, ''சிந்தை நினைவு ஐயம் வந்து தரும்
மனம் ஒழிய வகுப்பொணாதே'' எனச் சிவப்
பிரகாசமும், ''மனமது தைசதத்தின் வந்து ஒரு
பொருளை முந்தி நினைவதும் செய்து, அங்கு
ஐய நிலைமையில் நிற்கும்'' எனச் சிவஞான
சித்தியாரும் கூறுதல் காணலாம்.

உண்மை விளக்கத்தில், மனம் புத்தி அகங்
காரம் சித்தம் என்னும் முறையில் வைத்து
அந்தக் கரணங்களின் பெயர் கூறப்பட்டுள்ளது.
அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு
என்பதே முறையாயினும், ஆசிரியர் திருவள்ளு
வர்,

''படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு''

எனச் ''செய்யுளாகலின் முறை பிறழக் கூறி
னார்'' எனப் பரிமேலழகர் கொள்ளுமாறு
போல, ஈண்டு சித்தம் மனம் அகங்காரம் புத்தி
எனற்பாலனவற்றையே, திருவதிகை மனவாச

கங்கடந்தார் செய்யுள் அமைப்பு நோக்கி முறை பிறழ வைத்தார் என உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் சிவஞானபோதப் பேருரையிற் சிவஞான சுவாமிகள் விளக்கியருளினர்.

இது காறும் கூறிவந்த தத்துவங்கள் இருபத்துநான்கும், ஆன்மாவுக்குத் தூல வடிவில் நேரே தொடர்புற்றுப் பயன்படுவன வாதலின், ஆன்மதத்துவங்கள் எனப் பெயர் பெறும். இதனைச் சீகண்டருத்திரர் அதிட்டித்து நிற்பர்.

**வித்தியா தத்துவங்கள்:**

(1) காலதத்துவம்: புத்தர் முதலினோர், காலம் என்றொரு பொருள் இல்லை என்பர். மாந்தளிர் முதலியன இளவேனிற் காலம் முதலியவற்றினன்றித் தோன்றாமையும், முல்லைப்பூ முதலியன கார்காலம் முதலியவற்றினன்றி மலராமையும் காண்கின்றோம். இங்ஙனமே உலகத்துப் பொருள்களெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றிப் பிறிதொரு காலத்தில் அழிந்துபடுதல், யாவரும் அறிந்ததொன்று. ஏனைக் காரணங்களெல்லாம் தொக்க வழியும் இதற்கு முன்னர்த் தோன்றாத ஒரு பொருள், இப்பொழுது தோன்றுவதற்கு அமைந்த காரணம் யாது, அது காலம் எனத் துணியப்படும்.

அசுத்தமாயையினின்று அநந்த தேவரால் முறையே காலமும் நியதியும் கலையும் தோன்றும். கலையினின்று வித்தையும், வித்தையினின்று அராகமும் பின்னர்த் தோன்றும். ''மாயையிற் காலமோடு நியதிபின் கலாதி தோன்றும்'' என்பது சிவஞான சித்தியார். சிவப்பிரகாசத்தில் உமாபதி சிவம்கலையின்பின் காலத்தை வைத்து, ''அருத்திமிகும் கலை காலம் நியதியுடன் வித்தை அராகம் இவை அநந்தரால்மாயைதனில் ஆகும்'' என அருளிச் செய்தனர். தோற்றம் பற்றிய முறைமை கருதின் காலம் முன்னாகவும், தொழிற்பாட்டு முறைமை பற்றிக் கருதின் கலை முன்னாகவும் கொள்ளப்படும். இவ்விருவகையினையும் இவ்விரு நூல்களும் உணர்த்தின.

காலம் என்னும் தத்துவமானது செல்காலமான எல்லையும், நிகழ்காலமான பலனும், எதிர்காலமான புதுமையும் ஆக மூன்று வகைப் பட்டிருக்கும்.

''நிகழ்காலம் கழிகாலம் எதிர்காலம் என்றே
ஓசைதர வருங்காலம் எல்லை பலம் புதுமை
உறுவிக்கும் இறைசத்தி உடனாய் நின்றே''
—சிவப்பிரகாசம், 40

(2) நியதி தத்துவம்: பால் ஊழ் தெய்வம் விதி நியதி என்பன ஒருபொருட் கிளவிகள். அவரவரால் ஈட்டப்படும் வினையின் பயனை அவரவரே நுகருமாறு, அரசர் ஆணைபோல நியமித்து நிறுத்துவது நியதி தத்துவம். ஒரு பாற்கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் அரசனின் ஆணையில்லாதவழி, எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து கொள்ளுவது போல, நியதி தத்துவம் இல்லாதவழி ஒருவர் செய்த வினைப் பயன் மற்றொருவரைச் சேர்வதாய் முடியும். தொல்காப்பியர் திருவள்ளுவர் இளங்கோவடிகள் முதலிய சான்றோர்கள் எல்லாரும் ஊழினைத் தத்தம் நூல்களிற் குறிப்பிட்டு வலியுறுத்தியுள்ளமை காணலாம்.

''பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்-தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே, தற்செய்த
கிழவனை நாடிக் கொள்ற்கு''

என நாலடியார் கூறுவது போல, ஒரு சிலர் 'அவரவர் வினைப்பயனை நியமித்தற்கு இருவினையே அமையும், நியதி தத்துவம் வேண்டா என்பர். இருவினையானது நுகர்ச்சியைப் பயத்தல் மாத்திரையே யன்றி, அந்நுகர்ச்சி வினை செய்தவனைச் சென்று அடையுமாறு செய்விக்க மாட்டாது. ஆதலின் முதல்வனது ஆணையாகிய சக்தியை முன்னிட்டு நுகர்ச்சியினை நியமித்து நிறுத்துதற்குரிய கருவி நியதிதத்துவமே யாகும். ''செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும் மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள். இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கு இல்லை'' எனப் பெரிய புராணமும் திருவருட்பயனும் கூறுதல் காணலாம். ''நியதி,தேசமிகும் அரசர்தரும் ஆணை, செய்தி செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்கை போல, நேசமுடன் தம்கன்மம் நிச்சயித்து நிறுத்தும்'' (40) என்பது சிவப்பிரகாசம்.

(3) கலைத் தத்துவம்: கலை என்னும் தத்துவமானது மூலமலத்தின் மறைப்புண்டு சூனியம் போல நின்ற ஆன்மாக்களுக்குப்போக நுகர்ச்சியின் பொருட்டு, மலசத்தியிற் சிறிதே நீக்கி ஆன்மாக்களுக்குக் கிரியாசத்தியைவிளக்குவது. 'கலித்தல்' நீக்குதல், செலுத்துதல் எனப் பொருள்படுமாதலின், மலத்தை நீக்குதலாற் கலை எனப் பெயராயிற்று. ஆன்மாவின் கிரியா சத்தியை விளக்கிப் புத்தி தத்துவத்திற்குச் செலுத்துவது கலை. ''அயர்விலாக் கலை பின் தோன்றி ஆணவம் ஒதுக்கிச் சித்தின் செயல்புரி கிரியாசத்தி தெரிவிக்கும் சிறிதே'' (சித்தியார் சுபக். 145). ''வைத்த கலைதான் மூலமலம் சிறிதே நீக்கி மருவும் வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனை'' (சிவப்பிரகாசம், 39).

(4) வித்தியா தத்துவம்: கலையினின்றும் தோன்றி ஆன்மாக்களுக்கு ஞானசத்தியை விளக்கி, எவ்வகைப்பட்ட உணர்வும் ஆன்மாவிற் சென்று விடயமாதற்குக் கருவியாய்நிற்பது வித்தியா தத்துவம். புத்தி தத்துவ இயக்கத்தாற் பரந்து நிகழும் உயிரின் ஆராய்ச்சியுணர்வுக்கு அடிப்படைக் காரணமாய், உயிரின்கண் அறிவினை முதன்முதல் எழுப்புதல் இவ்வித்தியா தத்துவத்திற்கே யுரிய சிறப்பியல்பாகும். வித்தை என்பது, அறி-அறிவி எனப் பொருள்படும் வித் என்னும் தாதுவிற் பிறந்த 'வித்யா' என்னும் வடசொல்லின் திரிபாகும். 'வித்தை உயர் கலை அதனில் தோன்றி அறிவினை யுதிக்கப் பண்ணும்' (சித்தியார், 145) ''வாயில்களின் பயனைப் புத்திதர வித்தை இடைநின்று அறிவை உயிர்க்குப் பொருந்தி

யிடும் வகை புணர்க்கும் புனிதசத்தி புணர்ந்தே' (சிவப்பிரகாசம் 39)

(5) அராக தத்துவம் : இச்சை நிகழ்ந் தன்றிப் போகநுகர்ச்சி செல்லாமையானும், இச்சையாவது ஞானவிசேடமே யாகலானும், வித்தியா தத்துவத்தினின்றும் அராக தத்துவம் தோன்றி, ஆன்மாவுக்குப் பொருள்களில் விருப் பத்தை யுண்டாக்கும். அராகம் என்னும்சொல் இச்சை, விருப்பம் எனப் பொருள்படும். 'விச்சை யின் அராகம் தோன்றி வினைவழி போகத்தின் கண் இச்சையைப் பண்ணி நிற்கும்' என்பது சித்தியார்.

இவ்வாறு காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் தத்துவங்கள் ஐந்தும், ஆன்மா வினுடனாய்க் கஞ்சுகம் (சட்டை, போர்வை) போலப் பந்தித்து நிற்றலின், இவை பஞ்ச கஞ்சுகம் என வழங்கப்படும்.

(6) புருட தத்துவம் : மேற்கூறிய பஞ்ச கஞ்சுகங்களுடன் அவிச்சை அகங்காரம் அவா ஆசை வெகுளியாகிய பஞ்சக்கிலேசம் என்னும் பும்ஸ்துவ (போக நுகர்ச்சிக்குரிய) மலத்தோடு இயைந்து நின்று, ஆன்மாவானது போகம் நுகர முற்படும் நிலையே புருட தத்துவம் எனப்படும். ''ஐவகையால் உறுபயன்கள் நுகரவரும் காலம் அது புருட தத்துவம் என்றறைந்திடுவர் அறிந் தோர்'' என்பது சிவப்பிரகாசம். புருட தத்து வம் உண்மையாற் சித்தும், உபசாரத்தாற்சடமு மாம் என்பது உணர்தற்குரியது.

(7) மாயைத் தத்துவம் : ஈண்டு மாயை எனப்படுவது மும்மலங்களுள் ஒன்றாகிய மாயை யன்று. இது வித்தியா தத்துவங்களுள் ஏழாவ தாக நிற்பது. ஆன்மாக்களைப் போகநுகர்ச்சி யிற் செலுத்தியும், அவற்றிற்குப் போக்கியப் பொருள்களாக அமைந்தும் மயக்கி நிற்றலின் 'மயக்குவது' என்னும் பொருளில் மூலப்பிரகி கிருதி ஈண்டு மாயை எனப்பட்டது. மேற்கூறிய காலம் நியதி முதலிய தத்துவங்கள் ஏழும் ஆன்மாக்களுக்கு வித்தையை (அறிவை) எழுப் பும் தத்துவங்களாதலின், வித்தியா தத்து வங்கள் எனப் பெயர் பெற்றன.

**சிவ தத்துவங்கள்:**

மாயை என்பதொன்றே, தூலம் சூக்குமம் பரம் என மூவகைப்பட்டுத் தூலமாய் நின்ற அவத்தையிற் பிரகிருதிமாயை என்றும், சூக்கும மாய் நின்ற அவத்தையிற் அசுத்தமாயை என் றும், பரமாய் (அதிசூக்குமமாய்) நின்ற அவத் தையிற் சுத்தமாயை என்றும் வழங்கப்படும். சுத்த மாயையினின்றே சுத்த தத்துவங்கள் ஆகிய சிவதத்துவங்கள் ஐந்தும் தோன்றுகின் றன.

(1) சுத்தவித்தை : சுத்தமாயையில் தூலகாரியம் தோன்றுவதற்கு ஏதுவாக முதல்வ னின் ஞானசத்தி மிகுந்தும், கிரியாசத்தி குறைந்தும் நிகழ்வது. உருத்திரன் மால் அயன் இந்திரன் முதலியோர்க்கும், அவர்களின் தனு கரணாதிகளுக்கும் இஃது இடமாகும்.

(2) ஈசுரம் : சுத்தமாயையிற் சூக்கும மாய்க் காரியம் தோன்றுதற்குக் கிரியை மிகுந்து, ஞானம் நிகழ்வது. அநந்ததேவர் முதலிய வித்தியேசுரர் எண்மருக்கும் பிறருக் கும் இஃது இடமாகும்.

(3) சாதாக்கியம் : சுத்த மாயையைக் காரியப்படுத்துதற் பொருட்டு முதல்வனின் ஞானசத்தியும் கிரியாசத்தியும் தம்முள் ஒத்து நிகழ்வது. பிரணவர் அனுசதாசிவர் முதலி யோர்க்கும், அவர்தம் தனுகரணாதிகட்கும் இஃது இடமாக அமையும்.

(4) சத்தி தத்துவம் : சுத்தமாயை காரியப்படுமாறு முதல்வனது கிரியாசத்தி வெளிப்பட்டு நிற்பது. முதல்வனின் கிரியா சத்திக்கும், நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகட் கும், மலபந்தம் நீங்கித் தூலலய வாசனை மாத்திரம் உடைய முத்தர்களுக்கும், அவர் களுக்குரிய புவனபோகங்களுக்கும் இத்தத்துவம் இடமாக நிற்கும்.

(5) சிவதத்துவம் : சுத்தமாயை காரி யப்படுதற்கு ஏதுவாகும் வண்ணம் இறைவன் தனது ஞானசத்தி மாத்திரையால் நோக்கி நிற்கப் பெறுவது. சூக்கும லய வாசனை மட் டும் உடைய முத்தான்மாக்களுக்கும், அவர் களுக்குரிய புவன போகங்களுக்கும், முதல்வ னின் ஞானசத்திக்கும் இஃது இடமாக விளங் கும்.

ஆன்மதத்துவம் (24), வித்தியாதத்துவம் (7), சிவதத்துவம் (5) என்னும் இம்மூன்றும், முறையே போக்கிய காண்டம், போசயித்ரு காண்டம், பிரேரககாண்டம் எனக் குறிக்கப் படும். இவற்றுள் சிவதத்துவங்கள் சுத்தமும், வித்தியா தத்துவங்கள் சுத்தாசுத்தமும், ஆன்ம தத்துவங்கள் அசுத்தமும் ஆகும்.

''இந்நிலையில் ஐந்துசுத்தம்; ஏழ்சுத்தாசுத்தம்;
எண்மூன்றும் அசுத்தம்; எனும்இவைமுப்பத்தாறாம்

—சிவப்பிரகாசம், 46.

''தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்,
மூல உடம்பாம் முதல்நான்கும்-மேலைச்
சிவமாம் பரிசினையும் தேர்ந்துணர்ந்தார், சேர்ந்த
பவமாம் பரிசறுப்பர் பார்''

—திருக்களிற்றுப்படியார்.

முற்றும்

# தசரதன் பெற்ற சாபம்?

திரு. ம. அ. முருகேசன் அவர்கள், பி.ஏ.,பி.எல்.
மாவட்ட நீதிபதி, மதுரை.

**முன்னுரை:**

கைகேயி பெற்ற வரத்தால் இராமன் முடி துறந்து கானகம் போனபோது, புத்திரசோகம் தாங்காமல் தசரதன் மாண்டான் என்பதை நாம் அறிவோம். இராமன் நம்மிடமிருந்து பிரிந்து போவான்; அப்படிப் பிரிந்து போன தும், நாம் இறந்து போவோம் என்பதையும் தசரதன் முன்பே அறிந்திருந்தான் என்றும், அப்படி அவன் புத்திர சோகத்தால் இறந்தது அவன் பெற்ற சாபத்தினால்தான் என்றும் சொல்லப்படுகிறது.

**சலபோசனர் கதை:**

''கண் இல்லாத சலபோசனர் என்ற முனிவரையும் அவர் மனைவியையும், அவர் களுடைய ஒரே அருமந்த புத்திரனான சுரோ சனன், அவர்களுக்குக் கண்ணாக இருந்து காத்து வந்தான்; ஒருநாள், கானகத்தில் ஒரு இடத்தில் அவர்களை விட்டுவிட்டு, அவர்களு டைய நீர் வேட்கையைத் தீர்க்கும் பொருட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சுரோசனன் போனான். அப்படிப் போனவன் குடத்தை ஆற்றுநீரில் அமுக்கி முகந்தபோது குடத்தினுள் சென்ற நீர் ''குபு,குபு'' என்று ஒலி எழுப்பியது; அப் போது அந்தக் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்த தசரதன், அந்தச் சப்தத்தைக் கேட்டு, ஒரு யானைதான் தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கிறது என்று எண்ணி, விலங்கு பறவை முதலிய பொருள்களைப் பாராமலே அவற்றின் ஒலியைக் கேட்டே, அவைகள் உள்ள இடத்தை அறிந்து குறி தவறுமல் எய்து கொல்லும் பேராற்றலைப் பெற்றிருந்ததனால், தசரதன் அதற்குரிய ''சப்தவேதி'' என்ற பாணத்தைச் சப்தம் வந்த திசையை நோக்கிச் செலுத்தினான். அது சுரோசனன் மீதுபாய்ந்து விட்டது. சுரோசனன் அலறியதைக் கேட்டுத் திடுக்கிட்ட தசரதன், சுரோசனன் விழுந்து கிடந்த இடத்திற்குப் போய் அவனைப் பார்த்து நடந்ததைத் தெரிந்து வருத்தப்பட்டான்: தன் னுடைய தாய் தந்தையர்களுடைய நிலையைச் சொல்லி, அவர்களுக்கு நீர் கொண்டு போய்க் கொடுக்குமாறு தசரதனிடம் சொல்லிவிட்டு, சுரோசனன் உயிர் நீத்தான். அவன் கேட்டுக் கொண்டபடியே நீரைக் கொண்டுபோய்ச் சுரோசனனுடைய தாய் தந்தையர்களிடம் கொடுத்து, நடந்ததைத் தசரதன் சொன் னான். அவர்கள் அதைக்கேட்டுவிட்டு, புத்திர சோகம் தாங்காமல், தசரதன் கொடுத்த நீரைப் பருகாமலேயே உயிர் நீத்தனர். அப்படி உயிர்விட்டபோது ''நாங்கள் இப்போது புத்திர சோகத்தால் இறப்பது போலவே, நீயும் உன்னு டைய புதல்வனைப் பிரிந்து புத்திர சோகத் தால் இறந்து போவாய்'' என்று, அவர்கள் தசரதனுக்குச் சாபம் கொடுத்தனர் என்று கதை சொல்லுகிறார்கள்.

**நகர்நீங்கு படலம்;**

கவிச் சக்கரவர்த்தி கம்பனின் காவியத் திற்கு முதல் நூலாகிய வால்மீகி, தன்னுடைய ஆதி காவியத்தில் இப்படிச் சொல்லி இருக்கி றாரோ, என்னவோ, தெரியாது. கம்பனுடைய இராமாவதாரம் அப்படிச் சொல்கிறது என்று பலரும் சொல்லுகிறார்கள். கம்பனுடைய காவி யத்தைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்கள் எல் லோருமே, அயோத்தியா காண்டம், நகர் நீங்கு படலத்தில், இந்த நிகழ்ச்சியை, ''தசரதன் சாப வரலாறு'' என்றும், ''தசரதன் தான் பெற்ற சாப வரலாற்றைக் கைகேயிக்குக் கூறு வது'' என்றும் தலைப்பிட்டு, சுரோசனனு டைய பெற்றோர்களிடம் இருந்து தசரதன் சாபம் பெற்றான்; அந்த சாபத்தால்தான் புத்திர சோகம் வந்து தயரதன் இறந்து போனான் என்பதை உறுதி செய்திருக்கிறார் கள். ஆனால் கம்பனுடைய பாடல்களை நுணுகிப் பார்த்தால், தசரதனுக்குச் சுரோசன னுடைய பெற்றோர்கள் ''சாபம் கொடுத்தார் கள்'' என்று கம்பன் சொல்வதாகப் பட வில்லை.

தசரதன் சாபம் பெற்றதைக் காட்டுவ தாக, கீழே கண்ட இரண்டு பாடல்கள் காட் டப்படுகின்றன.

''கண்ணுள் மணிபோல் மகவை
இழந்தும் உயிர் காதலியா
உண்ண எண்ணி இருந்தால்,
உலகோர் என்னென்று உரையார்?
விண்ணின் தலைசேருதும் யாம்;
எம்போல், விடலை பிரியப்
பண்ணும் பரிமா உடையாய்!
அடைவாய், படர்வான்'' என்னா,

''தாவாது ஒளிரும் குடையாய்!,
'தவறுஇங்கு இது, நின் சரணம்
காவாய்' என்றாய்; அதனால்,
கடிய சாபம் கருதேம்;
ஏவா மகவைப் பிரிந்து, இன்று
எம்போல் இடர்உற்றனை நீ
போவாய், அகல்வான்' என்னாப்
பொன் நாட்டிடைப் போயினரால்!'

இந்த இரண்டு பாடல்களும் குளகம்; அதாவது பலபாடல்கள் தொடர்ந்து எச்சம் பெற்று, பின்னர் ஒரு வினைமுற்றைக்கொண்டு முடிவது.

**பாடலின் பொருள்:**

எங்கள் கண்ணுள் மணிபோல் இருக்கும் மகனை இழந்து, பின்பும் இந்த உயிரின்மீது ஆசைவைத்து, நீ கொண்டுவந்த நீரைப் பருகினோமானால், இந்த உலகத்தார் எங்களைப் பற்றி என்ன பேசுவார்கள்? அதனால் நாங்கள் விண்ணுலகம் போகிறோம்; அலங்கரித்த குதிரையை உடையவனே! நீயும் எங்களைப்போல் இறப்பாய்; வெண் கொற்றக் குடை உடையவனே! ''நான் தவறு செய்து விட்டேன்; உங்களைச் சரணடைகின்றேன்; என்னைக் காக்கவேண்டும்'' என்று நீ சொல்வதினால், உனக்குக் கொடிய சாபத்தைக் கொடுக்க நாங்கள் நினைக்கவில்லை; எங்கள் மகனைப் பிரிந்து இன்று நாங்கள் துன்பப்படுவது போல், நீ துன்பப்பட்டு விண்ணுலகம் அடைவாய்'' என்று சொல்லிவிட்டு, சுரோசனின் பெற்றோர்கள் விண்ணுலகம் போனார்கள் என்று, இந்தப் பாடல்களுக்குப் பொருள் கண்டிருக்கின்றனர்.

''இன்று நாங்கள் எம்முடைய ஆசை மகனைப் பிரிந்து உயிர் நீப்பதுபோல், நீயும் உன்னுடைய ஆசை மகனைப் பிரிந்து உயிர் நீப்பாய்'' என்பதற்கான சொற்கள், இந்தப் பாடல்களில் இருப்பதை வைத்து, சுரோசனின் பெற்றோர்கள் தசரதனுக்கு, ''புத்திர சோகத்தால் நீ இறப்பாய்'' என்று சாபம் இட்டார்கள்; அதுதான் தசரதன் பெற்ற சாபம் என்றும், அந்த சாபத்தினால்தான் தசரதன் இறந்தான் என்றும், இந்தப் பாடல்களுக்கு விரிவுரை செய்கிறார்கள்.

ஆனால், இரண்டாவது செய்யுளில் உள்ள ''கடிய சாபம் கருதேம்'' என்ற சொற்களை நாம் சிந்திக்க வேண்டும். கண்ணுள் மணியாக இருந்த மகனைப் பிரிந்த சுரோசனனின் பெற்றோர்கள், உண்மையிலேயே தசரதன் மீது ஆத்திரம் அடைந்து, அவனைத் தண்டிக்க எண்ணி இருந்தால், அந்த நிமிடத்திலேயே தசரதனை அவர்கள் தங்கள் தவவலிமையால் பொசுக்கிச் சாம்பலாக்கி இருக்கமுடியும். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவில்லை; செய்யாதது மட்டுமல்ல. ''கடிய சாபம் கருதேம்'' என்றும் சொல்லுகிறார்கள். அதாவது கொடிய சாபத்தைக் கொடுக்க மனதாலும் நினைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். சாபத்தைக் கொடுக்க மனதாலும் நினைக்காத போது, அவர்கள் தசரதனைச் சபித்தார்கள் என்று சொல்வது பொருத்தமாகத் தெரியவில்லை.

**சுரோசனன் கூறுவது:**

இத்துடன் சுரோசனன் கூற்றையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். தசரதன் எய்த அம்பினால் அடிபட்டுக் கிடந்த சுரோசனனிடம் போய்த் தசரதன், தான் செய்த தவறை மன்னிக்கும்படி வேண்டுகிறான். அதற்குச் சுரோசனன் சொல்லும் பதில் கீழ்க்கண்ட பாடல்:

''இரு கண்களும் இன்று யாய்க்கும்
எந்தைக்கும்; இங்கு அவர்கள்
பருகும் புனல்கொண்டு அகல்வான்
படர்ந்தேன், பழுது ஆயினதால் ;
இருகுன்று அனைய புயத்தாய்!
இபம்என்று உணராது எய்தாய்;
உருகும் துயரம் தவிர்நீ,
ஊழின் செயல்ஈது என்றே''

''இரு குன்று அனைய புயத்தாய்! இபம் என்று உணராது எய்தாய்; உருகும் துயரம் தவிர்நீ; ஊழின் செயல் ஈது என்றே ''என்ற வரிகளில், சுரோசனன், தசரதன் செய்த தவறை முழுக்க முழுக்க மன்னித்து விட்டுத் தனக்கு நேர்ந்த துயரம் தன்னுடைய ஊழ்வினையால் நேரிட்டது என்று சொல்லுகிறான். அதாவது, ''மனிதன் என்று உணராமல் யானை என்று எண்ணி அம்பை எய்தாய்! ஆதலால் உன்பால் தவறு இல்லை; இது ஊழ்வினையின் செயலாகும் என்று அறிந்து, என் மரணத்திற்காக மனம் உருகும் துன்பத்தை நீ தவிர்ப்பாயாக'' என்று தசரதனுக்கே சுரோசனன் ஆறுதல் சொல்லுகிறான்.

தசரதன் அம்பால் அடிபட்ட சுரோசனன் தான், தசரதன்மீது உடனடியாகப் பாய்ந்து இருக்கவேண்டும். ஆனால் அவன் அப்படிப் பாயவில்லை. அதற்கு மாறாக, அறியாமையினால்தான் தசரதன் தவறு செய்து விட்டான்; அவன் வேண்டுமென்றே செய்யவில்லை என்பதை உணர்ந்து, தனக்கு நேர்ந்த மரணம் தன்னுடைய ஊழ் வினையால் நேர்ந்தது என்று முடிவு செய்து, தசரதனுடைய துன்பத்தையும் மாற்ற முயல்கிறான். ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத்தையும்காட்ட வேண்டும் என்ற நீதிக்கும் மேலே போய்ச் சுரோசனன் ஒரு பெரிய மகாத்மா ஆகிவிடுகிறான். இப்படிப்பட்ட மகாத்மாவின் தாய் தந்தையர்களான முனிதம்பதியர்கள், அறியாமல் செய்தபிழைக்குத் தசரதனுக்குச் சாபம் கொடுத்தார்கள் என்பது, அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. அது அந்த முனிதம்பதியர்களுடைய ஏற்றத்தைக் காட்டுவதாகவும் இல்லை. அப்படியானால், அவர்கள் தசரதனுக்கு என்னதான் சொன்னார்கள்!?

**கம்பர் கருத்து:**

முதற் பாடலில் இருக்கும் ''எம்போல் விடலை பிரிய அடைவாய் படர்வான்'' என்ற தொடருடன், ''காடிய சாபம் கருதேம், ஏவா மகவைப் பிரிந்து இன்று எம்போல் இடர் உற்றனை நீ போவாய் அகல்வான்'' என்ற தொடரையும் இணைத்துப் பார்க்கையில் ''பிறர்க்

கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்'' என்ற ஊழ்வினை நியதியைத்தான் முனி தம்பதியர்கள் சொல்லுகிறார்கள் என்பது விளங்குகிறது. இதைத் தசரதனே உணர்ந்திருப்பது அடுத்த பாடலிலிருந்து தெரிகிறது. ''......அந்தமுனி சொற்றமையின், அண்ணல் வனம் ஏகுதலும் என்றன் உயிர் வீடுதலும், இறையும் தவறா'' என்று கோசலையிடம் சொன்னதாக அடுத்த பாடல் கூறுகிறது. முனிவன் தந்தது சாபமானால், ''சொற்றமை'' என்ற சொல்லைக் கம்பன் பெய்திருக்கமாட்டான். ''செற்றமை'' என்ற சொல்லையே பெய்திருப்பான். எனவே சுரோசனனின் பெற்றோர்கள் தசரதனுக்குச் சாபம் கொடுக்கவில்லை; ஊழ்வினைப் பயனைத்தான் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள் என்பதுதெளிவு. ஊழ்வினையை மாற்ற இயலாது. அதன் பயனை ஒவ்வொருவரும் அடைந்தே தீரவேண்டும். இந்த விதியைத்தான் சுரோசனனின் பெற்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதுதான், கம்பன் கருத்து.

**இன்னாமையினும் இன்பம்:**

இக்கதைப் பகுதியில், தசரதன் பெற்றது சாபமா? அல்லது ஊழ்வினைப் பயனா? என்பது ஒருபக்கம் இருக்க, இங்கு நாம் எண்ணியுணர்ந்து கொள்ளுதற்குரிய உண்மையொன்றும் அமைந்து கிடக்கின்றது. சில சமயங்களில் துன்பத்திலிருந்தும் இன்பம் விளைவது உண்டு; தீமையும் ஒருவகையில் நன்மையாகவே முடியும் என்பதும், இராமாயணத்தில் வரும் கதைப் பகுதியால் நமக்குத் தெரிகின்றது.

''இன்னாது அம்ம, இவ் உலகம்
இனிய காண்க, இதன் இயல்புணர்ந்தோரே''

என்று புறநானூற்றுப் புலவர் ஒருவர் பாடியிருப்பது போல, அறிவுடையோர்களும் சான்றோர்களும், தம் மனப்பக்குவ்நிலையினால், இன்னாமையினும் ஒரு இன்பம் காண்பார்கள்.

சலபோசன முனிவர் உயிர்நீத்தபோது, அம் முனிவரரின் மனவருத்தத்திற்கும் மறைவிற்கும் நாம் காரணம் ஆயினோமே என்று தசரதன் பெரிதும் மனம் வருந்தினான். ஆயினும் ஒருவகையில் பெருமகிழ்ச்சியும் எய்தினான். அதுவரையில் புத்திரப்பேறு இன்றிப் பெரிதும் கவலையுற்று வருந்திக்கொண்டிருந்த தசரதன், அச் சாபத்தால் தன் கவலை நீங்கிப் பெரிதும் ஆறுதல் அடைந்தான். ''எங்களைப் போல் நீயும் புத்திரசோகத்தால் இறப்பாய்'' என்று சலபோசன முனிவர் சாபம் இட்டதனால், தான் இறப்பதற்கு முன்னர், எப்படியும் தனக்குப் புத்திரப்பேறு வாய்த்தல் திண்ணம் என்று தெளிந்து, ஒருவகையில் தசரதன் பெரிதும் ஆறுதலும் மகிழ்ச்சியும் அடைந்தான். இதனைப் பின்வரும் பாடல் உணர்த்துதல் காணலாம்.

''சிந்தை தளர்வுற்று அயர்தல்
சிறிதும் இலெனுய், இன்சொல்
மைந்தன் உளன் என்று அதனல்,
மகிழ்வொடு இவண் வந்தனெனல்;
அந்த முனிசொற் றமையின்
அண்ணல் வனம் ஏகுதலும்,
எந்தம் உயிர் வீடுதலும்
இறையும் தவறு என்றுன்''

—நகர் நீங்கு படலம், 87

**முடிவுரை:**

துன்பத்தையும்இன்பமாகவும், தீமையையும் நன்மையாகவும், அறிவுடையோர்களும் சான்றோர்களும் ஒருவகையில் மாற்றி அமைத்துக் கொள்வார்கள் என்பதற்கும், இக் கதைப்பகுதி ஓர் இனிய சிறந்த எடுத்துக் காட்டாகும்.

''மனமே தனக்குரிய இடத்தை அமைத்துக்கொள்ளுகின்றது; நரகத்தைச் சுவர்க்கமாகவும், சுவர்க்கத்தை நரகமாகவும் ஆக்கிக் கொள்ள மனத்தால் இயலும்''

"The mind is its own place;
it can make a hell of heaven,
and a heaven of hell"

என்று ஜான்மில்ட்டன் ( John Milton ) என்னும் ஆங்கிலக் கவிஞன் பாடியிருப்பது, இங்கு நாம் சிந்தித்து மகிழ்தற்குரியது.

---

## சந்தாதாரர்களுக்கு முக்கிய வேண்டுகோள் !

நமது ''திருக்கோயில்'' இதழின் ஆண்டுச் சந்தா, ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாதத்தில் தொடங்கி, டிசம்பர் மாதத்தில் முடிவடைகிறது. ஆதலின் தமது சந்தாவைப் பபுதுப்பித்துக்கொள்ள விரும்பும் அன்பர்கள் அனைவரும், உள்நாட்டினராயின் ரூபாய் பதினைந்தும் (15); வெளிநாட்டினராயின் ரூபாய் இருபத்தைந்தும் (25), வரும் சனவரி (1980) மாத இறுதிக்குள் ,

''உயர்திரு ஆணையர் அவர்கள்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034''

என்னும் முகவரிக்கு, உடனடியாகப் பணவிடை ( M. O. ) மூலம் அனுப்பிவைக்க வேண்டுகின்றோம்.

அங்ஙனம் அனுப்பும் பணவிடைத்தாளில், புதிய சந்தாவா அல்லது பழைய சந்தாவா? என்பதனைத் தவறாமல் குறிப்பதுடன், தங்களின் முழுப்பெயர், வீட்டுஎண், தெருவின்பெயர், ஊர் அல்லது நகரத்தின்பெயர், அதன் அஞ்சலக எண் ( PIN CODE ), மற்றும் மாவட்டம் ஆகிய விவரங்களை முழுமையாகத் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளுகின்றோம்.

—ஆசிரியர்

---

# "தமிழ்ச் சமர்த்தர்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை :

'தமிழ்ச் சமர்த்தர்' என்னும் தொடர், தாயுமானஅடிகளால் வழங்கப்பெற்ற தொன்றாகும். 'சமர்த்தர்' என்னும் சொல் செயற்கருஞ் செயல்களை எளிய இனிய முறையில் திறம்படச் செய்து முடிக்கவல்ல பேராற்றல் மிக்கவர்களைக் குறிக்கும். சமர்த்து எனினும், சாமர்த்தியம் எனினும் ஒக்கும். 'வித்தகர்' 'சதுரர்' 'வல்லாளர்' என்னும் வேறு பிற சொற்களும், இப்பொருளையே யுணர்த்தும் சிறப்புடையன.

''நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது''

என்னும் திருக்குறளில் திருவள்ளுவரால் வித்தகர் என்ற சொல்லும்,

''தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?''

என்ற திருவாசகப் பாடலில் மாணிக்கவாசகரால் சதுரர் என்ற சொல்லும்,

''அந்தணனைத் தஞ்சமென்று ஆட்பட்டார் ஆறாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன்''

என்ற பாடலில் காரைக்கால் அம்மையாரால் வல்லாளன் என்ற சொல்லும், அழகிய இனிய அரிய முறையில், இலக்கிய நலம் பொலிய, ஆங்காங்கே எடுத்தாளப் பெற்றிருத்தல் காணலாம்.

## தாயுமானவர் :

தாயுமான சுவாமிகள் தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் தலைசிறந்த ஞானத் தவமுனிவர். வேதாந்த சித்தாந்த சமரசஞான வித்தகச் செல்வர். இறையருள் அனுபவம் கைவரப் பெற்ற இணையற்ற அரும்பெருஞ் சான்றோர். தேவார திருவாசகத் திருமுறைகளையெல்லாம் ஓதி ஓதி யுணர்ந்து உய்வும் உயர்வும் எய்தியவர். அவர்,

''தேவரெலாம் தொழச் சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே! மொழிக்குமொழி தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான்?''

என அருளிச் செய்திருத்தல் கொண்டு, மூவர் தமிழ் ஆகிய தேவாரத் திருமுறைகள் மீது தாயுமானவர் கொண்டிருந்த பெருமதிப்பும், பேரன்பும் இனைய என்று எண்ணியுணரலாம். தேவார திருவாசகத் திருமுறைகளையெல்லாம் தாயுமானவர் ஆழ்ந்து ஆய்ந்து பல்காற்பயின்று ஓதியுணர்ந்து அனுபவித்து மகிழ்ந்தவர். அதனாலேயே அவர், 'மொழிக்கு மொழி தித்திப் பாக அமைந்தது மூவர்தமிழ்' என்று குறிப்பிடுகின்றார்.

## ஓதியுணர்ந்த உயர் அனுபவம் :

தேவார திருவாசகத் திருமுறைகளையெல்லாம் ஓதி ஓதியுணர்ந்து உள்ளம் களி துளும்பிய தாயுமானவர்க்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல்களில் மிகவும் அழுந்திய ஈடுபாடு இருந்தது.

தேன்படிக்கும் அமுதாம்நின்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை
நான் அறியேன், நாஒன்றோ?
ஊன்படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவம்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே''

என அண்மைக் காலத்தில் இராமலிங்க அடிகளார் அருளிச் செய்திருத்தல் போலவே, தாயுமானவரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பாடல்களைத் தினந்தோறும் ஓதி ஓதி இன்புற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. சுந்தரரின் பாடல்கள் பல, தாயுமானவரின் நெஞ்சைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. சிறப்பாக,

''ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி

மாழைஒண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே''

என்ற பாடல், அவர்தம் திருவுள்ளத்தைப் பெரிதும் கொள்ளை கொண்டது. தமிழகச் சான்றோர்கள் அனைவரின் உள்ளங்களையுமே, இத் திருப்பாடல் பெரிதும் கொள்ளை கொண்டு விட்டதென்னும் உண்மையை,

''ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன்நீ
சொன்னபெருஞ் சொற்பொருளை,
ஆழநினைந் திடில்அடியேன்
அருங்கரணம் கரைந்துகரைந்து
ஊழியில்ஒன் றாவதுகாண்
உயர்கருணைப் பெருந்தகையே''

எனவரும் திருவருட்பாவினால் நாம் தெளிதல் கூடும். இராமலிங்க அடிகளாரைப் போலவே, தாயுமான அடிகளாரும் 'ஏழிசையாய் இசைப் பயனாய்' எனத் தொடங்கும் சுந்தரரின் தேவாரப் பாடலில் தம் நெஞ்சம் பறிகொடுத்து வியந்து மகிழ்ந்தனர் என்னும் செய்தி,

''என்னுடைய தோழனுமாய்
என்ற திருப்பாட்டின்
நன்னெறியைக் கண்டு உரிமை
நாம்செய்வ தெந்நாளோ?''

எனத் தாயுமானவர் அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரப்படும். இங்ஙனம் சுந்தரரின் தேவாரப் பாடல்களை நாடோறும் ஓதி ஈடு பட்டு நின்று, அவர்தம் அருமை பெருமைகளை யெல்லாம் அறிந்து மகிழ்ந்தே, தாயுமானவர், சுந்தர மூர்த்தி சுவாமிகளைத் 'தமிழ்ச் சமர்த் தர்' என்று வியந்து போற்றிச் சிறப்பித்துக் குறிப்பிடுகின்றார்.

''பித்தர் இறை என்றறிந்து
பேதைபால் தூதுஅனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர்
மெய்புகழ்வது எந்நாளோ?''

## சூத்திரமும் பாடியமும்:

தமிழ்ச் சமர்த்தர் என்னும் தொடர் சிறியது; ஆனால் அதன் பொருட்குறிப்பும் பரப்பும் மிகப் பெரியன. சுந்தரரைப் பற்றித் தம்முடைய உள்ளார்ந்த கருத்துக்கள், அனைத்தினையும், தாயுமானவர் இச்சிறிய தொடரின் கண் செறித்துக் கூறித் தெளிவுறுத்துகின்றார்! இவ்வாற்றால் இதனை ஒரு சூத்திரம் என்று சொல்லுதலும் தகும். வாதராயணரின் பிரம சூத்திரத்திற்குச் சங்கரர் இராமாநுசர் மத்துவர் முதலிய பலர், பல சிறந்த பேருரை (பாடியம்)களைக் கண்டதுபோல, நாமும் இத்தொடருக்குப் பல சிறந்த பொருட் குறிப்புக்களை, நம் தவத்திற்கும் தகுதிக்கும் ஏற்பக் கொள்ளுதல் கூடும். ஈண்டைக்கு வேண்டிய அளவில் ஒரு சிறிது மட்டும் ஆராய்வோம்.

## தூது போக்கிய தொண்டு:

வேதாகமங்கள் எல்லாம் இறைவனைப் பேரறிவும் பேராற்றலும் உடையவன் என்று புகழ்ந்து கூறி வியக்கின்றன. ஆனாற் சுந்தரரோ, அன்பர்களின் அன்பிற்குக் கட்டுண்ணும் அளவிலா எளிமை, அடியார்களின் குற்றங் குறைகளைக் கண்டுகொள்ளாத அறியாமை, பச்சிலையும் நீரும் தூவி வழிபடும் சிறு செயலுக்கே பெரிதும் மகிழ்ந்து பேரின்ப வீடுஅளித் தருளும் 'ஆசுதோஷி' (அற்பத்திலும் அகம் மிக மகிழ்பவன்) ஆகும் தன்மை, முதலிய பண்புகள் பல கருதி, இறைவனைப் பித்தர் என்று அறிந்து கொண்டார். அதுவே ஒரு பெருஞ்சாமர்த்தியம்! அம்மட்டோ! தேவர்களையெல்லாம் ஏவல்கொள்ளும் சிறப்புடையசிவபெருமானைத் தாம் ஏவல்கொண்டார். பித்தனைப்பேதைபால் தூது அனுப்பி வைத்தார். தலைவரெல்லாம் தலைவணங்கும் தனிப் பெருந் தலைவனாகிய சிவபெருமானையே ஏவல்கொண்டமை, ஒரு பெருஞ் சதுரப்பாடேயாகும் அன்றோ? இச் சமர்த்தினையே,

''அரவகல் அல்கு லார்பால்
ஆசைநீத் தவர்க்கே வீடு
தருவம்என் றளவில் வேதம்
சாற்றிய தலைவன் தன்னைப்
பரவைதன் பக்கல் மேனாள்
கழுதுகண் படுக்கும் பானாள்
இரவினில் தூது கொண்டோன்
இணையடி முடிமேல் வைப்பாம்''

''மோகம் அறுத்திடின் நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்னஅவர் தம்மைத்-தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை
ஏதாகச் சொல்லுவேன் யான்''

''பேரூரும் பரவைமனப்
பிணக்கறஎம் பெருமானை
ஊரூரும் பலபுகல
ஓரிரவில் தூதன்எனத்
தேரூரும் திருவாரூர்த்
தெருவுதொறும் நடப்பித்தாய்
ஆரூர நின்பெருமை
அயன்மாலும் அளப்பரிதே''

எனச் சான்றோர்கள் பற்பலரும் பாராட்டி வியந்திருத்தல் அறிந்து இன்புறுதற்குரியது.

''ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்டு
ஆட்கொண்ட உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன்....''

எனவரும் காஞ்சிப்புராணச் செய்யுளிற் சிவஞான சுவாமிகளால் குறிப்பிடப் பெற்றிருக்கும் கருத்தும், ஈண்டைக்கு மிகவும் பொருத்தம் உடையது.

## திருத்தொண்டத் தொகையின் திறம்:

சுந்தரரின் தமிழ்ச் சமர்த்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாதற்கு, அவர் அருளிச் செய்த திருத்தொண்டத்தொகை ஒன்றே சாலும்! அறு

பான் மும்மை நாயன்மார்களின் நாடு நகரம் குலம் வரலாறு கொள்கை தொண்டு அருள் நிகழ்ச்சி ஆகிய பலவற்றையும் திறந்தெரிந்து சுருங்க விளக்கி, அவ்வாற்றால் நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதிக்கும், சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர்புராணத்திற்கும் அடிப்படை வகுத்தளித்தமை, சுந்தரரின் தமிழ்ச்சமர்த்தின் விளைவேயாகும். இஞ்ஞான்றைச் சைவ நெறியின் வளர்ச்சிகளுக்கும் வரலாற்றுக்கும் எல்லாம் மூலகாரணமாகத் திகழ்வது திருத்தொண்டத் தொகையே! அதனால் அன்றோ, ''மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பியாரூரர்'' எனச் சேக்கிழார் பெருமான், சுந்தரரைப் பாராட்டிக் கூறி, அவரையே தமது பெரிய புராணக் காப்பியத் தலைவர் ஆகவும் அமைத்துக் கொண்டு சிறப்பித்தருளினார். திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் ''இல்லையே என்னாத இயற்பகை'' 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்' 'கலை மலிந்த சீர்நம்பி' 'மறவாது கல்லெறிந்த சாக்கியர்' 'திருநீலகண்டத்துக்குக் குயவனார்—பாணனார்' என்பனபோன்று அருளிச் செய்துள்ள அரிய தொடர்கள் எல்லாம், அவ்வந் நாயன்மார்களின் அருமை பெருமைகளையெல்லாம், எத்துணை நுணுக்கமாகத் திறம்தெரிந்து விளக்குகின்றன என்று, இவ்வருமைப்பாடுகளையெல்லாம் செவ்விதின் உணரவல்லார்க்குத் 'தமிழ்ச் சமர்த்தர்' என்ற புகழுரையின் பொருத்தம் புலனாகும் அன்றோ?

**சைவப் பயிர் :**

சுந்தரரின் சமர்த்துக்கு வேறொன்றையும் ஈண்டு நாம் நினைவு கூரலாம். ஒரு நாட்டினர் அடிமைத் தளையினின்று விடுதலை பெறுவது சிறப்பு; பெற்ற விடுதலையைப் பேணிக்காத்து வளர்த்துப் போற்றுவது அதனினும் பெருஞ் சிறப்பு. அதுபோலச் சம்பந்தரும் நாவுக்கரசரும் சமண பௌத்த சமயங்களின் தாக்குதல்களினின்று சைவ சமயத்தை மீட்டு நலஞ் செய்தனர்; அச்சைவ சமயத்தை அவர்களின் அடிச்சுவட்டைத் தொடர்ந்து பேணிக் காத்துப் போற்றிச் சுந்தர மூர்த்தி சுவாமிகளே பெரிதும் வளர்த்தருளினார் எனலாம். பக்தி விதையை விதைத்து அன்புநீரைப் பாய்ச்சிச் சைவம் ஆகிய பயிர் வளருமாறு நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் தொண்டாற்றிச் சென்றனர். அப்பயிருக்கு எருவிட்டுக் களைகட்டு வேலிகோலிக் காவல் புரிந்து, கதிர்கள் முதிரவும் விளைவு பெருகவும் போதம் பெருகவும் வேண்டுவன எல்லாம் செய்தமைத்து நம்மனோர்க்கு உதவி புரிந்தவர் சுந்தரரேயாவர். சுந்தரரின் சமர்த்து மிக்க இவ்வரும்பெருஞ் செயலின் அருமைப்பாட்டினையே,

> ''படியில் நீடும் பத்திமுதல்
> அன்பு நீரிற் பணைத் தோங்கி
> வடிவு நம்பி யாரூரர்
> செம்பொன் மேனி வனப்பாகக்
> கடிய வெய்ய இருவினையின்
> களைகட் டெழுந்து கதிர்பரப்பி
> முடிவி லாத சிவபோகம்
> முதிர்ந்து முறுகி விளைந்ததால்''.

எனச் சேக்கிழார் பெருமான் உருவக முகமாக உள்ளுணர்ந்து உவந்து பாடி மகிழ்விக்கின்றார்! சுந்தரர் 'தமிழ்ச் சமர்த்தர்' என்பதனை இத்திறம் பற்றியும் நாம் இனிதெண்ணித் துணியலாம்!

**தவநெறி விளக்கம் :**

சுந்தரர் செய்தருளிய சமர்த்தான செயற்கருஞ் செயல்கள் பல. அவற்றுள் தவநெறியின் இயல்பினை அவர் விளக்கியருளிய திறமும் ஒன்று ஆகும். 'தவம்' என்னும் சொல்லை நாம் நன்கறிவோம். ஆனால் தவம் என்பது யாது? என எவரேனும் வினவின், அதற்கு விடையிறுத்தல் நம்மனோர்க்கு எளிதின் இயல்வதன்று. தவம் என்பது பற்றிப் பலர் பல்வேறு கருத்துக்களைக் கூறக்கூடும். சுந்தரரின் காலத்திற்கு முன்னும் பின்னும் தவநெறி பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உலவி வந்துள்ளன. சமணர்களும் பௌத்தர்களும் பிறரும் மனைவி மக்களைத் துறந்து, உலகியலோடு பொருந்தாமல், ஐம்பொறிகளைக் கடிந்து அடக்கி வருத்திக் காவியுடுத்தும், மழித்தலும் நீட்டலும் செய்தும், காடு மலை குகைகளில் தனித்திருந்தும் வாழ்வதே தவம் எனக் கருதி வந்தனர். இன்றும் அங்ஙனமே பலர் கருதி வருகின்றனர். சுந்தரர் திருவெண்ணெய்நல்லூரில் தடுத்து ஆட்கொள்ளப் பெறுகின்றனர். பிறகு திருநாவலூர் மீண்டு, திருப்பதிகம் பாடி இறையருளைப் பரவுகின்றார். பின்னர் அங்கிருந்து திருத்துறையூர் சென்று அணைகின்றார். ''தீவினையால் அவநெறியே செல்லாமல் தடுத்தாண்டாய், அடியேற்குத் தவநெறி தந்தருள்'' என்று துறையூர் இறைவனைப் பாடித் துதிக்கின்றார். துதித்துத் தவநெறி பெற்ற சுந்தரர், காடு மலை குகைகளில் தனித்திருந்து வாழ்ந்திலர். அரசமாளிகைகளில் வாழ்ந்தார். 'இறைகளோடு இசைந்த இன்பும், இன்பத்தோடு இசைந்த வாழ்வும்'' அவருக்கு வாய்த்திருந்தன. பரவையார் சங்கிலியார் என்னும் இரு மனைவியரை மணம் புணர்ந்து கூடியிருந்தார். வனப்பகை சிங்கடி என்னும் இருவரைத் தமது அருமை மகளிராக ஏற்றுக் கொண்டருளி மகிழ்ந்தார். திருமணக் கோலப் பெருமாள் என விளங்கி, ஐம்புல இன்பங்களும் ஆரத்துய்த்தார். கத்தூரி கமழ்சாந்து பூசி மகிழ்ந்தார். கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டினார்.

> ''பண்டுநிகழ் பான்மையினால்
> பசுபதிதன் அருளாலே
> வண்டமர்பூங் குழலாரை
> மணம்புணர்ந்த வன்தொண்டர்
> புண்டரிகத் தவள்வனப்பைப்
> புறங்கண்ட தூநலத்தைக்
> கண்டுகேட் டுண்டுயிர்த்துற்
> றமர்ந்திருந்தார் காதலினால்''

எனச் சேக்கிழார் பெருமான் சிறந்தெடுத்துப் பாடியிருத்தலும், இச்செய்தியினை வலியுறுத்தும். இவ்வாற்றால் சுந்தரர் தவநெறிக்குப் புதிய விளக்கம் தந்தருளிய சான்றோராதல் உணரலாம்.

'தவம்' என்னும் சொல், தபு என்னும் வினைச்சொல்லின் அடியாகவும், தவ என்னும்

உரிச்சொல்லின் அடியாகவும் தோன்றியது எனக் கொள்ளலாம். முறையே அவற்றிற்குக் 'கெடுதல்' 'மிகுதல்' ன்னும் பொருள்கள் உரியனவாகும். 'நம்மிடம் உள்ள காம வெகுளி மயக்கம் முதலிய தீய குற்றங்கள் கெட்டொழிய, அன்பும் அறிவும் அருளும் போன்ற நற்பண்புகள் வளர்ந்தோங்கப் பெரிதும் முயன்று வாழும் முறையே தவநெறியாகும்' என்னும் அரும் பெறல் உண்மையினைத் 'தவம்' என்னும் சொற்பொருட் குறிப்பால் நாம் இனிது துணியலாம்.

''குற்றங் குறையக் குணம்மே லிட, அருளை
உற்றவரே ஆவிக் குறவாம் பராபரமே''

என இதனைத் தாயுமானவர் தாமும் அருளிச் செய்திருத்தல் ஈண்டுணரத் தகும்.

இங்ஙனம் நாம் தவநெறிக்குப் புதிய விளக்கம் கொண்டு புரிந்து கொள்ளும் முறையில், 'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கு முற்ற வரும் பரிசில்' மங்கையரோடு இருந்தே யோகு செய்யும் மாண்புடையவராக விளங்கி வாழ்ந்து காட்டியருளிய சுந்தரர் 'தமிழ்ச் சமர்த்தர்' என்பதில் தடையும் உண்டோ?

**தவயோகநெறி :**

இங்ஙனம் மங்கையரோடு மணந்திருந்தே யோகநெறி நிற்கும் மாண்புடையவராக விளங்கியருளிய சுந்தரரை,

''இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்-எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை''

என்பது பற்றிச் சான்றோர்கள் அனைவரும் மிக வியந்து புகழ்ந்து போற்றிமகிழ்ந்துள்ளனர்.

''செல்வநல் ஒற்றி யூரன்
செய்யசங் கிலியால் ஆர்த்து
மல்லலம் பரவை தன்கண்
மாழ்குற அமிழ்த்து மேனும்
அல்லும்நன் பகலும் நீங்காது
அவன்அடி மகிழில் எய்தி
நல்லஇன் படைந்தி ருப்பன்
நம்பியா ரூரன் தானே'' (1)

''பெருமிழலைக் குறும்பர்எனும் பரம யோகி
பெரிதுவந்துன் திருவடித்தா மரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்றான் என்றால்,
விளங்கிழையார் இருவரொடும் முயங்க லாமோ?
உரைமதி! நின் றனைவெறுப்ப தென்கொல் நின்னை
உடையானுக் கடுத்தசெயல் உனக்கும் ஆயிற்
சுரர்முனிவர் பரவவுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகைசெய்தோய்! அறம்முதல்நால் வகை
செய்தோயே'' (2)

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் மிக வியந்து போற்றிப் பாராட்டியிருத்தல், ஈண்டு அறிந்து இன்புறத்தக்கது. சேக்கிழார் பெருந்தகையும் 'மிக்க விழுத்தவ வேந்தர்' எனவும், 'நீத்தாரும் தொடர்வரிய நெறிநின்றார்' எனவும் போற்றிப் புகழ்ந்திருத்தல் காணலாம். சிவஞானியர் இலக்கணம் தெளிவிக்கத் தலைப்படும் அருள்நந்தி சிவம், சுந்தரரின் வாழ்க்கையை நினைவுகூர்ந்து, அதனையே மேல்வரிச் சட்டமாகக் கொண்டு,

''நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சரித்தும்
நாகமுழை புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பின்;
ஏடுதரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே,
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும், இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்தசே வடியும் கும்பிட்டே இருப்பர்'' (1)

''அங்கித்தம் பனைவல்லார்க்கு அனல்சுடா தாகும்;
அவுடதமந் திரம் உடையார்க்கு அருவிடங்கள் ஏறா;
எங்கித்தைக் கன்மமெல்லாம் செய்தாலும்ஞானிக்கு
இருவினைகள் சென்றணையா....'' (2)

(சித்தியார் : 308, 309)

எனத் தெளிவுறுத்தி யருள்கின்றார். சரியை கிரியை யோக ஞானங்களுள் சுந்தரர் யோக நெறிக்குரியவர் என்பதும், ''நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயொர் நால்விரல்'' என அவர் அருளிச் செய்திருப்பதும், ஈண்டு நாம் நினைவில் இருத்துதற்குரியன.

**வீடுபெற்ற நிலையில் வியப்பு :**

இனி வேறொரு வகையிலும் ஆராயலாம். அப்பர் சம்பந்தர் மாணிக்கவாசகர் முதலிய அருளாளர்கள் அனைவரும், மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தி இறையருளொளியிற் கலக்கப் புக்க நிலையில், அவர்களிடம் இருந்து நாம் யாதொரு செய்தியும் பதிகமும் கிடைக்கப் பெற்றிலோம். ஆனால் சுந்தரர் திருவஞ்சைக் களத்தினின்று புறப்பட்டு, வெள்ளை யானை ஏறித் திருக்கயிலையை நோக்கிச் செல்லுங்கால், வழியிடையே பாடிக்கொண்டு சென்ற ''தான் எனை முன்படைத்தான்'' என்னும்திருப்பதிகம் ''ஆழிகடல் அரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே'' என அவராற் பணிக்கப் பெற்றபடி, வருணதேவனால் திருவஞ்சைக்களத்தில் உய்க்கப்பட்டு, நம்மனோர் அனைவராலும் உணரப் பெற்றது. அத்திருப்பதிகத்தின்கண் சுந்தரர் இறைவன் தம்மை வெள்ளை யானையை அனுப்பிவைத்துத் திருக்கயிலைக்கு வரவழைத்துக் கொண்டதும், இந்திரன் மால் பிரமன் முதலிய தேவர்களெல்லாம் வந்து தம்மை எதிர்கொண்டு வரவேற்றதும், ஆகிய செய்திகளைத் தெரிவித்தருளியிருக்கின்றார்.

''மண்ணுலகிற் பிறந்து நும்மை
வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன்
இன்று கண்டொழிந்தேன்;
விண்ணுல கத்தவர்கள் விரும்ப
வெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான்
நொடித்தான்மலை யுத்தமனே''

''இந்திரன் மால் பிரமன்
எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை
மத்தயானை அருள்புரிந்து
மந்திரமா முனிவர் இவன்
ஆர்என எம்பெருமான்
நந்தமர் ஊரன்என்றான்
நொடித்தான்மலை யுத்தமனே''

இத்தகைய அரிய பல நலங்கள் அமைந்த திருப் பதிகம் ஆதல் பற்றியே, தாயுமானவர் 'தான் எனை முன்படைத்தான்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு விளங்கினார்!

''தான்என்னை முன்படைத்தான்
என்ற தகவுரையை
நான்என்னா உண்மைபெற்று
நாம்உணர்வ தெந்நாளோ''

என அவர் அருளிச் செய்திருத்தல் காண்க! வீடுபேறு எய்துவோர் அனைவரும் உடம்பு நீங்கிய பின்னரே அதனை எய்தப்பெறுவர். வீடுபேறு தலைக்கூடுதல் உடம்பு நீங்கியதற்குப் பின்னரே இயலும். இது குறித்தே 'செடியார் உடலைச் சிதையாதது எத்துக்கு எங்கள் சிவ லோகா?' எனவும், 'தினைத்துணையேனும் பொறேன் துயர் ஆக்கையின் திண்வலையே' எனவும்; 'மண்மேல்யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்' எனவும் மாணிக்கவாசகர் ஆங்காங்கே அருளிச் செய்வாராயினர். இங்ஙன மாகவும் சுந்தரரோ, களையா உடலோடு-மானவ யாக்கை யோடு-திருக்கயிலை செல்லப் பெற்றார். தாம் சென்றது மட்டுமேயன்றித் தமது அருமை நண்பர் ஆகிய சேரமான் பெரு மாளையும், மனித யாக்கையுடனேயே தம் மோடு திருக்கயிலைக்கு அழைத்துச் சென்றார். சுந்தரர் எய்திய இவ்வீடு பேற்று நிலையின் இயல்பினை வியந்து,

''களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம்மாறா வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே''

எனத் திருவிசைப்பா ஆசிரியர் பூந்துருத்தி நம்பி காடநம்பிகளும்,

''ஞானஆ ரூரரைச் சேரரை
அல்லது நாம் அறியோம்
மானவ யாக்கை யொடும்புக்
கவரை; வளர்ஒளிப்பூண்
வானவ ராலும் மருவற்
கரிய வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத்
தோர்தங்கள் கூட்டத்திலே''

என நம்பியாண்டார் நம்பிகளும் புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம். இவ்வாற்றாலும் சுந்தரர் ஒரு பெருந் தமிழ்ச் சமர்த்தர் என்பது பெறப்படுகின்றதன்றோ?

**ஐயமும் தெளிவும் :**

ஒரு சிலர் 'மண்ணில் நல்லவண்ணம் வாழ லாம்' என ஞானசம்பந்தர் பாடியிருக்க, 'வாழ் வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' எனச் சுந்தரர் பாடியிருப்பது முரண்பாடு அல்லவா? என ஐயுற்று மயங்குவர். அஃது ஈண்டைக்கு ஒரு வகையில் இயைபுடையதாக இருத்தலின், அதற்கு ஒரு சிறிது விடையிறுத்தல் பொருத்தமாகும்.

ஞானசம்பந்தரின் கூற்றைத் தெருள் நோக்கு என்றும், சுந்தரரின் கூற்றை மருள் நோக்கு என்றும் கருதிக்கொண்டு, அங்ஙனம் அவர்கள் மயங்குகின்றனர் போலும்! இருவர் கூற்றும் தெருள்நோக்கு உடையனவே. அவை தம்முள் முரணுவன அல்ல. ஒன்று மற்றொன் றிற்கு அரண் செய்வதேயாகும். இங்கே மாயம் என்னும் சொல், மித்தை என்னும் பொருளில் வழங்கப்படவில்லை; அசத்து என்னும் பொரு ளினையே (உள்ளது போலத் தோன்றி இல்லை யாகிவிடும் நிலையாமைத் தன்மையினையே) அது குறிக்கின்றது.

''மண்தனில் வாழ்வும் வானத்
தரசுஅயன் மாலார் வாழ்வும்
எண்தரு பூத பேத
யோனிகள் யாவும் எல்லாம்
கண்டஇந் திரமா சாலம்
கனாக்கழு திரதம் காட்டி
உண்டுபோல் இன்றாம் பண்பின்
உலகினை அசத்தும் என்பர்''

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளும், அதற்கு,

''இந்திர சாலம் தோன்றும்பொழுதே இல்லை யாய் மறைவனவற்றிற்கும், கனாக்காட்சி கடை போதல் இன்றி இடையே அழிவனவற்றிற்கும், கழு திரதம் ஒரு காரணம் காட்டி அழிவெய்துவனவற் றிற்கும் உவமையாயின''

எனச் சிவஞான சுவாமிகள் வகுத்த உரை விளக்கமும் ஈண்டு உளங்கொளத் தக்கன. இங்ஙனமே,

''நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரின்அவை இன்றாமாறு ஒப்பு''

என ஆசிரியர் மெய்கண்டசிவம் அருளிச் செய்தி ருத்தலும் அறியத்தக்கது. 'மாயம்' அல்லது 'அசத்து' என்னும் சொற்களுக்குப் பொருள், 'மிக விரைவில் அழிந்துவிடும் இயல்பிற்றாய், நிலையில்லாதது' என்பதேயாகும்.

'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்தது; அதனால் நாம் மண்ணில் நல்லவண் ணம் வாழலாம்' என நவின்று, ஞானசம்பந்தர் மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையும் பற்றும் உண்டாகச் செய்கின்றார்! வாழ்க்கையின் சிறந்த பயனை மக்கள் பெறவேண்டுமே என் னும் பேரிரக்கத்தால், சுந்தரர் 'வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்' என அறிவுறுத்துகின்றார். இவ்வறிவுரை உலகியல் நெறிக்குப் புறம்பான போலியுரையன்று; வாழ்க்கைக்குச் சுறுசுறுப்பும் — விறுவிறுப்பும் ஊட்டும் தூய நல்ல சிறந்த உண்மையுரையே யாம். 'தாழாது அறஞ்செய்மின்' எனவும், 'தாழாது திருக்கேதாரம் எனீர்' எனவும்

பணித்தற்பொருட்டே, சுந்தரர் வாழ்வாவது மாயம் எனக் குறிப்பிடுகின்றார். 'தாழாது' (வீணே காலம் கழியாமல்) என்ற உயிர்ப்பான சொல்லின் அமைப்பை, இப்பாடலில் நாம் அழுந்தி அறிதல் வேண்டும்.

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து கொள்ளுபவர்க்கே, அதன் இன்பத்தையும் பயனையும் வல்லாங்குத் தக்கவாறு எய்துதல் இயலும்! அதுபற்றியே காஞ்சித்திணை என ஒன்றைத் தொல்காப்பியர் வகுத்தருளினார். மதுரைக்காஞ்சி என்னும் சிறந்த செந்தமிழ்ச் சங்கநூல் தோன்றியதும், இக்குறிக்கோள் பற்றியேயாகும். கோவலனும் கண்ணகியும் மணந்து இன்பம் நுகர்ந்த திறனைச் சிலப்பதி காரம் வாயிலாக இளங்கோவடிகள்,

''தூமப் பணிகள்ஒன்றித் தோய்ந்தால் எனஒருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து-நாமம்
தொலையாத இன்பமெல்லாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று''

எனக் கூறியிருக்கும் திறமும், இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும். சுந்தரர் 'முடியால் உலகாண்ட மூவேந்தரும்' மதிப்பஇன்பத்தோடு இசைந்த பெருமித வாழ்வு நடாத்தும் பெற்றி யினராக விளங்கியிருந்தும், அம் மகிழ்ச்சியி லேயே மைந்துற்று மயங்கிவிடாமல்,

''இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக! தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து''

என்றபடி, வாழ்க்கையின் பிறிதொரு புறத்தை யும் தாம் கருதி உணர்ந்து,

''சொல்லிடில் எல்லையில்லை
சுவையிலாப் பேதை வாழ்வு'' (1)

''மானுட வாழ்க்கை ஒன்றாகக்
கருதிடிற் கண்கள்நீர்பில்கும்'' (2)

''கடையெலாம் பிணைத்தேரை வால்'' (3)

''செத்த போதில் ஆரும்இல்லை
சிந்தையுள் வைம்மின்கள்'' (4)

என நம்மனோர்க்கும் உணர்த்தக்கூடியவராகத் திகழ்ந்தருளினார். சுந்தரர் தமிழ்ச்சமர்த்தர் என்பதனை இவ்வாற்றாலும் இனிதுணரலாம்.

இனி, விறன்மிண்டர், ஏயர்கோன்கலிக்காமர் போன்றோர், தம்பாற் பகைமை பாராட்டின ராகவும், அவர்களையும் தம் கெழுதகைமை நண்பர்களாகச் செய்து கொண்டாழுகிய அரும் பெருந் திறமும், சுந்தரரின் தமிழ்ச்சமர்த்தினை விளக்கும் உறுபெருஞ் சான்றாக அமையும்.

''பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு''

## நயத்திற்குச் சுந்தரனார் :

சுந்தரரைச் சமர்த்தர் என்று மட்டும் கூறி யமையாது 'தமிழ்ச் சமர்த்தர்' என்று விதந்து கூறியது, தமிழ்மொழி ஒப்புயர்வற்றதாதல் போல, ஒப்புயர்வற்ற சமர்த்துடையவர் என்று சிறப்பிப்பதற்கு எனவும் கொள்ளலாம். சுந்தரர்மட்டுமே சமர்த்தர் அன்றி, அவர்தம் செந்தமிழும் சமர்த்து மிக்கதாகும். தமிழ்ச் சமர்த்தர் என்னும் தொடர் 'தமிழிற் சமர்த்து, அமையப்பாடுதலில் வல்லவர்' எனவும் பொருள் படும். இப்பொருட் குறிப்பிலேயே 'நயத்திற்குச் சுந்தரனார்' என்னும் புகழுரை தமிழகத்தில் வழங்கி வருகின்றது.

'வாக்கிற் கருணகிரி, வாதவூரர் கனிவில்
தாக்கில் திருஞான சம்பந்தர்-நோக்கிற்கு
நற்கீர தேவர், நயத்திற்குச் சுந்தரனார்
சொற்குறுதிக்கு அப்பர்எனச் சொல்''

என்பது மிகச் சிறந்ததொரு பழம்பாடல். பழந் தமிழ்ச் சான்றோர்கள் நிகழ்த்திய இலக்கியத் திறனாய்வின் அரும்பெறல் விளைவே, இவ் வினிய பழம்பாடல் எனலாம். இதன்படி சுந்தர ரின் நயமார்ந்த செந்தமிழின் திறனறிய இரண் டொரு சான்றுகளை மட்டிற் கண்டு அமை வோம்.

(1) சுந்தரர் இறைவன்பால் நெல்லிட ஆட்கள் வேண்டிப் பாடுகின்றார். அதனை வாளா பாடாமல், ''இறைவனே! நீ நின் உடலின் பாதி யில் ஒரு பெண்ணையும், சடையின்மேல் ஒரு பெண்ணையும் வைத்திருக்கின்றாய். அதனால், என்னைப்போல நீயும் மாதர் நல்லார் விளைக் கும் வருத்தத்தின் இயல்பினை அறிந்திருக்கின் றாய். எனவே பரவை பசி வருத்தமும் வாட்ட மும் தீர, யான் குண்டையூரிற் பெற்ற சில நெல்லினை அட்டித்தரப் பணித்தல் வேண்டும்'' என நயமுறப் பாடுகின்றார்!

''பாதியோர் பெண்ணை வைத்தாய்
படருஞ்சடைக் கங்கை வைத்தாய்
மாதர் நல்லார் வருத்தம்அது
நீயும் அறிதியன்றே
கோதில் பொழில் புடைசூழ்
குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆதியே அற்புதனே அவை
அட்டித் தரப் பணியே''

(2) தம்பக்கல் ஏதேனும் குற்றங்கள் இருப்பின் அவற்றைப் பொறுத்தருமாறு இறைவனை வேண்டிக் கொள்ளத் தலைப்படும் சுந்தரர், குற்றம் செய்தார் பலரையும் சுட்டிக் குறிப் பிட்டு, அவர்தம் குற்றங்களையெல்லாம் குண மாகக் கொண்டருளிய நீ, என் குற்றங்களையும் அங்ஙனமே கொண்டருளல் வேண்டும் என மன்றாடுகின்றார்!

''நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள்

குற்றம் செயினும் குணம்எனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே''

(3) தமக்குப் பொருள்கொடுத்தல் வேண்டும் என இறைவனைக் கேட்கும் சுந்தரர், வாளா கேளாது 'திருவீழிமிழலையில் முன்னர் அப்ப ருக்கும் சம்பந்தருக்கும் நாள்தோறும் படிக்காசு அளித்தீர். அதுபோல எனக்கும் இப்போது அருள்செய்தல் வேண்டும்' என நயஞ்சிறக்கக் கேட்கின்றார்!

''நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த
நிறைமறையோர் உறைவீழி மிழலைதனில்
நித்தல்
காசுஅருளிச் செய்தீர்! இன்று எனக்கருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே''

(4) சங்கிலியாரைத் தமக்குத் திருமணம் செய்து வைத்தல் வேண்டும் என இறைவன் பாற் சுந்தரர் வற்புறுத்தி வேண்டிக் கொண்ட முறைமையினை,

''மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும்
அன்றி, மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளும்
காதல் உடையீர்! அடியேனுக்கு
இங்கு நுமக்குத் திருமாலை
தொடுத்தென் உள்ளத் தொடையவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத்
தந்தென் வருத்தம் தீரும்!

எனச் சேக்கிழார் பெருமான், சுந்தரரின் நயஞ் செறிந்த சொல்வன்மைத் திறம் விளங்கப் பாடி யிருத்தல் காணலாம். இத்தகைய நயஞ் செறிந்த நல்லுரைகளால்,

''பாட்டுக்கோ வன்பினுக்கோ
பத்திக்கோ அன்பர்தங்கள்
நீட்டுக்கெல் லாம்குறுகி
நின்றாய் பராபரமே''

என்றாற்போல, இறைவனைச் சுந்தரர் தாம் இழுத்த இழுப்புக்கெல்லாம்வளைந்து கொடுக்கு மாறு செய்து ஏவற் பணி கொண்டனர். இவ் வுண்மையை,

''பொன்நவிலும் கொன்றையினாய்
போய்மகிழ்க்கீழ் இருஎன்று
சொன்னஎனைக் காணாமே
சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே,
இங்கிருந்தா யோஎன்ன
ஒன்னலரைக் கண்டாற்போல்
உளோம்போகீர் என்றானே''

எனவரும் தேவாரப் பாடலால் தெளியலாம். ''வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த பசு மட் குரூஉத்திரள் போலத்'' தாம் வேண்டு மாற்றானெல்லாம், இறைவனைத் தம் நயம் சிறந்த செந்தமிழ்ப் பாடல்களால் மயக்கி மகிழ் வித்து ஏவல் கொண்ட சிறப்புப் பற்றியே சுந்தர ரைத் 'தமிழ்ச் சமர்த்தர்' என்று தாயுமானவர் புகழ்ந்தமை பொருத்தமே யாகும்அன்றோ?

''தன்மையினால்அடி யேனைத்தாம்
ஆட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்தொண்டன்
என்பதோர் வாழ்வுதந்தார்,
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந்
தென்னைப் போகம் புணர்த்த
நன்மையி னார்க்கிடம் ஆவது
நந்திரு நாவ லூரே''

## முடிவுரை :

இதுகாறும் கூறிய சிலவற்றால், சுந்தரரின் அருமை பெருமைகளையும், அவர்தம் செந் தமிழ்த் திருப்பதிகங்களின் சிறப்புக்களையு மெல்லாம், ஓரளவேனும் உய்த்துணர்ந்து கொண்ட நாம், 'தமிழ்ச் சமர்த்தர்' எனத் தாயுமானவர் முதலிய சான்றோர்கள் பலரும் போற்றிய நம் சுந்தரரை வழிபட்டு, அவர்தம் தேவாரத் திருப்பதிகங்களை ஓதியுணர்ந்து உய்வதற்கு முயலுவோமாக!

---

# பேணாமை காணும் வழி

ஆன்மாக்கள் பலவகைப்பட்டிருந்தாலும், அவ்வான்மாக்களுக்குள்ளது தொண்டக்குலம் ஒன்றே யாம். இவர்களுக்கு வினைப்பயன் காரணமாக இறைவன் அளித்தருளிய தேகமும், இயற்கையான தொன்றேயாகும். ஆயினும், இவர்கள் அனுபவிக்கும் பயன்கள் வெவ்வேறுபட்டவையாகும். புகழ் இலாபம் பூசை முதலிய பலன்களில் ஒருவகையான பலனையும் எதிர்பாராமல், கடைக்கணித்தருளத் திருவுள்ளம் உடைய ஆசாரியர்களின் திருவடிகளை விரும்பிப் பணியாததொன்றே, ஆன்மாக்கள் அடையும் பலவகைத் துயரங்களுக்கும் மூல காரணமான பிழையாகும். ஆசாரியர்களின் திருவடிகளை விரும்பி வழிபடும் பண்புடையவர்களுக்கு, வினைகளால் விளையும் துன்பங்கள் எதுவும் இல்லை.

குலம்ஒன்று, உயிர்பல, தங் குற்றத்தால் இட்ட
கலம்ஒன்று, காரியமும் வேறாம்,—பலம்ஒன்று
காணாமை காணும் கருத்தார், திருத்தாள்கள்
பேணாமை காணும் பிழை.

—பிரமேயசாரம்

[குலம்-தொண்டக்குலம். தம் குற்றத்தால் இட்டகலம்-தம்முடைய தீவினையின் பயனாக இறைவன் அளித்த உடலாகிய பாத்திரம். காரியம்-அனுபவிக்கும் பயன்கள். வேறுஆம்-வெவ்வேறு பட்டனவாகும். பலம்-புகழ் பொருள் பூசை முதலிய பயன்கள். காணாமை-எதிர்பாராமை. காணும் கருத்தார்-கடைக்கண்ணால் நோக்கி அருள்புரியும் திருவுள்ளம் உடைய ஆசாரியர்கள். பேணாமை-விரும்பிப் பணியாமை. பிழை-பெருங்கேடுகளுக்கு மூலமான குற்றம்]

—ஆசிரியர்.

---

# மதுரகவிகள்

'மகாவித்துவான்'

திரு. பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்

மதுரகவிகள், ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ள திருக்கோளூரில் சித்திரை நாளில் திருவவதரித்தார். 'வகுளபூஷண பாஸ்கரோதயத்திற்கு அருணோதயம் போன்றது இவரது திருவவதாரம்' என்பர் பெரியோர். நம்மாழ்வாரிற் காட்டிலும் திருநட்சத்திரத்தில் இவர் மூதுவர் என்பது இதனால் விளங்கும்

இவர் வேத சாத்திரங்களை இளமையிலே பயின்று செவிக்கினிய செஞ்சொற் கவிகளைப் பாட வல்லவராய், அதனால் மதுரகவி என்று திருநாமம் பெற்று, மெய்யுணர்வினால்நிறைந்து மகா விரக்தராய் விஷ்ணுபக்தி விஞ்சி, யோக நிஷ்டையிலும் தேர்ந்து தீர்த்த யாத்திரை திவ்விய தேச யாத்திரைகளிலே திருவுள்ளமுடையராய்ப் புறப்பட்டுச் சஞ்சரிக்கலுற்று, வடநாட்டுத் திருப்பதிகளைச் சேவித்துக் கொண்டு வந்தார். அங்ஙனம் வருகையில், திருவயோத்தியிலிருந்து ஒரு நாளிரவில் திருக்கோளூர் எம்பெருமானைத் திசைநோக்கித் தொழுபவராய்த் தெற்குத் திக்கில் கண் செலுத்தினார். அப்பொழுது அப்பக்கத்திலே வானுற வளர்ந்து விளங்குகின்றதொரு திவ்வியமான பேரொளியைக் கண்ணுற்று, அது இன்னதென்றறியாமல் திகைத்து நின்றார். அச்சுடர் முச்சுடரொளியிலும்மிக்கு விளங்கியதனால் வெகு வியப்புற்று அச்சோதியையே குறியாகக் கொண்டு விரைவாக நெடுவழி கடந்து நடந்து வந்து ஆழ்வார் திருநகரியை அடைந்தார்.

அங்கு அவதரித்தருளியுள்ள சடகோப முனிவரது திருமேனி விளக்கத்தைச் சேவித்து, இதுவே அத்தனை நெடுந்தூரம் பிரகாசித்ததென்று அறிந்து வியந்து, அவ் ஆழ்வாரது நிலைமை முன்புதாம் கேள்வியுற்றிருந்தபடியே அப்ராக்ருதமாயிருக்கக் கண்டு, அவர்க்குக் கட்புலனும் வாய்ப்புலமும் உள்ளனவா என்பதைச் சில உபாயங்களினால் பரிசோதிப்பவரானார். அப்பொழுது காரிமாறப்பிரான் கண் திறந்து கடாட்சித்து, இவர் கேட்ட கேள்விக்கு ஏற்ற விடை சொல்லியருள, அது கண்டு மதுரகவிகள் ஆழ்வாரது ஞான வைபவத்திற்கு அதிசயித்து ஈடுபட்டு, அவரையே ஆசாரியராகக் கொண்டு சரணம் புகுந்தனர்.

அவ்வாழ்வார், பக்தியின் பிரவாக ரூபமாக அருளிச் செய்த சதுர்வேதசாரமாகிய நான்கு திவ்வியப் பிரபந்தங்களை, இம் மதுரகவிகள் தாம் பட்டோலை கொண்டு, கைத்தாளமெடுத்துப் பண்ணிசையோடு அவற்றை எப்பொழுதும் பாராயணஞ் செய்து கொண்டு திருக்குருகூர்நம்பிக்குப் பிரதான சிஷ்யராய், பரதாழ்வானுக்கே பணிவிடை புரிந்து ஒழுகின சத்ருக்நாழ்வானைப்போல், பகவத் பக்தியிலும் பாகவதப் பிரதிபத்தியையே பரமாநுஷ்டானமாகத் தலைக்கொண்டு, அவ்வாழ்வார் விஷயமாக 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற திவ்வியப் பிரபந்தத்தைப் பாடி முமுட்சுக்களுக்கு உபகரித்தருளினர்.

பகவத் பக்தியிற் சிறந்தவர்களையே ஆழ்வார்களென்று சிறப்பித்துக் கூறுதலும், அவர்கள் அருளிய பிரபந்தங்களையே திவ்வியப் பிரபந்தங்கள் என்று கூறுவதும் சம்பிரதாயமாயிருக்கவும், ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமான நம் பூருவாசாரியர்கள், இம் மதுரகவிகளை ஆழ்வார்களது கோஷ்டியில் சேர்த்து, இவரருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பையும் அருளிச் செயல்களினிடையே சேர்த்தருளினர் என்பது மணவாள மாமுனிகளின் உபதேச ரத்தினமாலையில்,

''வாய்த்த திருமந்திரத்தின்
மத்திமமாம் பதம்போல்

சீர்த்த மதுரகவி
செய்கலையை—ஆர்த்தபுகழ்

ஆரியர்கள் தாங்கள்
அருளிச் செயல்நடுவே

சேர்வித்தார் தாற்
பரியந் தேர்ந்து''

என்ற பாசுரத்தினால் அறியத்தக்கது. இப்பாசுரத்தின் உரையில் பிள்ளைலோகஞ் சீயர் ''இதுதான் பயிலுஞ் சுடரொளி'' ''நெடுமாற்கடிமை'' தொடக்கமானவற்றின் அர்த்தத்தைப் பிரதிபாதிக்கையாலே, இதின் அர்த்த கௌரவத்தை விசாரித்து, நன்றாயிருப்பதொரு ஆரத்தைச் சமைத்து அது ஒளிபெறும்படி சிலாக்கியமாயிருப்பதொரு நாயகக்கல்லை அதன் நடுவே பதித்தாற்போலே, அருளிச் செயல்கள்தான் நிறம் பெறும்படி அவற்றின் நடுவே இதைச் சேர்த்தார்கள். சேர்த்த சேர்க்கையில் சாதுர்யத்தாலேயே முத்துமாலை தொடக்கமான ஆபரணாதிகள் நிறம் பெறுவது அதுபோலேயாய்த்து இது''—என்றருளியுள்ள சூக்திகளும் குறிக்கொள்ளத்தக்கன.

கம்பர், தாம் ஆழ்வார் விஷயமாகச் சட கோபரந்தாதி பாடுவதற்கு, இக் கண்ணி நுண்சிறுத்தாம்பை வழிகாட்டியாகக் கொண்டமையை, அவர் தாமே வெளியிட்டுரைத்த,

''மன்றே புகழுந் திருவழுந்தூர்
வள்ளல் மாறனைமுன்
சென்றே மதுரகவிப் பெருமாள்
தென்தமிழ்த் தொடையில்
ஒன்றே பதிக முரைத்தவன்
பொன்னடி யுற்றுநின்றான்
என்றே பதிகம் பதிகம தாக
இசைத்தனனே''

என்னும் பாயிரமும் இங்கு நினைக்கத்தக்கது.

ஆழ்வார்களுடைய நிஷ்டையிற் காட்டிலும் மதுரகவிகளின் நிஷ்டை மிகச் சீரியதாகப் போற்றப்படுகின்றது. ஸ்ரீவசன பூஷணத்தில் சரமபர்வ நிஷ்டாப்ரகரணத்தில்—''உண்டபோதொரு வார்த்தையும் உண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேருண்டிறே. அவர்கள் பாசுரம் கொண்டன்று இவ்வர்த்தம் அறுதியிடக்கடவது. அவர்களைச் சிரித்திருப்பாரொருவ ருண்டிறே. அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்தம் அறுதியிடக் கடவோம்'' என்றருளிச் செய்துள்ள திவ்விய சூக்திகளை நோக்கினால், தத்வார்த்த நிஷ்கர்ஷ விஷயத்தில் மதுரகவிகளின் ஸ்ரீசூக்தியே சீரிய சிங்காசனத்தில் அமர்ந்திருக்க உரிமையுடையதாகும் என்று நிச்சயிக்கப்படும்.

இவர் நம்மாழ்வாருடைய அருளிச் செயல்களை ஆழ்ந்து நோக்கி, பகவத் பக்தியிற் காட்டிலும், பாகவத பக்தியே மிகச் சிறந்ததென்கிற தத்துவப்பொருளை உறுதியாகக் கைக்கொண்டார். ஆழ்வார் முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் தமக்கு நிரூபகமாக ''திருமால் திருப்பேர் வல்லார் அடிக்கண்ணி சூடிய மாறன்'' என்றருளிச் செய்து, சரமப் பிரபந்தமாகிய திருவாய்மொழியின் முடிவில் ''வந்தவர் எதிர்கொள்ளமாமணி மண்டபத்து, அந்தமில் பேரின்பத்து அடியரோடிருந்தமை'' என்று தாம் திருநாட்டிலும் பாகவதகோஷ்டியில் அந்வயிக்கப் பெற்றதையே பேறாக அருளிச் செய்து தலைக்கட்டினார். இந்தச் சுவடறிந்த மதுரகவிகள் பாகவத நிஷ்டைக்கு மேற்பட்ட புருஷார்த்தம் இல்லை என்று துணிந்தார்.

''பகவத் பக்தியிற்காட்டிலும் பாகவத பக்தி சிறந்தது'' என்று சொல்லுவதன் தத்துவம் சிறிது விவரிக்கப்படுகிறது: ஒருவன் ஒரு வஸ்துவினிடத்தில் அன்பு வைத்தால், அவ்வன்பு அளவற்றதுமாயிருந்தால், அஃது அவ்வஸ்துவோடே நின்றுவிடாமல், அதனோடு சம்பந்த சம்பந்தம்பெற்ற வஸ்துக்களிலும் பெருகிச் செல்லுமென்பதை அனைவரும் தம் தம் அநுபவத்தாலறிவர். அப்படியே பாகவத பக்தியென்பது பகவத் பக்தியின் எல்லை நிலமாகவுண்டாமது. பகவத் பக்தியின் உறைப்பையே பாகவத பக்தி வெளிப்படுத்தும். சுவாமியின் பாதுகைகளிலே நாம் ஆதரவு வைத்து அவற்றைக் கண்களில் ஒற்றிக் கொள்வதும், தலைமீது அணிந்துகொள்வதும், அலம்பித் தீர்த்தம் பருகுவதும் செய்கிறோம். இதனால் நமக்குச் சுவாமியிடத்துள்ள பக்தி அபாரமானது என்பதேயன்றோ வெளியாகின்றது. அதுபோலவே 'எம்பெருமானும் வேண்டா, அவன் உறையும் திருப்பதியும் வேண்டா, ஆழ்வாரும் அவருடைய அருளிச் செயல்களுமே உத்தேச்யம்' என்று பேசினாலும் பகவத் பக்தியின் முதிர்ச்சியே விளங்கிற்றாகும்.

## சிவஞானபோதம்

நாற்ப தடியால். இருநூற்றுப் பதினாறு எளிய நற்சொல்லால்,
ஏற்ற அறுநூற் றிருபான்நான்(கு) எழுத்தால், சமயக் கொள்கையெலாம்
தேற்றித் தெருட்டும் சிவஞான போதச் செழுநூல் போல்,எங்கும்
வேற்றோர் நூலின் றெனவுரைப்பின், மிக்க அதன்சீர் விளம்புவர்யார்? (1)

ஒன்றாய் வேறாய் உடனாக உயிர்கள் தம்மோ டொருங்கியைந்து,
நன்றே அருளால் அவற்றினுக்கு நயந்து கண்டும் காட்டியுமே,
நின்றே உதவும் இறைவனருள் நிலையை, அத்து விதப்பொருளால்
வென்றே விளக்கும் சிவஞான போதம்அறிவுக் குயர்விருந்தாம்! (2)

—ந. ரா. முருகவேள்

8-ம் பக்கத் தொடர்ச்சி

அறிவிக்கப்பட வேண்டும். ஆண்டுக் கணக்கு முடிவு பெற்ற உடனே இதை இங்கே எங்கேயாவது பெரிய அளவிலே நோட்டீஸ் போர்டிலே ஒட்டிவையுங்கள், எவ்வளவு வருமானம், எவ்வளவு செலவாகிறது என்பதைப் பக்தர்கள் தெரிந்து கொள்வார்கள். அதைவிட எவ்வளவு பாக்கி இருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்வார்கள். பாக்கி மாத்திரம்வர வேண்டிய தொகை 25கோடி ரூபாய். இது வருமா வராதா என்பதே தெரியாது. இன்னும் வாடகைக்கு இருக்கிறார்கள் பலபேர். ஆயிரக்கணக்கிற் பெறுமானமுள்ளவாடகை வரக்கூடிய கட்டிடங்களை, 100 ரூபாய் ,50 ரூபாய்க்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலே ஒருவடநாட்டுக்காரர் ஒரு ஆலயத்திற்குச் சொந்தமான கட்டிடத்தை வைத்துள்ளார். நீங்கள் எல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். பார்த்திருப்பீர்கள். சைனா பஜார், அது எவ்வளவு பெரிய மதிப்பு வாய்ந்த இடம் என்பது உங்களுக்குத் தெரியும். நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் சாலை என்பது இப்பொழுது பெயர். அங்கே ஒரு ஆலயத்திற்குச் சொந்தமான கடையை வைத்துக்கொண்டு அவர் நூறோ, இரு நூறோ அந்தக் கோயிலுக்குத் தந்துவிட்டு, அவர் மூதாதையர்கள் பல ஆயிரங்கள் சம்பாதித்துக் கொண்டிருக்றார்கள். அந்த ஒப்பந்தம் முடிந்த உடனேயே அதனுடைய அறநிலையத்துறை ஆணையரும் மற்றும் அதிகாரிகளும் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அவர் இந்த நாட்டினுடைய ஆளுநரிடத்திலே போய் விண்ணப்பம் தந்து, எனக்கு இன்னும் தவணை இருக்கிறது என்று கேட்டுவிட்டு, வழக்கு மன்றத்திற்குப் போகிறார். இங்கே ஆணையர் சொன்னார், இந்த வழக்கறிஞர்கள் எல்லாம் நம்முடைய அரசிலே ஏழைகளுக்காக இலவசச் சட்ட உதவி இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறோம். அதைப்போலவே இந்த ஆண்டவனும் இப்பொழுது ஏழையாகத்தான் இருந்து கொண்டிருக்கிறான், அனாதையாக இருந்து கொண்டிருக்கிறான், இவனுக்கும் இந்த இலவசச் சட்ட உதவியை நாம் ஏற்படுத்தியாக வேண்டும் என்று சொன்னார். இங்கே வழக்கறிஞர்கள் இருந்தால் என்னை மன்னிக்க வேண்டும். வழக்கறிஞர்கள் ஆண்டவனுக்கு எதிராகவும் வழக்காடுகிறார்கள். வழக்கறிஞரும் தினசரி காலையிலே எழுந்த உடனே மயிலைக் கபாலி கோயிலுக்குப் போகிறவர்தான், இல்லை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதியைச் சந்திக்கிறவர்தான், வணங்குகிறவர்தான். காலையிலே எழுந்த உடனே அங்கே பூசை செய்துவிட்டு வந்துதான் தன் அலுவலக அறையிலே உட்காருகிறார். ஒருவர் வருகிறார். கட்சிக்காரர். என்ன கேஸ்? நான் இந்த மயிலாப்பூர்க் கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான கடையை நீண்ட காலமாகவைத்துக் கொண்டிருக்கிறேன், ''சரி,சரி''. அந்தக் கடைக்கு நீண்ட காலமாக அவர்கள் எல்லாம் இளிச்சவாயர்களாகக் கண்மூடிக்கொண்டிருந்த காலத்திலே, அந்தக் காலத்திலிருந்த ஒரு நல்ல அறங்காவலர் எனக்கு ஒரு 50 ரூபாய்க்குப் போட்டுத் தந்துவிட்டுப் போய்விட்டார். 50 ரூபாய் என்று இருந்ததைத் திடீர் என்று அந்த நிர்வாக அதிகாரி 800 என்று ஆக்கியுள்ளார். இதற்கு ஒரு ஸ்டே வாங்கவேண்டும். அவர் காலையிலேதான் கபாலீசுவரரைப் போய் வணங்கிவிட்டு வந்திருப்பார். கபாலீசுவரர் சொத்தாயிற்றே. எனக்கே தெரியாமலே எனக்குக்கூட பக்கத்திலே, தெற்குக் கரையிலே ஒரு கட்டிடம் இருக்கிறதே. அந்தக் கட்டிடத்திற்கு அங்கே 800 ரூபாய் வாடகை வாங்கிக் கொண்டிருக்கிறார்களே. இது கபாலீசுவரர் கடை என்கிறார்களே, 50 ரூபாய் என்பது அநியாயமாக இருக்கிறதே. அக்கிரமமாக இருக்கிறதே.. ஏனப்பா 800 ரூபாய் தானே கேட்கிறார்கள். அதைக் கொடுத்துவிடக்கூடாதா என்றா சொல்லுகிறார். இந்தக் கேஸை நான் எடுக்கமாட்டேன் என்று உத்தமர் காந்தியடிகள் சொன்னாரே அதேபோல் சொல்லுகிறாரா? கோர்ட்டில் பெட்டிஷனைப் போட்டு, இந்த ஐம்பதையும் தரமாட்டேன் என்று 'தடை உத்திரவு' வாங்குகிறார். நான் கேட்கிறேன், இலஞ்சியில் வாழ்கிற பெருமக்களே, அறங்காவலர்கள் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்பதாலேயா இது நடைபெறுகிறது. கடைக்காரர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களா? தமிழ் நாட்டிலே இருக்கிற வழக்கறிஞர்களுடைய காலிலே விழுந்து வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். பழநி ஆண்டவனாக, திருச்செந்தூர் ஆண்டவனாக, சுவாமிமலை ஆண்டவனாக இந்த நாட்டிலே இருக்கிற முருகன், மற்றும் எல்லா ஆண்டவர்களுடைய சார்பிலும் நான் இவர்கள் காலிலே விழுகிறேன். ஆலயங்களுக்கு எதிரான, அக்கிரமமான வழக்குகளிலே தயவு செய்து ஆஜராகாதீர்கள். பார் கவுன்சிலில் அப்படி ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்று பணிவோடு, நான் திருச்செந் தூர் ஆண்டவன் சந்நிதியிலேயிருந்து கேட்கிறேன். இலஞ்சியிலே பெயர்பெற்ற அந்தப் பெரியவர்கள் இதற்கு என்ன பதில் சொல்வார்கள். உறுதுணையாக நிற்கிறார்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆண்டவனுக்கு எதிராகத் தொடுத்த வழக்குகள் எத்தனை ஆயிரம் தெரியுமா? கோர்ட்டிலே போய் ஏற முடியவில்லை. இன்னும் வெட்கக்கேடு, வேதாரண்ரண்யத்தில், விஷயங்கள் அற்புதமான, வரலாறு படைத்த, வேதாரண்யக்கோயில். அந்த வேதாரண்ய ஊரே அந்தக் கோவிலுக்குச் சொந்தம். ஆயிரக்கணக்கான ஏக்கர் அந்தக் கோவிலுக்குச் சொந்தம். அந்த கோவிலுக்குத் தினசரி பூசை செய்வதற்குப் பணமில்லை. இதைவிடக் கேவலம் வழக்கு. அத்தனைக்கும் அந்த வழக்குகள் நடத்துவதற்கு வழக்கறிஞர்களுக்குப் பணமோ, இங்கே இருக்கிற திருச்செந்தூர், திருத்தணி, பழநி, இந்த ஆண்டவன் கொடுத்துக்கொண்டிருக்கிறான். நாட்டிலே விபரம் தெரியாமல் கதை தெரியாமல் நாட்டு மக்களுக்கு இந்த உண்மைகள் எல்லாம் சொல்லப்படாமல் ஏதோ மௌனிகளாக வாழ்ந்து கொண்டிருந்த காரணத்தாலே உண்மை தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வழக்குகள் நடத்துகின்ற வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கப் பணம் இல்லை. எத்தனை ஆயிரம் வழக்குகள். வழக்கு மன்றத்திற்குப் போய் ஒரு பெட்டிஷன்

ஒரு ஸ்டே தீர்ந்தது. ஏதோ இந்தக் கோவில்கள் எல்லாம் தப்பியது. ஏன் என்றால் நீங்கள் எல்லாம் இங்கே உண்டியலில் போட்டுக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நல்ல வேளையாக பெரியவர்கள் அதிகமாக சொத்தை எழுதி வைத்துப் பாதுகாக்கவில்லை. தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற கோவில்கள் எல்லாம் இன்றைக்கு விளக்கு எரிப்பதற்கு எண்ணெய்வாங்கக் காசு இல்லை. உங்களுக்குத் தெரியுமா?.

தஞ்சையிலே குருக்கள் எல்லாம் உண்ணா விரதம், பூசாரிகள் எல்லாம் உண்ணாவிரதம். ஏனென்றால் இங்கிருப்பவர்கள் எல்லாம் வழி காட்டி விட்டார்கள். கறுப்பு பேட்ஜை அணிந்து கொள்வோம், நாங்கள் உள்ளே வரமாட்டோம், உள்ளே வராவிட்டால் அந்த ஆண்டவன் கோபித்துக் கொள்ளமாட்டானா என்ன? நாங்கள் அவர்களுக்கெல்லாம் வயிறு நிறையக் கிடைத்து விடுகிறது, கை நிறையச் சம்பளம் கிடைக்கிறது என்று சொல்லவில்லை தொண்ணூறாயிரம் பேர் இந்த ஆலயங்களிலே, தமிழகத்திலே ஆலயங்களிலே வேலை செய்கிறவர்கள், அரைப்பட்டினி, கால்பட்டினியாக இருந்து கொண்டு வேலை செய்கிறார்கள். இந்த எண்ணிக்கை ஏழு கோயில்களுக்கு இவர்களுடைய முயற்சியினாலா வருமானம் வருகிறது. இதோ நாளைக்குக் கந்தசஷ்டி வருகிறது, பக்தர்கள் லட்சக்கணக்கில் வந்து காணிக்கை செலுத்தப் போகிறார்கள். அந்தக்காணிக்கையைப்பார்த்த உடனே அமிர்தராஜ் கேட்கிறார், ஒரு பெண்கள் கல்லூரி வேண்டும், ஒரு மருத்துவ மனை வேண்டும், உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன, கட்டிடம் வேண்டும். இன்று நம்முடைய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள், இந்த ரோடுகளெல்லாம் பழுதாகிக் கிடக்கின்றன,அதையும் ஆலயங்களிலே எடுத்துச் செய்யச் சொல்லுங்கள். எங்கே இருக்கிறது நாற்பது லட்ச ரூபாய். இந்த ஆலயத்திற்கு ஆண்டு வருமானம் என்றால் இந்த நாற்பது லட்சத்தையும் கொட்டித் தீர்த்துவிட்டால் கவிழ்த்து விட்டால், அதற்குப் பிறகு கடனாகப் போனால், யார் கவனிப்பார்கள். ஆலயங்கள் இல்லையானால், நாம் தமிழர்கள் என்று உலகிலே சொல்லிக் கொள்வதற்கு நமக்கு இருக்கிற, மிஞ்சுகிற சின்னம் என்ன? 12 அடுக்கு, 20 அடுக்கு, மாடியைக் கட்டிவிட்டால் நமக்குப் பெருமைதான் இல்லையா? இதை விடப்பெரிய மாடிகள் நியூயார்க்கிலே கட்டி வைத்திருக்கிறார்கள். வேறு இல்லாத குறிப்புகளைக் காட்டி, நாங்கள் இந்தியாவிலே, தமிழகத்திலே எல்லாவற்றையும் பார்த்துவிட்டேன் என்று சொல்லமுடியுமா, இதைவிட விஞ்ஞானிகள் முன்னேறி இருக்கிறார்கள். உலகிலே எந்த விஞ்ஞானியாலும் கண்டுபிடிக்க முடியாத, செய்யமுடியாத, இன்றைக்குவரை இருக்கிற திறமை தமிழகத்தின் பெருமை இந்த ஆலயங்கள் அல்லவா? இந்தப் பேசுகிற கற்கள் அல்லவா? கல்லை அல்லவா பேச வைத்து இருக்கிறார்கள்? உலகத்தில் உள்ள சிற்பிகளை எல்லாம் பார்த்து விஞ்ஞானிகள் எல்லாம் ஆச்சரியப்படுகிறார்கள். நம்முடைய நடராசர் உருவத்தைப் பார்த்துப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் அற்புதம் என்று அதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். இதை எப்படிக் கண்டுபிடித்தான், இந்த நிலையை எப்படிப் பார்த்தான், நாத்திகர்கள் அறிய ஒழுங்காக தினசரி கோவிலில் பூசை செய்து கொண்டிருந்தவன் தான், கரைக்டாகப் பார்த்துத் தான் அந்த இடத்திலே எந்தப் பொருளை எப்படி வந்தது, எப்படி எடுக்கலாம் என்று யோசனை சொல்வது. அதைத்தான் கவனித்துக் கொள்கிறான் தினசரி. ஆகவே காரியங்கள் முழுவதும் நடைபெறுகிறது. தயவு செய்து எங்களை எல்லாம் நாங்கள் யார் என்று பார்க்காதீர்கள். நாங்கள் போடுகிற சட்டையைப் பார்க்காதீர்கள். எங்கள் உள்ளத் தூய்மையைப்பாருங்கள். ஆலயங்களில் பணிபுரிகின்ற அருமை நண்பர்கள், ஊழியர்கள், தாங்கள் நாட்டிற்குப் பணிபுரிகின்ற ஒருவாய்ப்பை, சேவை செய்வதற்கு உரிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம் என்று எண்ணுங்கள். எல்லா வேலையும் ஒரே மாதிரித்தான் செய்கிறோம். ஆனால் சம்பளம் ஒரே மாதிரி இல்லையே. இங்கே இருக்கிற இந்து பத்திரிக்கை நிருபருக்குக் கிடைக்கிற சம்பளம், இன்னொரு பத்திரிகை நிருபருக்குக் கிடைக்குமா? இரண்டுபேரும் ஒரே வேலையைத்தான் செய்கிறார்கள். என்ன செய்வது, நாம் நம்புகிறோம் அல்லவா. ஆண்டவனுடைய தலையெழுத்தை, விதியை. அப்படி தலைவிதி என்று நீங்கள் நம்புவது உண்மையானால் அதையாவது ஒப்புக் கொள்ளுங்கள், இல்லையேல் நாமும் அவரும் ஒரே வேலையைத் தான் செய்கிறோம் என்றால், எல்லோரும் இந்து பத்திரிகைக்கு வேலைக்குப் போகவேண்டும். இந்து பத்திரிகைக்கு எத்தனை ரிப்போர்ட்டர்கள் வருவார்கள். திருநெல்வேலிக்கு ஒரு ஆள் தான் வேண்டும், இல்லையேல் இரண்டு பேர் இருப்பார்கள். என்னையா, நாங்கள் ஆறு கோயில், ஏழுகோயில், ஏதோ ஜனங்கள் வந்து உங்களுக்காகக் காணிக்கை செலுத்துகிறார்கள். என்னை முதலிலே கவனி என்றால், இதே ஆண்டவனுக்குச் சேவை செய்கிற மற்றவர்களை எல்லாம் யார் கவனிப்பது. இங்கே இருக்கிற இந்தப் பணத்தை இந்த ஆண்டவனுடைய அந்தத் திருவருளாலேயே அந்த ஏழைகளையும் கொஞ்சம் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் வேண்டுகோள் வைக்கிறபொழுது போராட்டம், போராட்டம் என்று சட்டமன்றத்திலேயிருந்து பேசினார் ஒருத்தர். நாங்கள் ஆலய ஊழியர்களை எல்லாம் கவனிக்கவில்லை என்றால் போராடுவார்கள், போராடுவார்கள். ஆலயத்திலுள்ள ஆண்டவனை நினைத்துப் போராடட்டும். என்ன அரசாங்கம் இந்த நாட்டிலே இருக்கிறது. இருபத்தாறாயிரம் ஆலயங்கள் நம்முடைய கணக்குப்படி அரசின் பொறுப்பிலே இருக்கிறது. இன்னும் இருபத்தையாயிரம் ஆலயங்கள் அரசுப் பொறுப்பிலே வராமல் இருக்கின்றன. நம்முடைய நாட்டில் தான் இந்தப் பழமை இருக்கிறது. ''கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்'' என்று அதனாலே நம் முன்னோர்கள், எல்லா ஊரிலும் கோவில்கள் கட்டி வைத்தார்கள். சரி ஒரு ஆள் ஒரு கோவிலைக் கட்டினால், இன்னொரு ஆள் இன்னொரு கோவிலைக் கட்டி இப்படி போட்டி. காஞ்சிபுரத்தை எடுத்துக் கொண்டால், விஷ்ணுகாஞ்சி, சிவன்காஞ்சி.

இவர் விஷ்ணுநாதர் கோவிலைக் கட்டினால் அந்தப் பக்கம் சோமநாதசுவாமி கோவிலைக் கட்டி வைத்தார். ஆனால் எந்தக் கோவிலாக இருந்தாலும் இன்றைக்கு நம்மாலே அப்படிப் பட்ட கோவிலைக் கட்ட முடியாது. ஒரு இராச ராசசோழன் எழுப்பிய அந்தத் தஞ்சைப் பெருங் கோவிலை இன்றைக்கு இருக்கிற எஞ்சினியர் கள் பார்த்துத் திகைத்திருக்கிறார்கள். அவன் பூமிக்கடியிலே 5 அடி தான் அஸ்திவாரம் போட் டிருக்கிறான். எந்த முறையில் ஆலயம் எழுப்பி யிருக்கிறான். எப்படி இதைக் கட்டினான். உள்ளே பார்க்கலாம் என்றால் நம்முடைய சாஸ்திரங்கள் தடை விதிக்கின்றன. வெளிநாட் டிலிருந்து வருகிறவர்கள் இதைப் பார்க்கவேண் டும் என்று, இந்த எஞ்சினியரிங் டெக்னாலஜி எப்படி என்று பார்த்துவிட வேண்டுமென்றால் உள்ளே போகக்கூடாது. அவ்வளவு அற்புத மாகப் படைத்திருக்கிறார்கள் அந்த ஆலயத் யத்தை. அற்புதமான, டிசைன் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே அவைகளை எல் லாம் பார்க்காமல் நாம் தமிழர் என்று எப் படிச் சொல்லிக் கொள்ளப்போகிறோம். நமக்கு ஏது அவ்வாறு சான்று. இன்றைக்கு அவன் உருவாக்கின பாலியஸ்டரைப் போட்டுக் கொள் கிறோம், அவன் உருவாக்கிய பேண்ட், ஷர்ட் போட்டுக்கொள்கிறோம். மிச்சம் மீதி இருப் பதே இவைகள்தான். இதைக் காப்பற்றவில் லையானால் நமக்கு வேறு ஏது? தமிழர்கள் தமிழர்கள் என்று சொல்வதற்கு. ஆகவே ஆல யத்திலே சேவை செய்கிற பணியாளர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் இந்த நாட்டிலே ஒரு சமுதாயக் கடமைக்கு உங்களை ஒப்படைத்துக் கொண்டு இருப்பதாக முதலிலே நினைத்துக் கொள்ளுங்கள், அதற்குப் பிறகு உங்களுக்கு வயிறு இருக்கிறது, வாய் இருக்கிறது, குடும்பம் இருக்கிறது, பிள்ளை குட்டிகள் இருக்கிறது. எவ்வளவு முடி யுமோ அவ்வளவையும் நீங்கள் கேளுங்கள். முடிந்தால் தருகிறோம். ஆண்டவன் இடத்தில் கொஞ்சம் அதிகமாக வேண்டிக் கொள்ளுங்கள். இன்னும் பக்தர்கள் வரட்டும், காணிக்கை சேரட்டும். ஆண்டவனே இன்னும் கொஞ்சம் வருமானத்தைப் பெருக்கு, என்னுடைய சம்பள மும் உயரும் என்று வேண்டிக் கொள்ளுங்கள். நீர் உயர வரப்புயரும், வரப்புயர நெல் உயரும், நெல் உயரக் குடிஉயரும், குடிஉயரக் கோன்உய ரும். அதனாலே வருமானம் உயர்ந்தால், இந்த நாட்டிலே ஏழை எளிய தெய்வங்கள் எல்லாம் ஆதரவற்று அனாதைகளாக, இது இவர்கள் தப்புஅல்ல. அங்குஇருக்கிறஆலயஊழியர்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே ஆலயத் திற்குள்ளே பணிபுரிகிறவர்கள் இதய சுத்தி யோடு மக்களுக்குத் தொண்டாற்றுகிறோம் என்ற நல்ல உணர்வோடு இருக்கிறது. ஒரு நிறைவோடு பணியாற்றுங்கள். ஏதோ நம்மு டைய முருகன் கிருபையினாலே திருச்செந்தூ ரிலே நமக்கு வேலை கிடைத்தது என்று எண் ணுங்கள். சர்க்கார் ஊழியரைப்போல் இவர் களை நடத்தி இருந்தால், சர்க்கார் ஊழியரை, அதற்கும் சில விதிகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே பி.ஏ. படித்தவன் குமாஸ்தாவாகிறான். இங்கே எஸ்.எஸ்.எல்.சி ததிகனத்தம் போட்ட வரே குமஸ்தாவாக இருக்கிறார். அவனுக்கு டிரான்ஸ்பர் இருக்கிறது, ரிட்டெயர்மென்ட் இருக்கிறது, வயது வரம்பு இருக்கிறது. மற் றும் எத்தனையோ விதிகளுக்கு அப்பாற்பட்ட இடம்தான் இந்த இடம். இங்கு வந்திருக்கிற வம்பே அதுதானே. ஒவ்வொரு ஆலயங்களிலும் பெருச்சாளிகளாக அங்கே உட்கார்ந்துகொண்டு அத்தனை விவகாரங்களையும் தெரிந்த பெருச் சாளிகள் ஆலயங்களிலே இருக்கின்றனர். இந் தப் பெருச்சாளிகளை அப்புறப்படுத்த முடி யுமா என்றால், சட்டம் இல்லை என்கிறார் ஆணையர். ஏனைய்யா தூக்கிப்போட்டால் என்ன என்றால், அரசாங்கம் மாதிரி சம்பளம் கொடுக்கவேண்டும், அரசாங்கம் மாதிரி சம்ப ளம் கொடுக்க வேண்டும் என்றால், ஏதாவது உலக வங்கிக்காரன் இந்த ஆலயங்களிலே இருக் கிற ஊழியர்களுக்குச் சம்பளம் தர, கடன் தருகிறார்கள் என்றால், அப்பொழுது வேண்டு மானால் யோசிக்கலாம். ஆலயங்கள் அமைப்ப தற்கு, பாலங்கள் கட்டுவதற்கு, அணைகள் கட்டுவதற்கு, வேறு பயனுக்கு உலகவங்கியில் கடன் வாங்குகிறார்கள். ஆலயங்களிலே இருக் கிற இந்த ஒரு லட்சம் ஊழியர்களின் சம்பளத் திற்கும் கடன் வாங்க முடியுமா? தயவு செய்து பக்தர்கள் சிந்திக்கவேண்டும். ஏதோ ஐந்து, ஆறு கோவில்கள் எண்ணி, 40 லட்சம், 30 லட்சம், 20 லட்சம் என்று வருமானம் வரு கிறது. அதிலே 75 செலவாகிவிடுகிறது. ஏதோ, 10,15 லட்சத்தைக் காப்பாற்றி வைத் துக் கொண்டிருக்கிறோம். அவசரத்துக்குத் தேவையான ரிசர்வ் பண்ட், நீங்கள் செய்ய வேண்டிய பணி ஆலயத்திலே வேலை செய்கிற ஒவ்வொரு ஊழியரும் தன்னை நிர்வாக அதி காரியாக நினைத்துக் கொள்ளுங்கள். ஒவ் வொரு தூக்குகிற, கூட்டுகிற பணியாளர்களும் தங்களை ஒரு இ.ஓ.வாக நினைத்துக்கொள்ளுங் கள். வருகிற பக்தகோடிகள் ஒவ்வொருவரும் அறங்காவலர்களாக நினைத்துக் கொள்ளுங்கள். என்னெல்லாம் வைத்திருந்து அனுபவிக்கிறார் களோ, தயவு செய்து கடனைத் தாருங்கள். கண்டுபிடிக்கவே முடியவில்லை. கண்டு பிடிப்ப தற்குள்ளே நமது வாழ்நாளே முடிந்து விடுவது போல் இருக்கிறது. அதனாலேதான் பலபேர் முயன்று பார்த்துத் தோற்றிருக்கிறார்கள். பின்னர் அந்தக் கதையே நமக்குவேண்டாம் என்று ஏதோ கோவிலுக்கு வந்தால், மந்திரி கள் வந்தார்கள் என்றவுடனே பரிவட்டங்கள் கட்டி, ஒரு பெரிய பொன்னாடை போர்த்தி, மாலை போட்டு, மேள தாளத்தோடு அனுப்பி விட்டால், இதற்கு அவர்களுக்கெல்லாம் உச்சி குளிர்ந்துவிடும், போய்விடுவார்கள். இந்த மாதிரி எதையும் வாங்கமாட்டேன் என்று சொல்லிவிட்டு, இங்கே இன்றைக்கு எங்கே சொத்து இருக்கிறது, யார் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்? இந்தக் கணக்கு எவ்வ ளவு ஆகிறது, இதற்கு எவ்வளவு ஆகிறது? என்று, இப்படி கேள்வி கேட்பதனால், இந்த ஆளால் பெரிய தலையடியாக இருக்கிறது என்று இப்பொழுது கவலைப்படுகிறார்கள் அதிகாரிகள் எல்லாம். நான் எல்லோருக்கும் சொல்லிக் கொள்கிறேன். ஆலய ஊழியர்களே உங்களுடைய கோரிக்கைகள் நிச்சயமாக நியாய மானதெனக் கவனிக்கப்படும். முடிந்தால் தரப்

படும். ஆனால் நீங்கள் இரண்டுவேளை உணவு உண்ணுகிறபொழுது, அரை வேளை பட்டினி யாகக் கிடக்கிறானே ஆலய ஊழியன், அவனை நினைத்துக் கொண்டு சாப்பிடுங்கள். அதுதான் எனது வேண்டுகோள். அந்த முயற்சிக்கு நீங்கள் ஒத்துழைப்புத் தாருங்கள்.

நிச்சயமாக ஆலய சொத்துக்களை அனு பவித்துக் கொண்டிருக்கிறவர்களை, இனிமேல் இந்த அரசாங்கம் விடாது. நீங்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி, சட்டத்தின் சந்து பொந்துகளுக்குள்ளே நுழைந்து இனி மேல் தப்பிக்க முடியாது. அதற்கான சட்டம் வரும். ஆலயச் சொத்துக்கள் மீட்கப்படும். இந்த நாட்டிலே அறம் காக்கப்படும், அதற் காகத்தான் அறங்காவலர்கள், மறங்காவலர் கள் அல்ல. அப்படிப்பட்ட அறங்காவலர்கள் எங்கேயாவது தவறு செய்தால் ஒரு துளி தெரிந்தால், அந்தக் கணமே தூக்கி எறியப்படு வார்கள். குற்ற வாளியாக நிறுத்தப்படுவார் கள். அதற்குத் துணையாக எந்த அதிகாரி யாவது இருக்கிறார்கள் என்று தெரிந்தால் அவர்கள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இன்றைக்கு இருக்கிற தைரி யமே அறநிலையத்துறையில் இருக்கிற அதி காரிகளுக்கு, என்ன செய்து விடுவார்கள் என் பதுதான். இங்கேயிருந்து மாற்றினால் எங்கே போடுவார்கள் என்ற தைரியம்தான். சில விபரங்களைக் கேட்டால் இன்ஸ்பெக்டர் பதவியில் இருப்பவர்கள் மாற்றித் தருகிறார் கள். உண்மையான விபரங்கள் தருவதில்லை. போனால் கணக்குப்பிள்ளை அவன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறான், கணக்குக் கொடுப்பதில்லை, ஒரு உண்மையும் வருவதில்லை. எப்படி அய்யா பார்ப்பது, என்ன அரசாங்கம். மக்களை ஒரு பக்கம் காப்பாற்று வதா அல்லது ஆண்டவனையே காப்பாற்ற வேண்டிய நிலைமையை இந்தப் பக்தர்கள், அரசாங்கத்தின் தலையிலே கொண்டு வந்து சுமத்தலாமா? இங்கே இருக்கிற பெரியவர்கள், சிறியவர்கள் அனைவரையும் நான் அடி பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்

---

## காணும் வகையுண்டோ?

இறைவனுடைய திருவடியை, கர்மயோகம் ஞானயோகம் முதலியனவற்றால், நாம் காண முடியாது. இறைவனுடைய திருவடிகள், தாமே தம்மை நமக்குக் காட்டிக் கொடுத்தால் மட்டுமே, நாம் அவற்றைக் காண்டல் இயலும். உலகில் உபாயமும் உபேயமும் வெவ்வேறாகவே இருக்கும். இரண்டும் ஒன்றாதல் உலகில் யாண்டும் இல்லை. அதுமட்டுமல்ல. உபேயம் (பலன்) கிடைத்த அளவில், உபாயம் (பலனை அடைவதற்குரிய வழி) விடத் தக்கதாக இருக்கும். ஆனால் இறைவன் திறத்தில் அம்முறைமை இல்லை. இறைவனின் திருவடிகளே உபேயம். அவைகளே உபாயமும் ஆகும். இறைவனை அடைவதற்குப் பிரபத்தி உபாயம் என்றாலும், பிரபத்தியின் பயனாக உள்ள எம்பெருமானே, உண்மையில் உபாயம் ஆவான். இறைவனின் திருவடிகளை, அத்திருவடிகளே நமக்குக் காட்டினால்தான், அவற்றை நாம் காணும் வகையுண்டு. மற்று நாம் செய்யும் கருமத் தாலும் ஞானத்தாலும் காணும் வகையில்லை.

மந்தரமலையாகிய ஒரு மத்தினால் திருப்பாற் கடலைக் கடைந்தவனாகவும், அதன்கண் சேது அணை அமைத்தவனாகவும், முதலில் நீர் என்னும் தத்துவத்தைப் படைத்தவனாகவும், அந்த நீரிலே திருக்கண் வளர்ந்தருள்பவன் ஆகவும் உள்ள திருமாலின் திருவடிகளை, அந்தத் திருமாலின் திருவடி களே நமக்குக் காட்டித்தந்தால் அல்லாமல், நாம் நம்முடைய கருமயோகம் ஞானயோகம் முதலிய உபாயங்கள் ஆகிய, நம்முடைய முயற்சிகளால் காண்பது இயலாது.

கருமத்தால் ஞானத்தால் காணும் வகையுண்டோ?
தருமத்தால் அன்றிஇறை தாள்கள்;-ஒருமத்தால்
முந்நீர் கடைந்தான் அடைத்தான் முதல்படைத்தான்
அந்நீர் அமர்ந்தான் அடி.

—பிரமேயசாரம்.

[காணும் வகையுண்டோ? என்ற வினாவிற்கு, இல்லை என்பது கருத்து. தருமத்தால் என்றது ஒரு சொல்லன்று; தரும் அத்தால் என்று இரு சொல்லாகப் பிரிக்க. முந்நீர்-கடல்; ஆற்றுநீர், ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்றையும் தன்பாற் கொண்டது]

—ஆசிரியர்.

---

# பேதையும் மேதையுமான சீதை

''முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல்''
திரு புரிசை சு. முருகேச முதலியார், திருவண்ணாமலை

(முற்றொடர்ச்சி)

அண்ணியார் இருப்பிடத்தில் தீங்குவிளையும் என்பது, இளவலுக்கு உறுதியாகத் தெரியும். ஆனால், அத் தீங்கு அணுகா வகைக்குத் தான் அங்கு இருக்கவும் கூடவில்லை. ஏன்? தான் செல்லாமல் நிற்பின் விளையுந் தீங்கு ஒரு ஈடு இணையற்ற தீங்கு. அவர்தான் எரியில் விழப் பாய்கின்றாரே, இதைவிடத் தீங்கு என்ன வரப் போகின்றது? என்ற பெருந்துயாம் ஒருபுறம்; என்னதான் செய்வது இளவல்? பறந்து சென்று, அண்ணனைக் கூட்டி வருவதைத் தவிர வேறுவழியில்லை. மிக விரைந்தோடினார் இலக்குவனார். அவர் விரைவு, கடலில் ஓடும் கப்பலின் விரைவை ஒத்தது. அதுவும், கருங்கடலில் ஓடுங் கப்பல் போலல்ல, செங் கடலில் ஓடுங் கப்பல் போலல்ல, வெண் கடலில் ஓடுங் கப்பலை ஒத்துளது. ஆழமற்ற கடல், நடுத்தர ஆழமுள்ள கடல், அதிக ஆழமுள்ளகடல், ஆகிய மூவகைக் கடல்களிலும், வெண்கடல் ஆழங்குறைந்த அளவினதாகலானும், குறைந்த ஆழமுள்ள இடங்களிலுள்ள பாறைகள் முதலிய கப்பல்களுக்கு இடைஞ்சலான பொருள்கள், தெற்றெனத் தெரியுமாகலானும், அச்சமற்று அவசரமாக அணுக முடியும் என்பது கருதிப்போலும் ''கடலிற் செல்லுங் கலம்'' போல என்னாமல், ''தெண்திரைக் கலமென விரைந்து செல்கின்றான்'' என்று விளக்க வருகின்றனர்.

''தெண்டிரைக் கலமென விரைந்து செல்கின்றான்
புண்டரீ கத்தடங் காடுபூத்தொரு
கொண்டல்வந் திழிந்தெனக் கோலத் தான்றனைக்
கண்டனன் மனமெனக் களிக்குங் கண்ணினான்

(சடாயு. உயிர் 149)

அண்ணனின் செங்கமலக் காடனைய திருமேனிக்குத் தீங்குவராமல் காக்கவும், பூசித்துப் போற்றவுமே தோன்றித் துணைநின்றுவரும் தூய தம்பிகளில், வாய்ப்பில் மிகுந்த இந்தத் தம்பி, எக்காலமும் உடனிருக்கும்தான் அவன் என்றுங் காணாக் காட்சியை இன்று கண்டனன் என்கின்றார் கம்பர். அவர் ''மனமெனக் களிக்குங் கண்ணினான்'' என்கின்றார். மனம் அறிவுப்பொருள், கண் கருவிப்பொருள். அறிவு தானே இன்பதுன்பங்களை அநுபவிக்கும், கருவி அறிவுடையாரியக்கினன்றிச் செயல்படவும் முடியாது, சிந்திக்கவும் முடியாதெனின் அதற்கொரு இன்பந்தான் ஏது? என்ற ஐயத்திற்கு இங்கே இடம் வருகின்றது.

இங்கே மற்றொருவனும், மற்றொரு பொருளைப் பார்த்துக் கண் களிக்கின்றனன். அவன் யார்? இராவணன். இங்கே கடுவேகத்தோடு சென்று, கமலக் கண்ணனாகிய அண்ணனை இளவல்காணும் நேரத்தில், பதுங்கிப் பதுங்கி, ஒதுங்கி ஒதுங்கிச் சென்று, இராவணனும் சீதையார் வெளிஅழகைக் காண்கின்றான். ''ஓங்கிய அழகினாள் உருவைக் காண்டலும் அவஞ் மனமெனக் களித்தது கண்ணின் மாலை'' என்பர் கம்பர். இலக்குவனார் அண்ணல் கோலத்தை மாத்திரம் காணவில்லை. அக்கோல முடையாளையுங் காண்கின்றனர். அவர் ''கொண்டல்வந்திழிதரு கோல மல்ல, கோலத்தான் தனைக் கண்டனர்.'' இவன் கோலத்தை மாத்திரந்தான் காண்கின்றான், கோலமுடையாளைக் காணவில்லை. மற்றும் ஓரிடத்தில், சானகியாரை இராவணன் அணுகுந்தோறும் எப்படிக் காண்கின்றனன் என்பதனைத் தெற்றெனத் தெரிவிக்கின்றார் கம்பர்.

''பண்களால் கிளவி செய்து
பவளத்தை அதர மாக்கிப்
பெண்கள் ஆனார்க்குள் நல்ல
உறுப்பெலாம் பெய்து நீண்ட
எண்களால் அளவா மானக்
குணம்தொகுத்து இயற்றி னாளைக்
கண்களால் அரக்கன் கண்டான்
அவளையோர் கலக்கங் காண்பான்''

மானம் ஒருவர் உள்ளத்துள்ள பொருள். அதில் ஈடுஇணையற்ற பெருமானம் உடையவர் சானகியார். அது கருத்தால் காணும் பொருள். கருத்தினால் அறியத்தக்க ஒன்றினைக் கண்ணினால் அறிய முடியாது. இவன் அன்று அவரது உள்ளத்திற்கு ஊறு செய்யத் திட்டமிட்டு வருகின்றான். தான் துன்புறுத்தக் கருதும் சானகியார் உள்ளத்தின் நிலையை உற்று நோக்கித் தன் முயற்சி செல்லுமா செல்லாதா என்பதனை அறிய வேண்டும். அவன் இயல்பலாதன செய்ததனால் ஈடழிந்தான் என்பதர், ''கண்களால் கண்டான்''. அவன் ஒரு இரக்கனல்ல ''அரக்கன்''. ஆதலால் என்படுவான் இடர்பட்டான்.